டிசம்பர் 1956, சென்னை விலை 6 அணா

Best copy available

வெளி வந்துவிட்டது !

திரு குர்ஆன்
நாட்குறிப்பு - 1957

[முஸ்லிம் முரசு பாக்கெட் டயரி]

★

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆகிய மூன்று தேதிகளும், இஸ்லாத்தின் முக்கிய கொள்கைகளும், கோட்பாடுகளும், தபால், தந்தி கட்டண விபரங்களும் இருக்கின்றன.

திரு குர்ஆனிலிருந்து பொறுக்கி எடுக்கப் பெற்ற பொன்மொழிகள், அரசியல் சமூக வாரிசு உரிமைச் சட்டங்கள், ஒழுக்க விதிகள் எல்லாம் எளிதில் விளங்குமாறு இதன் ஒவ்வொரு தேதியிலும் தரப்பட்டுள்ளன.

★

முஸ்லிம்களின் தினசரி தொழுகைக்குத் தேவையான சிறு சிறு குர்ஆன் சூராக்களும் தமிழிலேயே சேர்க்கப் பெற்றுள்ளன.

ஒவ்வொரு இஸ்லாமிய ஆண் பெண் கையிலும் இருக்கத்தகுந்த இணையற்ற டயரி-முஸ்லிம் முரசு வெளியீடு.

★

கெட்டியான அட்டை, கலிக்கோ பைண்டு

விலை ரூ. 1—4—0 தபால் செலவு தனி

ரிஜிஸ்தர் தபாலில் பெற விரும்புவோர்
1-14-0 முன் பணம் அனுப்ப வேண்டும்
வியாபாரிகளுக்கு 20 சதவீதம் கமிஷன் உண்டு.

★

அன்பு நூல் நிலையம்

18, ராமசாமி தெரு, சென்னை-1.

அன்பும் இன்பமும் அறிவும் ஆற்றலும்
பண்பும் புகழும் இனிது விளங்க முரசு முழங்கவே!

லர் 9 | சென்னை, டிசம்பர் 1956
ஹிஜ்ரீ 1376, ஜமாதுல் அவ்வல் | இதழ் 6

ரியலூர்ப் பரிதாபம்!		தலையங்கம்	... 5
ரசொலி			... 8
றுந்து வரும் அன்புப் பிணைப்பு		"மீரா"	... 13
ஸ்லாமியக் காதைகள்			... 17
சாலைக் குயில்கள்	(சிறு கதை)	எம். கே. ஜமான்	... 22
பொற்கொடியாள் நிலையென்ன?	(கவிதை)		... 26
ான் அறிந்த இஸ்லாம்		எஸ். சுந்தரமூர்த்தி	... 28
சரமான் பெருமாள்		"மஹதி"	... 33
ன்னுயிர் அன்னையே!	(கவிதை)	கவிக்குஜ் ஜமான்	... 36
து வாழ்வு	(தொடர் கதை)	'எஸ்கேஜி'	... 40
மியா-யெ-ஸஆதத்		அ. அப்துர் ரஹீம்	... 47
ருமணம்	(சிறுகதை)	காலீபா மீரான்	... 51
ன்ஜுஹ்வின் கடைசி நாட்கள்-2			... [illegible]
கள்வி—பதில்		'கமால்"	... 62

முஸ்லிம் முரசில் வரும் கதைகளும் அவைகளிலுள்ள பெயர்களும் யாரையும் குறிப்பிடுவனவல்ல; எல்லாம் கற்பனை!

சந்தாவுக்கு எழுதும் பாரம்

இந்த பாரத்தைப் பூர்த்தி செய்து, கத்தரித்து, இதன் வலது பக்கத்திலுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் உங்களுக்குத் தவறுமல் முஸ்லிம் முரசு கிடைக்கும்.

மானேஜர்,
முஸ்லிம் முரசு
18, ராமசாமி தெரு,
சென்னை-1.

நான் இன்று ஒரு வருட சந்தா ரூ. 4—8—0 (அயல் நாடு ஒரு வருடம் ரூ. 6. இரண்டு வருடம் ரூ. 11) மணி ஆர்டரில், அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியிருக்கின்றேன்.

பெயர்...

விலாசம்..

அன்புள்ள ஆசிரியருக்கு

"மீலாத் மலரில் வெளியான நோயும் விட்டகலும்" என்ற கதை என் இதயத்தைக் கவர்ந்து விட்டது. இதை எழுதிய எம். முஹம்மது கவுஸ் அவர்களைப் பாராட்டுகிறேன்.

ஏ. எம். ஏ. காதிர், கொழும்பு.

நவம்பர் இதழில் இஸ்லாமியக் காதைகளின் வரிசையில் வந்த கட்டுரைகளும், "நாயகமே" தந்த பேராசிரியர் கா. அப்துல் கபூர் அவர்கள் தொகுத்தளித்த "தாயகக் கவிதையில் நாயகத் திருமேனியும்" ஈழக வாழ் இஸ்லாமியப் பெருங்குடி மக்களின் இதயங்களை ஈர்த்துள்ளன. முரசு வாழ்க! வளர்க!!

எம். ஐ. எல். எம். தாஜுத்தீன்,
மாபோலை இலங்கை.

திருகுர்ஆன் உரைக்கு விளக்கமாக நவம்பர் இதழில் வெளியான இஸ்லாமிய காதை நம் சமுதாயத்தைத் தட்டியெழுப்புகிறது. "நூர்" அவர்களுக்கு என் ஸலாம்.

அ. அப்துல் காதர், ஊட்டி.

நவம்பர் இதழில் "பெண் புத்தி" என்னும் சிறுகதையினால் பேராசையின் விளைவும். இ. ஜி. முஹையித்தீன் அவர்களின் கட்டுரையினால் இப்ராஹீம் நபி அவர்களின் வரலாறும் அறிந்து மகிழ்ந்தேன், இவை போன்ற கதை கட்டுரைகள் ஒவ்வொரு இதழிலும் இடம் பெற வேண்டும்.

எம். ஏ. எம் ரூஹுல்லா,
மஹரகம், இலங்கை.

'அறுந்து வரும் அன்புப் பிணைப்பு' என்ற அரசியல் கட்டுரை ஒன்று இத்துடன் வருகிறது. சென்ற சில வருடங்களாக அரசியலில் அடங்கி ஒடுங்கிவிட்ட தென்னகத்து முஸ்லிம்கள், அல்லது ஓய்வு பெற்றுக்கொண்ட இந்திய முஸ்லிம்கள், தங்களது பாசத்தையும் பற்றையும் கட்டுப்படுத்தி ஒழுங்காகச் செலுத்த அக்கட்டுரை உதவும் என்று நம்புகிறேன். இசைந்தால் பிரசுரியுங்கள். கருத்து வேற்றுமை யுண்டானால் தெரிவியுங்கள். இந்திய முஸ்லிம்கள் அவர்களின் பிற்கால வாழ்வை வகுக்கச் சொந்தமாகச் சிந்திக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

எஸ். எம். மீரா, பத்தமடை.

மீலாத் மலர் என் உள்ளத்தில் உவகை யூட்டுகிறது.

உ. அப்துற்-றஹீம். முன்றூ.

"ஜேயெம்" எழுதிய மூடிய கதவு போன்ற புதுமைக் கதைகளை வரவேற்கின்றேன்.

புன்னகை, குடந்தை.

மலரில் வந்த "அல்லாஹ்வின் தூதர் அருளிய அறிவுரைகள்" என்ற பகுதியை எனது ஹிந்து தோழர்களுக்கெல்லாம் படித்துக் காட்டி நபிகள் பெருமானாரின் பெருமையை உணரச் செய்தேன்.

எம். கமாலுத்தீன், கும்பகோணம்.

முஸ்லிம்களைத் தட்டி யெழுப்பும் சீர்திருத்த கதைகள், கவிதைகள் முரசில் இடம் பெறுவதைப் பாராட்டுகிறேன்.

டி. ஏ. அப்துல் ஸலாம், ரேளங்கி
ஆந்திரா.

மீலாத் மலரில் பிரசுரமாகியுள்ள பதினாறு முஸ்லிம் நாடுகளின் உலகப் படமும், ஜனத் தொகை விபரமும் மிகப் பயனுள்ளதாக இருக்கின்றன.

பி. ஜீனத் பேகம், மதராஸ்-1.

மூடிய கதவு—இக் கதையை இரண்டு முறை படித்தேன். இது போன்ற சிறு கதைகளை ஆவ

டன் எதிர்பார்க்கிறேன்.

எஸ். எஸ். அப்துல் ரஹ்மான்,
எர்ரகுண்ட பாலம், கர்னூல்.

"மறக்கவில்லை மனை விளக்கே" என்ற கவிதையை உண்மையில் மறப்பதற்கில்லை!

எம்.எஸ். காஜா முஈனுத்தீன், நீடூர்.

நவம்பர் இதழில் "பெண் புத்தி" "தாயகக் கவிதையில் நாயகத் திரு மேனி" "பக்தியும் பகுத்தறிவும்" இவை மூன்றும் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

வி. எம் ஏ. முஹம்மதலீ,
இலுப்பூர்.

தற்கால முஸ்லிம்களின் நிலைமைக்குத் தக்கவாறு உணர்ச்சி யூட்டும் கட்டுரைகளை முரசொலித்துக் கொண்டிருக்கிறது முரசின் ஒவ்வொரு இதழும்.

கே. முஹம்மது ஹுஸைன்,
மேட்டுப்பாளையம்.

"மூடிய கதவைப்" பலமுறை படித்தேன்.

ஆ மு கிஜர் முகம்மது, ஆனைமலை

உலக மதத் தலைவர் உதய விழா (தலையங்கம்), திருநபி தினப் பாட்டு, மற்றும் பல கட்டுரைகளும் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

எஸ். கே. அப்துஸ்ஸமது,
குரோம்பேட்டை.

அட்டைப் படம்—நாயகத் திரு மேனி அடக்கமாகியுள்ள கட்டிடமும், திருநபி பள்ளிவாயிலின் தோற்றமும் கண்டு களிப் படைந்தேன்.

எம். எஸ் எம் நாஸிம் பாச்சா
வேருவலை; சிலோன்.

மீலாத் மலர் ஒரு நறுமணங் கமழும் கதம்ப மாலையாக அமைந்து விட்டது.

எம் ஸி.எம் ஜுபைர், கொழும்பு.

சிறந்த உயர்ந்த பல விஷயங்களை எங்களுக்கு உணர்த்திவரும் உங் கட்கும், முகமறியா நண்பர்களான ஜேயெம், எஸ். சுந்தரமூர்த்தி, மஹதி, மல்லாரி, இ. ஜீ. முஹ்யித்தீன், சம்பந்தம் மற்றும் பல முரசு எழுத்தாளர்களுக்கும் எனது நன்றி.

என். இ. ஹமீது சுல்தான்,
அலோர் ஸ்டார், மலேயா.

முஸ்லிம் முரசை அதன் துவக்க காலத்திலிருந்து படித்து வருகின்றேன். இதழுக்கு இதழ் கட்டுரைகளும் கதைகளும் சிறப்புற்று விளங்குகின்றன. தொடர்கதையாக வரும் புது வாழ்வு உண்மை முஸ்லிமின் உள்ளத்தைப் பரிசோதிக்கும் சித்திரமாகத் தெரிகிறது. நீங்கள் எழுதிவரும் தலையங்கங்கள் சில சமயம் வரும்பொருள் உரைப்பதாக இருப்பதைக் காண்கிறேன். முரசின் பத்தாம் ஆண்டிலே பெரிய அளவில் சிறப்பு மலர் ஒன்று வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

க. ச. தி. ஜமால்தீன்.
சேரன் மகாதேவி.

இமாம் அல்-கஸ்ஸாலி அவர்களின் கீமியாயெ ஸஆதத்தைத் தொடர்ந்து படித்து வருகிறேன். மனிதர்களை உயர்ந்த ஒழுக்க நிலைக்கு உயர்த்தக்கூடிய அறிவுக் களஞ்சியமாக அது இருக்கிறதென் பதில் ஐயமில்லை.

பி. எம். டி. முஹம்மது சித்தீக்.
கொல்லப்பட்டி.

நவம்பர் இதழில் 'நூர்' அண்ணு அவர்கள் எழுதியுள்ள இஸ்லாமிய காதை, உறங்கிக் கிடக்கும் முஸ்லிம்களைத் தட்டியெழுப்பி உணர்ச்சி பெறச் செய்கிறது. கண்பர் சம்பந்தம் எழுதிய பெண் புத்தி—சிறு கதையைப் பாராட்டுகிறேன்.

எம். எஸ். முஹம்மது அலியார்,
அம்மாபட்டினம்.

அக்டோபர் இதழில் அல்லாஹ்வின் தூதர் அருளிய அறிவுரைகளைப் படித்தேன். இருண்டு கிடக்கும் மனையில் திடீரென ஒளி பரவியது போலாகியது என் உள்ளம்.

எ எம். முஹம்மது. ஆல்வாய்.

பிழை திருத்தம்

இந்த இதழில் கேள்வி-பதில் கடைசிப் பக்கம் கடைசிக் கேள்விக் குரிய பதிலில் "திருமணம்" என்று அச்சாகி யிருப்பது தவறு. "தருணம்" என்று திருத்திக் கொள்ளவும்—ஆசிரியர்.

வெளி வந்துவிட்டது !

மாநபியின் மணிமொழிகள்

★ நபிகள் நாயகத்தின் 400 பொன் மொழிகள்,

★ வாழ்க்கைச் சுருக்கம்,

★ அன்றாட வாழ்க்கையின் அழகிய சொல்லோவியம்.

இந்த மூன்று அம்சங்களும் சேர்ந்த இந்நூல் ஒவ்வொருவர் இல்லத்திலும், நூல் நிலையத்திலும் இருக்கத் தகுந்தது. பக்கம் 100.

நான்கு வண்ண அட்டைப் படம்

விலை ரூ. 1—8—0 தபால் செலவு தனி.

அன்பு நூல் நிலையம்,

18, ராமசாமி தெரு, சென்னை—1





விமானம் அல்லது கப்பல் பிரயாணத்துக்கு வேண்டிய டிக்கட்டுகளை எங்கள்மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்.

சுபேதார் அன் சன்ஸ்,

பிரயாண ஏஜண்டுகள், பம்பாயிலும் சென்னையிலும் லைசென்ஸ் பெற்ற டிக்கட் புரோக்கர்கள்.

சென்னை ஏஜெண்ட் :

Hafez abdur Rashid M. Khan, 7, Francis Joseph Street,
(Near Y M. C. A.—G. T.) MADRAS—1.
Telephone: Avl: 4694.

கவனிக்க : பாஸ்போர்ட், விஸா, ஹெல்த் இன்கம்டாக்ஸ் சர்டிபிகேட் முதலியவைகளைப் பெறவும் உதவி செய்வோம்.

முஸ்லிம் முரசு

அரியலூர்ப் பரிதாபம்!

நவம்பர் 23-ந் தேதி. வெள்ளிக்கிழமை. அதிகாலை 5 மணி.

சென்னை எழும்பூரிலிருந்து முன்னிரவு புறப்பட்ட தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் அரியலூர் ரயில் நிலையத்தைத் தாண்டிக் கொண்டிருக்கிறது. சில நிமிட நேரத்தில், பதினொரு பெட்டிகளைக் கொண்ட அந்தப் பெரிய ரயில் வண்டித் தொடர் ஒரு ஆற்றுப் பாலத்தைக் கடக்கப்போகின்றது. பாலத்தின் மீது எஞ்ஜின் பாய்ந்தோடுகின்றது. எஞ்சின் எதிர்க்கரையை எட்டிப்பிடிக்க இன்னும் ஒரே விநாடிதான். 'தட தட'வென்ற சப்தம்! அதைத் தொடர்ந்து ஒரே பேரிரைச்சல்! அடுத்து, சில நிமிட நேரத்தில் ஒரே பிணக்காடு! பார்க்கப் பரிதாபமான காட்சி!

மின் வெட்டும் நேரத்தில் என்ன நடந்ததென்று யாராலும் வருணிக்க முடியவில்லை. ஒரே நிமிடத்தில் எத்தனை ஆடவர் பெண்டிர், குழந்தைகளின் உயிர்கள் உடலை விட்டுப் பிரிந்தனவென்று யாருக்கும் தெரியாது— ஆண்டவன் ஒருவனைத் தவிர!

மனிதர்கள் ஈசல்களைப்போல் செத்து மடிந்திருக்கின்றனர்! அணுக்குண்டின் அபாயங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அதன் கொடுமையை நேரில் காண நமக்கு வாய்ப்புக் கிடைத்ததில்லை. அது இதைப் போல்தான் இருக்குமோ என்று நினைக்கும்படியாக இருக்கிறது அரியலூருக்கு அருகில் நடந்த ரயில் விபத்து! ஒரே விநாடியில். 150 பேர்கள் உயிரிழந்திருக்கின்றனர். பல நூறு பேர்களுக்குப் படுகாயம் ஏற்பட்டிருக்கிறது. அடியின் வேகத்தால் அடையாளமே தெரியாதபடி ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் குமரர்களும், வாலிபர்களும் வயோதிகர்களும் உருமாறிக் கிடக்கின்றனர்! ஆற்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்ட ஆடவர் பெண்டிர் குழந்தைகள் எத்தனைப்பேர் என்று இன்னமும் தெரியவில்லை! சுமார் அறுபது பேர்களின் சடலங்கள் உற்றார் உறவினரால் அடை

யாளம் கண்டுபிடிக்கப்படாமலே அரியலூர் மண்ணில் அடக்கம் செய்யப்பட்டு விட்டன! ஊரும் பெயரும் தெரியாமல் மண்ணோடு மண்ணாக மறைந்து விட்ட இவர்களின் பிரிவாற்றாமல் கதறியழும் பெற்றோர்கள் எத்தனைப் பேர்களோ! கண்ணீரிலே மிதக்கும் கணவன் மனைவிகள் எத்தனை எத்தனையோ! தாய் தந்தைகளை இழந்து அனாதைகளாகிவிட்ட அருமைக் குழந்தைகள் எத்தனையோ! இதனை எண்ணும்போதெல்லாம் கண்ணீர்ப் பெருகுகின்றது. அருமைக்குழந்தைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களின் இதயம் எப்படித் துடிக்குமோ! ஆருயிர்க் கணவர்களை இழந்த மனைவிகளின் மனம் என்ன பாடு படுமோ! இவர்களுக்கெல்லாம் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். உயிரிழந்தவர்களின் உற்றார், உறவினர்களுக்கும், அடிபட்டு உயிர் தப்பியவர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாலும், ரயில்வே மந்திரி லால் பகதூர் சாஸ்திரி தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டதாலும் நஷ்டமடைந்தவர்கள் தங்களின் துயரத்தை மறந்துவிடப் போவதில்லை. காலந்தான் அவர்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். இவர்கள் தங்களின் துன்பத்தையும் துயரத்தையும் தாங்கிக்கொள்ளத் தக்க தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் ஆண்டவன் அளிப்பானாக!

அரியலூர்ப் பரிதாபத்துக்கு ரயில்வே நிர்வாகந்தான் பொறுப்பு என்பதில் ஐயமில்லை. ரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரியின் ராஜிநாமாவே இதற்குச் சான்று. "அரியலூரில் நடந்தது ஆண்டவன் செயல்" என்று சொல்லிக் கொண்டு பதவியில் ஒட்டிக்கொண்டிருந்துவிடாமல், "வேதனைப்படுகிறேன், வெட்கப்படுகிறேன். துக்கப்படுகிறேன்" என்று சொல்லுவதற்கு அறிகுறியாக ரயில்வே மந்திரி தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

கடந்த இரண்டரை மாதக் காலத்தில் தென்னிந்தியாவிலே இரண்டு பயங்கரமான ரயில் விபத்துக்கள் நடந்திருக்கின்றன. ஏறத்தாழ எண்பது நாட்களுக்கு முன்புதான் ஹைதராபாத்திலே மஹ்பூப் நகரில் ஒரு ரயில் விபத்து நடந்தது. அதில் 130 பேர்கள் உயிரிழந்தனர்!

அரியலூர், மஹ்பூப் நகர்-இந்த இரண்டு ரயில் விபத்துக்களும் ஏறத் தாழ ஒரே விதமான சூழ்நிலையில்—கடுமையான மழை பெய்து, காட்டாற்று வெள்ளம் பெருகி, ரயில் பாலங்களுக்குச் சேதம் விளைந்து—நடந்திருக்கின்றன.

இத்தகைய விபத்துக்களுக்கு மஹ்பூப் நகர் ஒரு முன்னெச்சரிக்கையாக இருந்தும், ரயில்வே அதிகாரிகள் கண் விழித்துக் கொள்ளவில்லை என்பது கண்டனத்துக்குரியது; கண்ணீர் உகுக்கத் தக்கது.

மஹ்பூப் நகர் ரயில் விபத்தின்போதே ரயில்வே மந்திரி ராஜிநாமா செய்ய விரும்பினார் என்று நேருஜி கூறுகின்றார். இது உண்மையாயிருப்பின் அரியலூரில் மற்றொரு மஹ்பூப் நகர் நிகழ்ந்திருக்கவே கூடாது. மந்திரியே தமது பதவியை ராஜிநாமா செய்யத் துணிந்திடும் அளவிற்கு ரயில்வே நிர்வாகிகளை மஹ்பூப் நகர் விழிப்புறச் செய்திருந்தால், ஏறத் தாழ அதைப் போன்ற—இல்லை, அதைவிட பயங்கரமான ரயில் விபத்து ஒன்று அரியலூரில் நடக்காமல் தடுத்திருக்கலாம். ஆனால் மஹ்பூப் நகர் ரயில் விபத்தின் விசாரணை அறிக்கை கூட இன்னும் வெளியாகவில்லை என்பது எதைக் காட்டுகிறது? ரயில்வே போர்டின் தூங்கு மூஞ்சித்தனத்தைத்தான் என்பதில் சந்தேகமில்லை.

புதியதும் பழையதும்

பத்திரிகைகள் புத்தகங்கள் படிக்கும் பழக்கம் உங்களிடமிருந்தால் இதிலுள்ள 13 கேள்விகளுக்கும் சரியான பதில் கூறி விடலாம். 8 கேள்விகளுக்கு மட்டுமாவது சரியான விடை எழுத முடியுமானால் பத்திரிகை, புத்தகம் படிக்கும் நல்ல பழக்கம் உங்களிடம் உண்டு என்று அர்த்தம். விடைகளின் பக்கத்தைப் பார்க்காமல் உங்கள் பதில்களை முதலில் எழுதுங்கள்.

1. பக்தாத் உடன்படிக்கையைச் சேர்ந்த நாடுகள் எவை?

2. ராஜ்ய எல்லைகள் திருத்தியமைக்கப் பெற்ற பிறகு இந்தியாவில் மிகப் பெரிய ராஜ்யம் எது?

3. மேஜர் ஜெனரல் இ எல். எம். பர்ன்ஸ்—இவர் பெயர் அநேகமாக ஒவ்வொரு நாளும் இப்போது தினப் பத்திரிகைகளில் வருகின்றது. இவர் யார்?

4. ரஷ்ய நாட்டு நாணயத்தின் பெயர் என்ன?

5. மூன்று நாடுகளில் அணு ஆயுதங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த நாடுகள் எவை?

6. அமெரிக்காவில் உள்ள இரண்டு பெரிய அரசியல் கட்சிகளின் பெயர்கள் யாவை?

7. சமீபத்தில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஐஸன்ஹோவரை எதிர்த்துத் தோல்வியடைந்தவர் பெயர் என்ன?

8 ஐஸன்ஹோவர் எந்த அரசியல் கட்சியின் சார்பாகத் தேர்தலில் நின்றார்?

9. செங்கடலில் உள்ள கப்பல் துறைமுகங்களில் எதற்கு இராணி என்ற பெயர் வழங்குகின்றது?

10 அரேபியாவில் சூரியன் மறையும்போது எத்தனை மணி அடிக்கும்?

11. ஸவூதி அரேபிய மன்னருடைய அரண்மனையின் பெயர் என்ன?

12. கிரிக்கெட் ஆட்டத்தில் உலகப் புகழ் பெற்ற நாடு எது?

13. மிக அதிகமான உலக மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்ற நூல்கள் மூன்று. அவைகளின் பெயர்கள் யாவை?

விடைகள் 9-ம் பக்கம் பார்க்க

ங்களின் நெடுநாள் விருப்பத்தை நிறைவேற்ற

பரீதா

ாவா பத்தை கைலிகள்

கண்கவர் வர்ண கலர்களில்

இப்பொழுது கிடைக்கிறது

பரீதா ஜாவாபத்தை பேப்ரிக்,

சாங்கரம்பந்தல் (தஞ்சை ஜில்லா)

ஈடனின் ஏமாற்றம்!

முட்டாள்களில் மூன்று விதம் உண்டு: படிக்காத முட்டாள்: படித்த முட்டாள்; தன் புத்தியும் சொல் புத்தியும் இல்லாத முட்டாள். இந்த மூன்று வகையான முட்டாள்களில் மூன்றாந் தரத்தைச் சேர்ந்தவர் தான் பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன் என்பதில் ஐயமில்லை.

“எகிப்தின் மீது போர் தொடுக்க வேண்டாம். அதனால் பெரிய விபரீதமெல்லாம் விளையும். பிரிட்டிஷ்—அமெரிக்க உறவுக்குக் கேடு வரும். எண்ணெய்க்கும் பெட்ரோலுக்கும் பஞ்சம் ஏற்படும். மத்தியக் கிழக்கில் ரஷ்யாவின் செல்வாக்குப் பரவ வழியுண்டாகி விடும்” என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் மூன்று மாதங்களுக்கு முன்பே ஈடனை எச்சரித்திருக்கின்றன. முக்கியமாக, “மான்செஸ்டர் கார்டியன் எனும்” பிரிட்டிஷ் பத்திரிகை பின்வருமாறு தனது தலையங்கத்தில் எழுதியிருந்தது. அதனை நாமும் நமது செப்டம்பர் இதழின் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம். மேற்படி தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:

∴ ∴ ∴

“பிரிட்டன் எகிப்தின் மீது போர் தொடுப்பதால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றி ‘மான்செஸ்டர் கார்டியன்’ பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பின்வருமாறு எச்சரிக்கின்றது.

“சுருக்கமாகக் கூறுவதாயின் இந்த அரசாங்கத்தின் கொள்கையால் எத்தனை நஷ்டங்கள் உண்டாகும் தெரியுமா? நம்முடைய அமெரிக்க உறவுக்கு அபாயம் விளையும் காமன்வெல்த் ஒற்றுமை குலைந்து போகும்; அநேக பிரிட்டிஷ் எகிப்திய மக்களின் உயிர்கள் பலியாகும்; பிரிட்டிஷ் பிரெஞ்சுப் பொருளாதாரம் சிதறுண்டு போகும். அல்லது ஐக்கிய நாடு மன்றத்துக்கு ஒரு முடிவு ஏற்பட்டு விடும். எண்ணெய் கிடைக்காது. ரஷ்யாவுக்கு மத்தியக் கிழக்கின் கதவு திறக்கப்பட்டுவிடும். இவ்விதமாக சர் அந்தோனி ஈடன் உண்மையிலேயே பிரிட்டனை மிகப் பெரிய தேசமாக்கி விடுவார்!” என்று ‘மான்செஸ்டர் கார்டியன்” எனும் பிரிட்டிஷ் பத்திரிகை எச்சரிக்கின்றது.

“உலக அரசியலில் முன்னோக்கும் நுண்ணறிவும் உடையவர்கள மான்செஸ்டர் கார்டியனின் கூற்று முற்றும் உண்மை என்பதை ஒப்புக் கொள்ளுவார்கள்.

“பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்கங்களின் அறியாமையாலும், தவறான செயல்களாலும் அபாய நேரம் அதிக வேகமாய் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. துப்பாக்கியைக் காட்டியோ, அல்லது பலாத்காரமாகப் பிடுங்கிக் கொண்டோ சூயெஸ் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. நிதான புத்தியே நமக்குத் தேவை” என்று லண்டன் ‘டெய்லி ஹெரால்டு’ தலையங்கம் எழுதியிருக்கின்றது.”

∴ ∴ ∴

“மான்செஸ்டர் கார்டியன்.” மூன்று மாதங்களுக்கு முன் எழுதியதெல்லாம் இன்று உண்மையாகி விட்டன. அமெரிக்க-பிரிட்டிஷ் அரசியல் உறவில் ஒரு பெரிய பிளவு ஏற்பட்டு விட்டது. இதனால் பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் வேதனைப் படுகின்றனர்; வெட்

கப் படுகின்றனர்; துக்கப் படுகின்றனர்; பிரிட்டிஷ் பிரெஞ்சுப் பொருளாதாரம் சிதறுண்டு போய்க் கொண்டிருக்கிறது. பிரிட்டன் மட்டுமின்றி மேற்கு ஐரோப்பா முழுவதுமே எண்ணெயும் பெட்ரோலும் கிடைக்காமல் திண்டாடுகின்றது. ரஷ்யாவுக்கு மத்தியக் கிழக்கில் முன்னைவிட அதிக மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டு விட்டது.

மூன்று மாதங்களுக்கு முன்பு "மான்செஸ்டர் கார்டியன்" எழுதியது இன்று முற்றும் சரியாக நடந்து விட்டது.

சென்ற மாதம் ஒரு நாள் பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன் திடீரெனப் புறப்பட்டு ஜமய்க்காவுக்குச் சென்று, அங்கே ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகிறார் என்ற செய்தி வெளியாயிற்று. ஓய்வில்லாத அதிக உழைப்பினால் ஈடனுக்கு மூளைத் தளர்ச்சியும், உடற் சோர்வும் ஏற்பட்டு விட்டதென்று சொல்லப் படுகிறது. பிரிட்டனின் சரித்திரத்திலேயே மிகவும் நெருக்கடியான இக்கட்டத்தில் இத்தகைய நாடகங்கள் நடிப்பதற்குப் பிரிட்டிஷ்காரர்களைத் தவிர வேறு யாராலும் இயலாது!

அமெரிக்காவுடன் அறுந்து போன அரசியல் உறவை மீண்டும் ஒட்டவைப்பதற்கு ஈடனை அரசியல் துறவு கொள்ளச் செய்வதைத் தவிர பிரிட்டிஷ் டோரிகளுக்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. அமெரிக்காவின் இழந்த காதலை மீண்டும் பெறுவதற்காக ஈடன் செய்த தியாகம் இணையற்றது தான். ஆயினும் அமெரிக்காவின் அதிபர் ஐஸன்ஹோவர் ஏமாந்து விடவில்லை. எகிப்திலுள்ள பிரிட்டிஷ் பிரெஞ்சு ஆக்கிரமிப்புப் படைகள் சூயஸ் கால்வாயின் சயீது துறை முகத்தைக் காலி செய்து வெளியேறினால் தான், மேற்கு ஐரோப்பாவுக்கு அமெரிக்காவிலிருந்து எண்ணெய் உதவி

புதியதும் பழையதும்

★

1. பாக்கிஸ்தான், துருக்கி, ஈராக், ஈரான், பிரிட்டன்
2. பம்பாய்.
3. எகிப்துக்குச் சென்றுள்ள ஐக்கிய நாடு பாதுகாப்புப் படைக்குத் தலைமை தாங்கும் கனடா தேசத் தளபதி.
4. ரூபிள்.
5. அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா.
6. 1. டெமாக்கிரட்டிக்கட்சி 2. ரிப்பப்ளிகன் கட்சி.
7. அட்லாய் ஸ்டீவன்ஸன்.
8. ரிப்பப்ளிகன் கட்சி.
9. ஜித்தா.
10. பன்னிரண்டு.
11. அல்ஹம்ரா.
12. ஆஸ்திரேலியா.
13. குர்ஆன், பைபிள், குறள்.

அளிக்க முடியும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். இதன் விளைவாகவே எகிப்திலிருந்து பிரிட்டிஷ் பிரெஞ்சுப்படைகளை இந்த டிஸம்பர் 20க் தேதிக்குள் திருப்பி யழைத்துக்கொள்வதென்று பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்க அதிபர்கள் முடிவு செய்திருக்கின்றனர். இதைப் போன்ற இழிவும் அவமானமும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இதற்கு முன்பு எந்தக் காலத்திலும் ஏற்பட்டிருக்க முடியாது. ஈடன் செய்த காரியத்தினால் தான் பிரிட்டனுக்கு இத்துணை இழிவும் பழியும் ஏற்பட்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலையில் அந்தோனி ஈடன் இங்கிலாந்திலே எப்படி நிம்மதியாக வாழ முடியும்? எனவே தான் முன் ஜாக்கிரதையாக

ஜமய்க்காவுக்குப் புறப்பட்டு விட்டார். எனவே, இடைவிடாத உழைப்பினல் ஈடனுக்கு உடற் சோர்வும், மூளைத் தளர்ச்சியும் ஏற்பட்டு விட்டதால் அவர் ஓய்வு எடுத்துக் கொள்ள ஜமய்க்காவுக்குப் போயிருக்கிருர் என்பது உலகத்தை ஏய்க்கும் தந்திரமே யன்றி வேறில்லை.

"எகிப்திலிருந்து தங்கள் படைகளை வாபஸ் பெறவே முடியாது" என்று நேற்று வரையில் ஜம்பம் பேசிய பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்க அதிபர்கள் இன்று எல்லாப் படைகளையும் வாபஸ் பெறப் போகிறோம்" என்று அறிவிக்கின்றனர்! முன்பே ஐக்கிய நாடு மன்றத்தின் ஆணைக்கு இணங்க எகிப்திலிருந்து இவர்கள் தங்களின் படைகளை வாபஸ் பெற்றுக் கொண்டிருந்தால் எவ்வளவோ கண்ணியமாக இருந்திருக்கும் சென்ற மாதம் ரஷ்யப் பிரதமர் புல்கானின் அனுப்பிய பயமுறுத்தல் கடிதத்துக்குப் பணிந்து எகிப்தில் தங்கள் ஆக்கிரமிப்புப் போரை நிறுத்தினர்கள். ஆனல் இப்பொழுதோ அமெரிக்காவின் எண்ணெயைப் பெறுவதற்காக ஐஸன்ஹோவரின் நிபந்தனைக்குப் பணிந்து, எகிப்திலிருந்து பிரிட்டிஷ், பிரஞ்சுத் துருப்புக்களைத் திருப்பி அழைத்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றனர்!

சூயஸ் பிரச்னை எழுந்த காலத்திலிருந்தே ஈடன் அரசாங்கத்துக்கு ஒவ்வொரு கட்டத்திலும் ஏமாற்றமும் அவமானமும்தான் ஏற்பட்டு வந்துள்ளன. இவ்வளவுக்கும் அந்தோனி ஈடன்தான் பொறுப்பு என்பதை பிரிட்டிஷ் பொதுமக்கள் உணரும்போது அவர் எப்படி உள் நாட்டில் உள அமைதியோடு வாழ முடியும்? எகிப்தின் தலைவர் நாஸிரை ஒழிக்க கங்கணங் கட்டிக் கொண்டிருந்த ஈடன் இன்று தமது நாட்டைவிட்டே ஓட நேர்ந்தது விதியின் விளையாட்டுப் போலும்!

சுஹ்ரவர்தியின் கூற்று!

அண்மையில் சில நாட்களாக பாக்கிஸ்தான் அரசாங்க அதிபர்கள் பின்பற்றி வரும் அந்நிய நாட்டுக் கொள்கை, அந்த நாட்டின் பெருமைக்கும் உலக முஸ்லிம்களின் நம்பிக்கைக்கும் உகந்ததாக இல்லை. பாக்கிஸ்தான் உலகத்தில் மிகப் பெரிய முஸ்லிம் நாடாயிருப்பதால் அது ஏனைய இஸ்லாமிய நாடுகளுக்குப் பக்கபலமாக இருக்குமென்றே எதிர்பார்த்தோம். ஆனல் அதன் தலைவர்களின் தற்காலப் போக்கும் பேச்சும் நமக்குப் பெரிதும் ஏமாற்ற மளிக்கின்றன. பாக்கிஸ்தான் பிரதமர் சுஹ்ரவர்தியும், அந்நிய நாட்டமைச்சர் ஃபிரோஸ் கான் நூனும் எகிப்தில் நடந்த ஆக்ரமிப்புப் போர் பற்றி வெளியிட்டு வரும் கருத்து நம்மை திகைக்க வைக்கின்றது.

எகிப்தின் மீது பிரிட்டனும், பிரான்சும் சேர்ந்து ஆக்ரமிப்புப் போர் தொடுத்தது "ஆதிக்க நோக்கம் கொண்டதல்ல" வென்றும், "உலக நன்மைக்காகவே எகிப்தின் மீது போர் தொடுக்கப்பட்ட" தென்றும் பாக் பிரதமர் சுஹ்ரவர்தி கூறியிருக்கின்ருர்! சூயஸ் கால்வாயில் தடையில்லாமல் எல்லா நாட்டுக் கப்பல்களும் சென்று வருவதற்காக எகிப்தின் ஆதிபத்திய உரிமையைக் கட்டுப்படுத்துவதுதான் பிரிட்டனின் நோக்கம் என்று சுஹ்ரவர்தி கூறுகின்ருர். முழுப் பூசனியைச் சோற்றில் மறைக்க முயல்வதில் சர். அந்தோனி ஈடனையும் வென்று விட்டார் சுஹ்ரவர்தி!

பிரிட்டிஷ், பிரஞ்சு ஆக்ரமிப்புப் போரை பிரிட்டிஷ் மக்கள் மட்டுமின்றி உலக மக்களனைவரும் வன்மையுடன் எதிர்த்து நிற்கும் போது, ஒரு இஸ்லாமிய நாட்டின்

தலைவர் மற்ருெரு இஸ்லாமிய நாட்டின் மீது அந்நியர் நடத்திய ஆக்ரமிப்புப் போருக்கு நியாயம் கற்பிக்க முன் வந்திருப்பது வெட்கக்கேடான விஷயம். இவரைப் போன்ற முஸ்லிம் உலகத் தலைவர்கள் தமக்கு ஆதரவாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் ஈடன் எகிப்தைத் தாக்குவதற்குத் துணிந்தார் போலும்!

அக்கிரமக்காரர்களுக்கு வக்காலத்து வாங்கும் இரண்டாந்தர வக்கீல்களைப்போல் ஒரு பெரிய இஸ்லாமிய நாட்டின் தலைவர் தாழ்ந்த நிலைக்கு வந்து விட்டார்!

எகிப்து விஷயத்தில் பாக்கிஸ்தான் கடைப்பிடித்து வரும் கொள்கையை அங்குள்ள பொது மக்கள் மிக்க வன்மையாகக் கண்டித்து வருகின்றனர்; சுஹ்ரவர்தியின் அரசாங்கத்தை நோக்கி, "காமன் வெல்த்திலிருந்து வெளியேறு! பதநாத் உடன் படிக்கையைக் கிழித்தெறி!" என்று கூறிக்கொண்டு கிளர்ச்சி செய்கின்றனர். இந்நிலையில்தான் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் சுஹ்ரவர்தி "உலக நன்மைக்காகத்தான் எகிப்தின் மீது ஈடன் போர் தொடுத்தார்" என்று பேசத் துணிந்து விட்டார்!

திரு ஸ்ரீ பிரகாசா

ஏறத்தாழ 5 ஆண்டுகளுக்கு முன் நம் சென்னை ராஜ்யத்தின் கவர்னராகப் பதவியேற்ற திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள் இம்மாதம் 10-ந் தேதியன்று பம்பாய் ராஜ்யத்தின் கவர்னராகப் பதவி ஏற்கப் போகின்ருர்.

திரு ஸ்ரீ பிரகாசா அவர்களுக்குத் தமிழர்கள் சார்பில் நடத்தப்பெற்ற பிரிவுபசாரத்திற்கு அவர் நன்றி தெரிவிக்கும்போது, "உங்கள் குடும்பத்தில் ஒருவனுக என்னையும் ஏற்றுக் கொண்டீர்கள்" என்று கூறினுர். தமிழர்கள் தங்கள் குடும்பத்தில் ஒருவராக திரு. ஸ்ரீ பிரகாசா அவர்களை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அவர் தமிழ் மக்களின் அன்பைப் பெற்றதற்குத் தமிழர்களின் நல்ல பண்பாடு மட்டும் காரணமல்ல; திரு ஸ்ரீ பிரகாசா அவர்களின் குணுதிசயங்களுந்தான் அதற்குக் காரணம் என்று கூற வேண்டும். அவருடைய ராஜ பவன மாளிகை நகருக்கு அருகில் இல்லாவிட்டாலும் அவர் நாட்டு மக்களுடன் நெருங்கிப் பழகினுர்; அரசியல், சமூக மொழிப் பிரச்னைகளில் மக்களின் கருத்தை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினுர். கடந்த ஐந்து வருட காலத்தில் அரசியல் சமூக மொழிப் பிரச்னைகளில் தமிழ் மக்கள் கொண்டுள்ள கருத்து என்னவென்பதை திரு ஸ்ரீ பிரகாசா அவர்கள் நன்கு அறிந்துகொண்டிருக்கிருர். முக்கியமாக மொழிப் பிரச்னையில் தமிழ்ப் பொதுமக்களின் ஒருமுகமான கருத்து என்னவென்பது அவருக்குத் தெரியும். ஹிந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாக்கப் பட்டிருப்பதையும், அது தமிழ் மக்களின் மீது கட்டாயமாகத் திணிக்கப்படுவதையும் தமிழ் நாடு எதிர்க்கிறது. இந்த உண்மையைத் திரு ஸ்ரீ பிரகாசா அவர்கள் தம்மைப் போன்ற வட இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறி, ஹிந்தி விஷயத்தில் அவர்கள் கொண்டுள்ள பிடிவாத குணத்தை விட்டொழிக்குமாறு அறிவுறுத்த வேண்டும். ஆட்சி மொழி பற்றி அரசாங்கத்தின் கொள்கை மாற்றியமைக்கப்படா விட்டால் நாட்டிலே ஏற்படக்கூடிய விரும்பத்தகாத விளைவுகளுக்கு வட இந்தியத் தலைவர்களே காரணம் என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறி எச்சரிக்கை செய்வார் என்று எதிர்பார்க்கின்ருேம்.

கவர்னர் திரு ஸ்ரீ பிரகாசா அவர்களுக்கு நம் நல் வாழ்த்துக்களைக் கூறி வழியனுப்புவதற்கு அறிகுறியாக இந்த இதழின் அட்டையில் அவருடைய உருவப் படத்தை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்ருேம்.

விற்பனையாகிறது!

ஒவ்வொரு தேதியிலும்
தமிழில் திரு குர்ஆன் பொன் மொழிகள், அறிவுரைகள்,
இஸ்லாமிய வாரிசு உரிமைச் சட்ட விதிகள்,
ஆங்கில, தமிழ், அரபு தேதிகள்
உடைய அருமையான



விலை ரூ. 1-4-0

ரிஜிஸ்டர் தபாலில் பெற விரும்புவோர்
1-14-0 முன்பணம் அனுப்பவும்
வியாபாரிகளுக்கு 20 சதவீதம் கமிஷன்

அன்பு நூல் நிலையம்,

18, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை-1.

அறுந்து வரும் அன்புப் பிணைப்பு

"மீரா"

பாக்கிஸ்தான் மக்கள்மீதும் அவர்களின் தலைவர்கள் மீதும் இந்தியாவுக்கும் இந்திய முஸ்லிம்களுக்கும் ஒரு அலாதியான நெருங்கிய அன்புப்பிணைப்பு உண்டு. உலகின் பிற பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள்மீது செலுத்தும் அன்பையும் அபிமானத்தையும் காட்டிலும் அதிகமாக பாக்கிஸ்தான் முஸ்லிம்களை இந்திய முஸ்லிம்கள் நேசித்ததற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. இன்று பாகிஸ்தானிகளாகக் கருதப்படும் மக்கள், அவர்கள் அவ்வாறு அழைக்கப்படுவதற்கு முதல் நாள் இரவு வரை இந்திய மக்களாக இருந்தவர்களே! இன்று வெளிநாடாகி விட்ட பாக்கிஸ்தான் அன்று உள்நாடாகத்தான் இருந்தது. பெரும்பான்மையாகவுள்ள ஒரு சமூக மக்கள், அவர்கள் பெரும்பான்மையாக வசித்துவந்த பகுதிகளை அவர்களே ஆள உரிமை கோரினார்கள். ஜனநாயக முறையில் அவர்கள் அவ்வாறு கோருவதற்கு உரிமையுண்டு. அவர்களின் கோரிக்கை வெற்றி பெற்றால், அதனால் விளையும் பலன், அவர்களுக்கு நன்மை பயக்கும் என்று அவர்கள் கருதி வாதித்தார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் நன்மையைக் காட்டிலும் தீமை அதிகம் விளையலாம் என்று ஒரு சாரார் கருதி அவர்களது கோரிக்கையை எதிர்த்தார்கள். அவர்கள் கோரிய பாகிஸ்தானால் ஏற்படும் விளைவு நன்மையாக இருந்தாலும் தீமையாக இருந்தாலும் அவர்களது கோரிக்கை நியாயமானதே என்றும், அவர்களது விருப்பம் போல் அவர்களைத் தனித்துவிடுவது அவசியம்தான் என்றும் மற்றப் பிரதேசங்களில் வசித்த இந்திய முஸ்லிம்கள் எண்ணி ஆதரவு அளித்ததால் இந்தியா பிரிந்தது. இரு பக்கங்களிலும் பாக்கிஸ்தான் பரிணமித்தது. "இந்திய முஸ்லிம்களுக்கு இனிமேல் இந்தியாதான் தாயகம், இந்திய நாட்டுக்கு அவர்கள் விசுவாசமாக நடக்கவேண்டும். அவ்வாறு நடந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்" என்று ஜனாப் ஜின்னா இந்தியா பிரிந்த போது கூறினார்.

ஜின்னாவின் நம்பிக்கை வீண் போகவில்லை. இந்திய முஸ்லிம்கள் அவர்களது தேசாபிமானத்தை—விசுவாசத்தை எங்கும் அடகு வைத்துவிடவில்லை. சிறை சென்று திரும்பிய திருடனைப் பார்க்கும் சந்தேகக் கண்

களுடன்தான் இந்திய முஸ்லிம்களை மற்றவர்கள் வெகுகாலம் வரை கண்ணுற்றார்கள். தங்களது அசாதாரணப் பொறுமையினாலும் நேர்மையான நடத்தையாலும் இந்திய முஸ்லிம்கள், ஒரு சில குரோதக்காரர்களின் விஷமச் சந்தேகத்துக்கும் துஷ்பிரச்சாரத்துக்கும் இடம்கொடுக்காமல் நாட்டு நலனில் நாட்டமுள்ளோரின் மனத்தில் நல்லதோர் மனமாற்றத்தை உண்டாக்கியிருக்கின்றார்கள்.

இந் நிலையில், பக்கத்திலுள்ள பாக்கிஸ்தான் எப்படி நடந்து வருகிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். பாக்கிஸ்தான் நாடு அமைந்த பிறகு ஜனாப் ஜின்னா கவர்னர் ஜெனரலாகவும், ஜனாப் லியாக்கத் அலீகான் பிரதம மந்திரியாகவும் இருந்து ஆட்சியை நடத்தினர். அதன் பிறகு நஜிமுத்தீன், குலாம் முஹம்மது, இஸ்கந்தர் மிர்ஸா ஆகியோர் கவர்னர் ஜெனரல்களாகவும், நஜிமுத்தீன், முஹம்மதலீ, சௌத்ரி முஹம்மதலீ, சுஹ்ரவர்த்தி ஆகியோர் பிரதம மந்திரிகளாகவும் வந்தனர். மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு மாறுதல் ஏற்பட்டிருப்பது பாகிஸ்தானின் துரதிர்ஷ்டம் என்று ஒரே வரியில் சொல்லிவிடுவதற்கில்லை! பிரான்ஸ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற மந்திரி சபை மாற்றத்தைக் காட்டிலும் அதிவேகமாக பாக்கிஸ்தானில் மந்திரி சபை மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இது பாகிஸ்தான் மக்களுக்கு ஏமாற்றத்தையும் மன மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அந்த நாட்டை உருவாக்கிய மூல கர்த்தா ஜின்னாவின் அகால மரணமும் லியாகத் அலீகானின் படுகொலையும் எதிர்பாராத வகையில் வேகமாக நிகழ்ந்ததால் ஏற்பட்ட அரசியல் சூனியம்—முதிர்ந்த அனுபவத்துடன் கூடிய அரசியல் அறிவு படைத்தவர்கள் அற்ற நிலைமை—பாக்கிஸ்தானை இன்று தலைமையற்ற தாயகமாக ஆக்கிவிட்டிருக்கிறது. எரிகிற வீட்டில் பிடுங்குவது ஆதாயம் என்ற ரீதியில் நிலப் பிரபுக்களும் ஆதிக்க வேட்டைக்காரர்களும் அரசியல் சூதாட்டக்காரர்களும் மேலைநாடுகளுக்கு வால்பிடிப்பதினாலேயே தங்கள் வாழ்வை வளமாக்கிக்கொண்ட சுயநலவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும் பாக்கிஸ்தானின் தற்போதைய நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்றனர். அதன் பலன், உணவுப் பஞ்சத்தை மிஞ்சும் அறிவுப்பஞ்சமும் குழப்பமும் ஆகும்.

பாக்கிஸ்தான் மக்கள் அவர்களுக்கு என ஒரு அரசியல் சட்டத்தை வருத்துக்கொள்ள ஒன்பது வருடங்கள் ஆயின!

கேள்வி—பதில்

இந்த இதழில் அன்பளிப்புப் பெற்றவர்கள்.

1. ஆர். ஏ. ரஸாக், சிங்கப்பூர். ரூ. 3.
2. ஏம். அபூபக்கர், விருதுநகர். ரூ. 3.
3. எஸ். ரபீ அஹ்மத், கர்னூல். ரூ. 3.

மக்களிடை மத சகிப்புத்தன்மை மங்கியிருக்கிறது. பெரிய, சிறிய விஷயங்களில் எல்லாம் வேற்றுமை யுணர்ச்சி காட்டப்படுவதுடன், அது மேலும் ஊட்டப்படுகிறது. சமீபத்தில், அமெரிக்கர்களால்எழுதப்பட்ட 'மதத் தலைவர்கள்' என்ற புத்தகத்தை 'பாரத வித்யா பவனம்' என்ற புத்தக நிலையத்தார் மறுபதிப்பு வெளியிட்டுப் பிரசுரித்ததற்கு இந்திய சர்க்காரைக் குற்றம் சாட்டியதுடன், நேருஜியின் கொடும்பாவியைக் கட்டி இழுத்தார்கள். எகிப்து மீது வலுத்தாக்குதல் நடத்தி அட்டகாசம் செய்து வரும் கிழட்டு வல்லரசு பிரிட்டனை வேகமாகவும் வன்மையுடனும் கண்டிக்க வேண்டிய பாக்கிஸ்தான் அரசாங்கம் மெதுவாகவே செயலாற்றியது, எகிப்தில் ஆக்கிரமிப்புப் போர்நடத்திய நாடுகளைக் கண்டிப்பதற்காகக் கூட்டப் பெற்ற கொழும்பு நாடுகள் மகாநாட்டில் கடந்துகொள்ளவில்லை. "இஸ்ரேல் நிலைத்து விட்டது. 50 லட்சம் யூதர்களையும் கடலிலா தள்ளுவது?." என்று பாக்கிஸ்தான் வெளிநாட்டு மந்திரி பிரோஸ் கான் நூன், லண்டனில் இஸ்ரேலுக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறார்! எகிப்துக்குச் செல்லும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுப் படையில் பாக்கிஸ்தான் துருப்புகள் வருவதை இந்தியாவின் தூண்டுதலால்தான் எகிப்து எதிர்க்கிறதுஎன்றும், சூயஸ் நிர்வாகத்தை இந்தியா மேற்கொள்ளும் என்றும் பாக்கிஸ்தான் தலைவர்கள் புரளி புண்டு பண்ணியிருக்கிறார்கள்.

ஆசிய—ஆப்ரிக்க ஜோதி நாஸிர், அகிலத்தின் ஜோதியாக மாறிவருவது மற்றவர்களின் புத்திமதியைக்கேட்டு அல்ல என்பதைப் புரிந்து கொள்ளும் சக்தியை பாகிஸ்தான் இழந்துவிட்டது போலும்! பாகிஸ்தானிலிருந்து நாளுக்கு நாள் வரும் நவீனப் புளுகுகளைப் பார்த்தால் பச்சைப் புளுகு என்பதை இனிமேல் "பாக்கிஸ்தான் புளுகு" என்று மாற்ற வேண்டியது ஏற்படுமோ என்று அஞ்சவேண்டியதாயிருக்கிறது. பாக்கிஸ்தான் மக்கள் ஒன்று நினைக்க, அதன் தலைவர்களும் அரசாங்கமும் வேறொன்று நினைக்கிறார்கள்! அதன் பலனாக, பாக்கிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் உள்ள அன்புப் பிணைப்பு அறுந்துகொண்டே வருகிறது.

டீகளில் உயர்ந்தவை

மக்தூம் டீ

மக்தூம் கோல்டன் ஸ்டார் டஸ்ட் டீ
மக்தூம் சிவப்பு லேபிள் டஸ்ட் டீ
மக்தூம் தென்னை மர மார்க் டஸ்ட் டீ

மக்தூம் அன் கோ,

தபால் பெட்டி நெ. 1769, மதராஸ்-1

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

மௌலானா அப்துல்ஹை லக்னவீ (ரஹ்) அவர்களின்

குத்பா கொத்து

தமிழ் மொழி பெயர்ப்பு

உத்தமபாளையம், அல்ஹாஜ் மௌலவி

S. S. முஹம்மது அப்துல்காதிர் சாஹிப் (பாகவி)

ஜும்ஆ குத்பாவில் ஓதப்படும் விஷயம் என்னவென்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நன்னோக்கங் கொண்டு, வட இந்தியாவில் புகழ் பெற்ற ஹஜ்ரத் அப்துல் ஹை மௌலானா மர்ஹூம் அவர்களால் எழுதப்பட்டதும், நமது தென்தேசத்தில் பெரும்பாலான இடங்களில் ஓதப்படுவதுமான அரபி குத்பாவை தமிழில் மொழிபெயர்த்து, குத்பாவில் எந்தெந்த விஷயங்கள் அரபியில் இருக்க வேண்டுமோ அவைகளை அரபியிலும், இதர பாஷையில் இருக்கத் தகுந்ததை தமிழிலுமாக அச்சிட்டு, இதனையே பேஷ் இமாம்கள் குத்பாவில் ஓதி விட்டால் குத்பாவின் ஷரத்துகள் அத்தனையும் முற்றிலும் நிறைவேறி விடுவதற்கான முறையில் அரபி பிளாக்குகளுடன் அச்சிட்டு விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. இது ஷாபி, ஹனபி இருவருக்கும் பொதுவானது. இதை இரண்டு பாகங்களாக வெளியிட்டிருக்கிறோம்.

1-வது பாகம் முஹர்ரம் முதல் ரமலான் முடிய 9-மாதங்களுக்குள்ள குத்பாக்கள் சேர்ந்து அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு கட்டியது. விலை ரூ. 5—0—0.

2-வது பாகம் :—ஷவ்வால், துல்காயிதா, துல்ஹஜ் ஆக மூன்று மாதங்களின் குத்பாவும், பெருநாட்கள் குத்பாவும், நிக்காஹ் குத்பாவும் துஆவும் சேர்க்கப்பட்டு கலிகோ பைண்டு கட்டியது. விலை ரூ 2—8—0.

ஷை இரண்டு பாகமும் சேர்ந்தது கலிகோ பைண்டு கட்டியது விலை ரூ 7—8—0.

கேட்லாக் தேவையுள்ளவர்கள் எழுதவும்.

கிடைக்குமிடம் :

தப்லீமுல் இஸ்லாம் புக் டிப்போ

6-2, திருவல்லிக்கேணி ஐரோட், சென்னை—5.

இரு இளம் வீரர்கள்

தம்பி !

மேனாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் பற்றிப் புத்தகங்களில் நீ படித்துத் தெரிந்து கொண்டிருப்பாய். சரித்திரங்கள் அவர்களின் வீரச் செயல்களை வருணிக்கின்றன. ஜோன் ஆஃப் ஆர்க்என்னும் பிரெஞ்சு வீர மங்கையைப் பற்றி மிக மிக ப்புகழ்ந்து பேசப்கின்றது. அப் புரட்சிப் பெண்ணின் வீர தீர சாகசங்கள் நம்மையெல்லாம் திகைக்க வைக்கின்றன. அன்னியர்கள் அவளது அருமைத்தாய் நாட்டின் சுதந்தரத்தையும் உரிமைகளையும் பறித்து, மிதித்துத் துகைத்தபோது அவள் என்ன செய்தாள் தெரியுமா? அவளது நாட்டு மக்களின் அடிமை அந்தகார வாழ்க்கையை வெறுமனே பார்த்துக் கொண்டு, கை கட்டி வாய் பொத்தி "யார் எக்கேடு கெட்டாலென்ன" என்று வாளாவிருந்துவிடல்லை. அவள் அவ்விதம் இருந்திருப்பாளாயின் அது அந்நாட்டிற்குப் பெரும் இழிவாகவும் பழியாகவுமே முடிந்திருக்கும். சுதந்தரம் என்பது மக்களின் பிறப்புரிமை என்று அவள் முழக்கம் செய்தாள். அவளது தாய்நாடு சுதந்தரம் அடைய வேண்டும், அந்நாட்டில் அன்னியர் ஆதிக்கம் ஒழிய வேண்டும், இன்றேல் அம்முயற்சிகளில் அவள் மடிய வேண்டும் என்று அவள் உறுதி செய்து கொண்டாள். இவ்விரண்டிலொன்றைவிட வேறு கண்ணியமான மார்க்கம் எதுவும் அவளுக்குத்தோன்றவில்லை. அன்னியரின் பிடிப்பிலிருந்து பிரெஞ்சு தேசத்தையும், அந்நாட்டு மக்களையும்

விடுவிக்க வேண்டுமெனத் தனக்குக் கட்டளையொன்று பிறந்துவிட்டதென்று அவள் உணர்ந்தாள். அவளுக்கு அஃது யார் இட்ட கட்டளை? அதுவே கடமை அவளுக்கு இட்ட கட்டளை! எனவே, அவள் அக்கட்டளையை மனப்பூர்வமாக ஏற்று உடனடியாக அமல் நடத்தத் துணிந்துவிட்டாள்! அவள் எவ்வண்ணம் தனக்கென ஒரு தனிப்படை திரட்டி அதற்குத் தானே தலைமை பூண்டு அப்புனிதப் போரில் குதித்து ஆங்கிலேயர்களை மண் கவ்வச் செய்து அவளது தாய்நாடு இழந்த சுதந்திரத்தை மீட்டுக் கொடுத்தாள் என்பதெல்லாம் உனக்குத் தெரியும்.

இவை யாவற்றையும் நாம் கண்டும் கேட்டும் படித்தும், இவையெல்லாம் தேச பக்தியென்றும், வீர தீர பராக்கிரமச் செயல்களென்றும், துணிகரப் போராட்டங்களென்றும் போற்றிப் புகழுகின்றோம் நாம். ஆனால், இஸ்லாத்தின் ஆரம்ப கால முஸ்லிம்கள் செய்து காட்டிய தீரச் செயல்கள், தேச பக்தி ததும்பிய வீரப் போராட்டங்கள் ஏதும் நமக்குத் தெரியுமா? இவற்றை நாம் தெரிந்து கொண்டால் நமக்கே பேராச்சரியமும் புத்துணர்ச்சியும் உண்டாவது இயல்பு. வேறு எந்த வரலாற்றிலும் காணக் கிடைக்காத ஒப்பற்ற உயரிய செயல்கள் பல இஸ்லாமிய சரித்திரத்தின் ஏடுகளிடையே செறிந்து கிடக்கின்றன. இத்தகைய வீர வரலாற்றை எடுத்துக் காட்டும் இரு இளைஞர்களைப் பற்றியே இன்று உனக்கு எழுதப்போகின்றேன்.

தம்பி இவ்விரு வீரர்களும் 16 வயதிற்குட்பட்ட பால்மணம் மாறாப் பச்சிளஞ் சிறுவர்களே! மிகச் சிறு வயதினராயிருந்த போதிலும், இவர்களின் நரம்புகளில் உண்மையான இஸ்லாமிய வீரஇரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. இவர்களது இருதய கமலங்களில் உண்மையான இஸ்லாமிய வீரம் ஒளிவீசியது. இவர்களின் தோள்கள் உருண்டு திரண்டு கம்பீரமாய்க்காட்சியளித்தன. இவர்கள் சத்தியமும் நேர்மையும் ஒழுக்கமும் நிறைந்த உயரிய குணாதிசயங்களுடன் விளங்கினர். கந்தைத் துணிகளைக் கட்டியிருந்த போதிலும் இவர்களின் உள்ளங்களில் ஆண்மையும் அச்சமின்மையும் நிறைந்திருந்தன. இவர்கள் சுதந்தரக் காற்றைச் சுவாசித்துக் கொண்டு இறைவனது பூமியில் தலை நிமிர்ந்து ஆண்மையுடன் நடமாடினர்.

அடிமைவாழ்க்கையே எல்லாவிதமான இழி குணங்களையும், ஈனத் தன்மையையும் ஊட்டி வளர்த்து உருவாக்கும் சக்தி வாய்ந்தது. இத்தகைய மன அடிமைத்தனமோ, அன்றி உடலடிமைத்தனமோ இன்னதென்பது அவர்களுக்கு அறவே தெரியமாட்டா. இவ்வித சுயேச்சை மனப்பான்மையானது, அவர்களது அவையவங்களுக்கு உரமும் வலுவும் ஊட்டி அவர்களது கண்களுக்கு ஒரு வீரப் பார்வையையளித்தது. கடமை என்பது அவர்களுக்குப் பொற்குவியலைவிடப் பெரிதாய்க் காட்சியளித்

து. அவர்கள் தங்களின்
சொந்த சுகங்களைவிட
னச்சாட்சிக்கே மிக அதிக
ாய் மதிப்பளித்தனர்.
ண்ணியத்தையே உயிரினும்
பெரிதெனக் கண்காணித்தனர்.

தம்பி! இத்தகைய இலட்சிய
ாதிகளே இவ்வரலாற்றில் வரும்
ளம் போர்வீரர்கள். இவர்
ளது பராக்கிரமங்களைப் பரி
சாதிக்கும் நாளாகவே ஒரு
னம் வந்து சேர்ந்தது! கி.பி.
25, மார்ச் மாதம் 29-ம் தேதி
ன்றே இச் சம்பவம் நிகழ்ந்
து. மதீனவாழ் முஸ்லிம்
ளை அப்பொழுது ஒரு மா
பெரும் ஆபத்து சூழ்ந்து
காண்டது. பத்ரு யுத்தத்தில்
தால்வியுற்ற மக்கத்துக் குறை
ஷிகள் மாபெரும் படை பலத்
டன் இப்பொழுது மீண்டும்
முஸ்லிம்களை வலுச்சண்டைக்
ழுப்பதற்காக வந்துவிட்டனர்.
தீன நகரத்திற்கு அரு
ாமையிலேயே, அஃதாவது
ன்று மைல் தூரத்திலுள்ள
ஹுத் மலையடிவாரத்திலேயே
க்கத்துக் குறைஷிகள் பழிவாங்
ும் எண்ணத்துடன் பாசறை
மைத்திருந்தனர். முஸ்லிம்க
ின் சுதந்தரத்தைப் பறிப்பதற்
கவே அவ்வெதிரிகள் மக்காவி
ருந்து மிக நீண்ட பிரயாண
கிய 217 மைல் தூரம்
டோடியும் வந்துள்ளனர். இது
ான் இஸ்லாமிய சரித்திரத்தில்
உஹுத்" யுத்தமென்று பெயர்
ற்றது.

ஆனல், சுதந்தரமென்பது
வ்வொரு முஸ்லிமினுடையவும்
ிறப்புரிமையினும் பெரிய தெய்
வீக உரிமை என்றே கூறப்படு
தல் வேண்டும். சிருஷ்டியில்
சிரேஷ்டராகிய எம்பெருமானர்
முஹம்மது முஸ்தபா ரசூல்
(ஸல்) அவர்கள், சுதந்தரமென்
பது தெய்வீக உரிமை என்னும்
உண்மையை உலகத்துக்கு
உணர்த்தும் உன்னதப் பணிக்
கெனவே அரேபியாவில் அவதா
ரம் புரிந்தார்கள். மனிதனை
உன்னத பதவிக்கு உயர்த்துவ
தற்காகவே அவர்கள் தங்களது
ஆயுள் முழுவதும் அரும்பணி
யாற்றினர்கள். மனிதனை எல்லா
விதமான அடிமைத்தனங்களி
லிருந்தும் விடுவித்தவர்கள் அப்
பெருமானரே! இயற்கை ஆரா
தனை, கருங்கல் ஆராதனை, விக்
ரஹ ஆராதனை, மனித பூஜை
ஆகிய எல்லாவிதமான இலௌ
கிக அடிமைத் தனைகளையும்
வைதிக அடிமைத் தனைகளையும்
அறுத்தெறிந்தவர்கள் அண்ணல்
நாதர் (ஸல்) அவர்களே! அப்
பெரியாரவர்கள் அத்துணை அரும்
பாடுபட்டு அடைந்த சுதந்தர
ஜோதியை அணைத்துவிட அக்
குறைஷிக் குப்பார்கள் துணிந்து
விட்டதைக் கண்ட அவ் வீரர்
திலகம் (ஸல்) அவர்களே முஸ்
லிம்களின் சுதந்தரத்தை மீட்
டுக் கொடுப்பதற்காக முன்வந்து
விட்டார்கள். சுதந்தர இஸ்லா
மியக் கொடியைக் கையி
லேந்தி அப்பெருமானரவர்கள்
எதிரிகளை விரட்டியடிக்கப்
போர்க் களத்திற்கு விரைந்து
சென்றூர்கள்.

இஸ்லாமிய சுதந்தரக் கொடி
யைச் சுற்றி முஸ்லிம் வாலிபர்,
வயோதிகர், நடுத்தர வயதினர்
அனைவரும் குழுமிவிட்ட

னர். நமது கதாநாயகர்களாகிய இரு இளைஞர்களும் அக்குழுவில் காணப்பட்டனர். வீர சுதந்தரம் வேண்டி நிற்கும் பெரும் தேசாபி மானிகளே போன்று அவ்விருவரும் தமது தாய்நாட்டைக் காப்பாற்றப் போரில் குதிக்கத் துடியாய்த் துடித்தனர், ஆனால், அந்தோ! அவர்கள் மிகச் சிறுவர்களாயிருந்தனர். 16 வயதிற் குட்பட்டவர்கள் போர்க்களம் புக அனுமதி கிடையாது. அவ்விரு இளைஞர்களும் வீடு திரும்பிச் செல்லவேண்டுமெனப் போர்விதிகள் புகன்றன. ஆனால் அவ்விருவரின் உள்ளங்களினின்றும் பீறிட்டுக் கிளம்பிய அவர்களது தேசாபிமானமோ, அவர்களை உடனடியாகப் போரில் குதிக்கவேண்டுமெனத் தூண்டிற்று. அவர்களது வீடு வாசல், மானம், பெண்டு, பிள்ளை, மதம் ஆகிய அனைத்தினுடையவும் கண்ணியமும் ஊசலாடிக்கொண்டிருக்கும் அத்தருவாயில் அச் சிறுவர்கள் தமது கரங்களைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு வாளாயிருப்பதா? இல்லை! முடியாது! முற்காலத்தில் பிரஞ்சு வீர வனிதையாகிய ஜோன் ஆஃப் ஆர்க்கிற்குக் கடமையின் கட்டளை பிறந்ததே போன்று இச்சிறுவர்களுக்கும் கடமையின் கட்டளை அவர்களது காதுகளில் ரீங்காரம் செய்தது! அவர்களது உடலில் கடைசித் துளி இரத்தம் உள்ளவரை அவர்களது புனித உரிமைகளைக் காத்துநிற்பதென்று முடிவுகட்டி விட்டனர். முஸ்லிம்கள் ஒரு போதும் அடிமை வாழ்வு நடத்த முடியாது என அவர்களது மனச் சாட்சி அவர்களுக்குக் கட்டளை பிறப்பித்து விட்டது. அக் கட்டளைக்கு அவர்கள் அடிபணிந்து விட்டனர்.

போர் விதிகளுக்கிணங்க, அவர்களது இளம் வயதுகாரணமாக அவர்கள் வீடு திரும்பிச் செல்ல மறுத்துவிட்டனர். தங்களையும் போர் அணிவகுப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென அவர்கள் நபிகள் நாதர் (ஸல்) அவர்களிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். அவர்களது வேண்டுகோளை நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கீகரிக்கவில்லை. எனவே, அவ்விருவரில் ஒருவரான ராபிஃ என்பவர் சேனையில் சேர்த்துக்கொள்ளத் தம்மை அருகதையற்றவராக்கும் வண்ணம் தாமொன்றும் அத்துணைக் குட்டையாயில்லை என்பதை நபிகள் திலகம் (ஸல்) நம்பவேண்டும் என்பதற்காக அவர் தமது கால்களின் கட்டை விரல்களின் மீது எக்கி நின்று, தமது தலையையும் சிறிது நெட்டையாக நீட்டிக் காண்பித்தார். அவரது யுக்தியைக்கண்ட நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் அவ்விளைஞரது ஆர்வத்தையும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பாராட்டி அவரைச் சேனையில் சேர்த்துக் கொண்டார்கள். இதனால் ராபிஃ அடைந்த ஆனந்தத்திற்கோர் அளவில்லை.

"ஆனால் அவரது தோழரான ஸம்ராவோ, வீடு திரும்பிவிட வேண்டுமென்று கட்டளை இடப்பெற்றார். ஆனால் அவ்வாறு திரும்பிச் செல்ல அவர் சிறிதும் இணங்கவில்லை. தாமும் யுத்த

தில் பங்கெடுத்தே தீரவேண்டு
மென்று அவர் வாதாடினார். தாம் ராபிஃக்கு எவ்வகையிலும் இளைத்தவரல்ல என்பதை நிரூபித்துக் காண்பிக்கத் தமக்கொரு சந்தர்ப்பளிக்குமாறு நபிகள் திலகம் (ஸல்) அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொண்டார். அவ்விதமே அவ்விருவருக்கும் ஒரு மல் யுத்தம் நடைபெற அங்கு ஏற்பாடாயிற்று. முஸ்லிம்களுக்கும் குறைஷிகளுக்கும் சிறிது நேரத்திற்குப் பின்னர் நடைபெறப் போகும் கோர யுத்தத்திற்கு முன்னர் முஸ்லிம் யுத்த வீரர்களுக்குச் சிறிது உற்சாகத்தையும் தமாஷாவையும் உண்டுபண்ண வேண்டுமென விரும்பிய எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஸும்ராவின் வேண்டுகோளுக்கிணங்கினார்கள்.

தம்பி! அவ்விருவருக்கும் ரோஷமான குஸ்திச் சண்டை ஆரம்பமாயிற்று. அவ்விருவரும் தாமே வெற்றி பெற வேண்டுமென்னும் பேராவலுடன் சமர் புரிந்தனர். ஆங்கிருந்த முஸ்லிம் வீரர்கள், இருவருக்கும் உற்சாகமூட்டிக் குரலெழுப்பி ஆரவாரஞ் செய்தனர். அவர்களில் சிலர் ஸும்ராவுக்குஉற்சாகமூட்டினர். மற்றுஞ் சிலர் ராபிஃக்கு ஊக்கமூட்டினர். நீண்ட நேரச் சண்டைக்குப் பின்னர் ராபிஃக்கை ஸும்ரா கீழே வீழ்த்தி, அவரது முதுகிற்கு மண் காட்டி விட்டுத் தாம் மிகவும் ஆவலுடன் விரும்பிய சேனையில் சேரும் பாக்கியத்தைப் பெற்று, அக மகிழ்ந்து ஆனந்தப் பரவசராயினர்.

தம்பி! அக்கால முஸ்லிம் இளைஞர்கள் போர்க்களம் செல்வதற்குக் கொண்டிருந்த ஆவலும், அதற்காக 'அவர்கள் கையாண்ட யுக்திகளும் உனக்கு வியப்பூட்டவில்லையா?

"நூர்"

எம். ஆர். எம். அப்துர் ரஹீம் பீ. ஏ. எழுதிய
வாழ்வு முன்னேற்ற நூல்கள்

வாழ்க்கையில் வெற்றி!	2	8
எண்ணமே வாழ்வு	3	0
வாழ்வின் வழித்துணை	2	8
முன்னேறுவது எப்படி?	2	8
வழிகாட்டும் ஒளிவிளக்கு	1	8
வாழ்வைத் துவங்கு!	2	8
லட்சமாய் வாழ்க!	2	8
வாழ்வரசி	2	0
வாழ்வது ஒரு கலை	2	4
வியாபாரம் செய்வது எப்படி?	3	0
மகனே கேள்!	2	0
அன்புள்ள தம்பி!	2	0
வழுக்கலில் ஊன்றுகோல்	1	8

பெரியோர் வரலாறுகள்

உலக மேதைகள்	1	8
இஸ்லாமிய திலகங்கள்	1	12
கோடீஸ்வரக் கொடை வள்ளல்	1	0
அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர்	2	0
லியோ டால்ஸ்டாய்	1	8
முஸ்லிம் சமுதாயச் சிற்பிகள்	2	0

நாவல்கள்

மல்லிகை	2	0
பூங்குழலி	3	8

கிடைக்குமிடம் :

அன்பு நூல் நிலையம்,

18, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை-1.

சோலைக் குயில்கள்

எம். கே. ஜமான்

அன்று பாரசிக அரசாட்சியின் மகிழ்வு நாள். வளமார் தெருக்களெல்லாம் எழிலார் சிறப்பமைந்து ஏற்றமுடன் தோற்றமளித்தன. மன்னவனின் மாளிகையும் அரசியின் அந்தப்புரமும் என்றுமிலா வனப்புடனே அன்று காட்சியளித்தன. பூத்துப் பொலிவுற்றுப் புதுமணம் பரப்பி நிற்கும் நறுமணப் பொழிலிலிருந்து கொணரப்பட்ட நாண் மலர்களை அரண்மனை வாயிற்புறத்தில் அழகுக்கு அழகு செய்வது போன்று அலங்கரித்திருந்த காட்சி காண்போர் உள்ளத்தை விட்டு என்றும் நீங்காததொன்றாய் இருந்தது.

மேற்றிசை மலைகளிடை. பகலவன் மறைந்துகொள்ள, தாமரைகள் இதழ் கூம்பித் தண்மையுற, மந்தமாருதம் தென்றலாய்த் தவழ்ந்து வர, வாயவிழ்ந்த முல்லையிலே வண்டுகள் வரிபாட மாலைப் பொழுது நழுவிக்கொண்டிருந்தது. பாரசிக நாட்டு இளவரசி குர்ஷித், நீலப்பட்டாடை பூண்டு நீள் கருங் கூந்தல் கோதி, மின்னல் இடையசைத்து, அன்னநடை நடந்து வண்ண ஓவியம் ஒன்று உயிர் ஏந்திச் சென்றதுபோல் ஒயிலாகச் சென்று உய்யானத்தை அடைந்தாள். ஆங்கே இச்சையைக் கிளறிவிடும் வகையில் பச்சைமணிப் புல் படர்ந்திருந்த பூங்காவின் நடுவில் நின்று வெள்ளிய நீர்த்திவலைகளை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கும் செயற்கை நீரூற்றின் அருகில் அமர்ந்து, தன் செம்
மலர்ப் பாதங்களை நீரில் நனைத்து,
மெல்ல அசைத்துக் கொண்டிரு
தாள், மெத்தென்ற பாதங்க
மோகமுறத் தழுவியபின் முத்
மிடும் நீர்த்துளிகள் மெய்யுண
வைத் துண்டிவிட்டு அலை யலையா
அசைந்தசைந்து மென்னொலி
எழுப்பிக் கொண்டிருந்தன. அ
வினிய ஒலிக்கேற்ப, தேனூறு
பால் வாய் திறந்து, கொவ்வை
செவ்விதழ்களை யசைத்து, கூடி
பாடிக் களிக்கின்ற குயில்க
நாண, குளிர்மொழியால் இசை
முதை வடித்துக்கொண்டிருந்தா
குர்ஷித். அவளது பண்ணி
யைக் கேட்கவோ, அன்றி அஃ
ஏந்திச் செல்லவோ விரைவுட
மென்காற்று ஓடிவந்து அவ
சிலையில் சூடியிருந்த பூமுடி
நீரிலே தள்ளிவிட்
சுருள் குழலைச் சுழ
வைத்து. பவழமே
யிற் படிந்திருந்த மென்துகிலைப்
படக்கச்செய்துவிட்டு, தலையசைத்
தேன் மலர்களைத் தழுவிக்கொ
டு. தளிர்கள் விடுசெடிகளிடை
புகுந்தோடி நகர்ந்து சென்றது.

மோனத்தின் திருவுருவா
அமைந்திருந்த இரவினிலே வ
னத்து வீதியிலே உலவி வ
வெண்மதியம் தன்னைப்பூங்காவி
நீர்ச்சுனையில் பிரதிபலித்துக் கா
காட்டிக்கொண்டிருந்தது. தார
கள், சூழ்ந்து நின்று. தண்ணொ
யைத் தரணிக்கெல்லாம் மின்
மின்னி சிந்திக் கொண்டிருந்த
இக்காட்சி, கருநீலப்பட்டுக்
பளத்தை விரித்து; கவினு
வைரக்கற்களைச்சிதறிவிட்டு-அ

றின் நடுவினிலே கண்ணைப் பறிக் கும் வண்ணம் வெண்ணொளி வீசி நிற்கும் வெள்ளித்தட்டு ஒன்றை வைத்துப் பொருத்தியது போல், இளவரசி குர்ஷித் கண்களுக்குத் தோன்றின.

அப்போது, அரசவைக் கவிஞன் குறைஷி, மன அமைதியின் பொருட்டும், உள்ளத்தே எழுச்சி யூட்டி உணர்ச்சிகளை ஒருங்கு கூட்டி கவிதைமாலை தொடுக்கக் கற்பனையைக் கிளறுவதற்காகவும், தனது பொரிப்புன்கின் நிறமொத்த புரவி ஏறி, அவ்வனத்தின் மதிலோரம் வந்திறங்கினான். அமைதியைத் தழுவிக்கொண்ட இயற்கையின் சூழல்களும், எதிரேயிருந்து தன் எழில் காட்டி மனங் கவர்ந்த பொழில் காட்சிகளும் அவனது உள்ளத்திலே ஆயிர மாயிரம் எண்ண அலைகளை எழுப்பிவிட்டன. உயர்ந்த கற்பனைக் கோட்டை யமைக்க சிறந்த பல தோற்றங்களும், இனிய கலை விருந்து படைக்க வனப்புமிக்க பொருள்களும் அவ்வந்தப் புரத்தினுள்ளே வதிந்த மாட்சி அவன் மனத்தினிலே எக்களிப்பைத்தூண்டிவிட்டன. இயற்கையின்பல்வேறு வடிவுகளைக் கவியமுதாய் வடித்தெடுக்கும் கவிவாணனன்றோ? அதன் பால் தன் இதயத்தைப் பறிகொடுத்தான். மதிற் சுவரை ஒட்டியுள்ள மரத்திலே குதிரையைக் கட்டிவிட்டு-ஆடவர் நுழைவு தடுக்கப்படும் அந்தப்புர மென்பதையும் மறந்து-தடை பல கடந்து உள்ளே புகுந்தான்.

பாம்பன்ன நெளிந்து கிடக்கும் பசுந்தளிர்க் கொடிகள், பச்சை மேனியசைத்துப் பால்போன்ற பற்கள் தெரிய நகைக்கும் மல்லிகை மலர்கள், தென்றலிலே தூங்கிடும் தேன் சிந்தும் தீங்கனிகள், பெடையுடனே இங்கிதமாய்ப் பேசுகின்ற புள்ளினங்கள்-இவையே கவிவாணன் குறைஷியை வரவேற்க அங்கே காத்திருந்தன. அப்பூங்காவின் புத்தெழில் பொருள்களை யெல்லாம் மனங்குளிர நோக்கியவாறே, சிந்தனை ஓடத்தை செலுத்திக் கொண்டே மெல்ல நடந்துகொண்டிருந்தான் குறைஷி. இவ்வாறாக, முடிவில் இளவரசி அமர்ந்திருந்த இடத்தையே அடைந்துவிட்டான். எதிரே இருந்த வடிவுச் சிலையை எதிர்பாராமல் கண்டவுடன், வியப்பு அவனது வில்லொத்த புருவங்களை மேலுயர்த்த, ஆனந்தம் அவன் அயில் விழிக்கண்களை அகலச்செய்ய, சிலைபோல் நின்று நெடுநோக்கு செய்தான்.

பட்டுத்துகில் மறைத்திருந்த பால் போன்ற மென்றோளில் அரசியின் பூங்குழல்கள் பரவிக் கிடந்தன. கைப்பிடிச்சுவரிலே தன் மேனியினை சாய்த்தவாறு, மதியொளி மல்கிய நீரிலே மலர்ப் பாதங்களை அலைத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். அவளது இளம் உள்ளத்தில் துயில் கொண்டிருந்த இன்ப நினைவுக் கோட்டத்தின் சிகரத்தை ஏதோ ஒரு மெல்லுணர்ச்சி தொடுவது போன்று உணர்ந்தாள். அந்தோ! இயற்கை யன்னையின் அரவணைப்பிலே அழகு என்பதே அலங்கரிக்கப் படாது தனது உளங்கவர் கள்வனை எண்ணி ஏங்கிய வண்ணம் சிக்கிக்கிடந்தது.

குறைஷியின் உளம் அமைதி யிழக்க, "மன்னிக்க வேண்டும், மாதரசி! தங்கள் அனுமதியின்றி உள்ளே நுழைந்து விட்டேன்" என்று கூறினான். இளவரசி குர்ஷித், திடுக்குற்றெழுந்து திகைப்பும் வியப்பும் மேலிட, நாணம் நெஞ்சை யடைக்க, உவகை வாயை நிரப்ப, பேசுவ தறியாதவளாய் புனையா ஓவியம் போல நின்றாள். கண்களுக்கு விருந்தளிக்கும் பேரழகைத் தன் பிறப்புரிமையாக்கிக் கொண்ட அப்பொற்றொடியாள் தனது விழிகளைச் சுழற்றி வீசி, கவிஞனின் உள்ளத்தைக் கவர்ந்து நின்றாள். குர்ஷித் சற்றுநேரம் குறைஷியை விழுங்கி விடுவது போன்று பார்த்தாள். கொவ்வை இதழ்களில் குறுநகை தவழ, குவளைக்கண்களில் களிப்புக்கண்ணீர்

துளும்பி அதரங்களின் மேல் வழிந்தோடியது. குலைந்து கிடந்த சுருள் கூந்தல் பிறை நுதலைத் தழுவிக் கொண்டு, கீழிறங்கும் கண்ணீரைத் தொட்டுத் தொட்டு விளையாடியது. ஆவலும், அகமகிழ்வும் துள்ளியெழ, குர்ஷித் கருங்குழலைப் பொற்கரத்தால் வருடிக்கொண்டே குறைஷியை நோக்கிவந்தாள்.

"குறைஷீ! கவிதைகளின் காவலரே! எனது கள்ளமிலா கண்களைப் பாரும்; எப்படி நீர் என் கனவிலும், கருத்திலும் இத்தனை நாட்கள் இருந்திருக்கிறீர் என்பது தெளிவுறத் தெரியும்" என்று உணர்ச்சியுடன் தொடர்ந்தாள். "உமது கவிதைகளை அவையில் அரங்கேற்றும்போது, உம் கவித்திறனை அவைக் களத்தோர் பாராட்டிக் கூறும்போது, பொது மக்கள் புகழ்ந்து பேசும் போது—அவற்றையெல்லாம் கண்டும், கேட்டும் இன்புற்றிருக்கிறேன். அவற்றைப் படித்துப் படித்துப் பரவசமெய்தியுள்ளேன். அப்போதெல்லாம், உமதருகிலேயே யான் என்றும் இருந்தால் அதுவே எனக்கு இன்பபுரி—யான் செய்த-பேறு என்று எண்ணுவதுண்டு. இந்த மாளிகையின் மதிற் சுவர்கள், நான் எத்தனை இரவுகள் உம்மையே எண்ணியவாறு இங்கு கழித்துள்ளேன் என்பதற்குச் சான்றுகள் ஏற்கும். இந்த நீரூற்றின் அருகில் நாட்கள் பல காத்திருந்து நம்பிக்கையிழந்தவாறு சென்றிருக்கிறேன். என் இதயங் கவர்ந்தவரே! இறுதியாக இன்றுதான் உம்மைக் கண்டு பிடித்துள்ளேன்" என்று தன் உள்ளக் கிடக்கைகளைக் கூறி முடித்தாள்.

நீல வானிலே நின்றொளிரும்

முழுமதி, தனது நெஞ்சம் கவர்ந்தவளின் வதனத்தின் வடிவை வெல்ல முடியுமா என்று நினைத்தவனைப்போல் குறைஷி, விண்பார்த்த தன் கண்களை, அவள் முகம் பார்க்கத் திருப்பினான். கரிய விளிம்பு வளைக்கப்பட்டு, பால் நிறைய ஊற்றப்

பட்ட இரு கிண்ணங்களில் இரு கருவண்டுகள் வீழ்ந்து கிடந்ததைப் போல் அவளது கண்களின் நடுவேயுள்ள கருவிழிகள் அவனுடைய பார்வைக்குத் தோன்றின.

"எனது நெஞ்சம் புகுந்த நேரிழையாளே! சிந்து பாடும் தென்றல், சிரித்தாடும் மலர்களிடம் காதல் கொஞ்ச பேசிச் செல்கிறது. கயலைப்போல வெண்ணிலவு கடல் போன்ற முகிற் கூட்டத்தில் நீந்திச் செல்கின்றது. நாமோ, நம்மை எதிர்கொள்ளும் இடுக்கண், இன்னலை மறந்து இன்ப ஓடமேறி நேரமென்ற நட்டாற்றில் மிதந்துகொண்டு செல்கிறோம். இனியும் நாம் இதுபோல் சந்திப்போமா, என்று நினைந்து நினைந்து ஏங்குகிறேன். என் சிந்தை கவர்ந்த செண்பக மலரே! சற்று நேரம் இப்படி அமர்வோமா?" எனக்கூற, பழுதிலா அன்பு பூண்ட பதுமையும், அவனும் அங்கே பொழுது கசர்வதையும் அறியாது, மனமகிழ்ச்சி வழிய பற்பல பேசிக் கொண்டிருந்தனர். தடாகத்துத் தண்ணீரின் சிற்றலைகள் அடுத்தடுத்து சென்றதினால் சலசல வென்றெழும் ஒலிகள் இன்னிசை பாடிடவும், மேற்பரப்பில் வீழ்ந்து மிதந்திடும் மலர்கள் சதிராடும் மங்கையர்போல் அசைந்தாடிச் சென்றிடவும் அவர்களுக்கு இஃதொரு கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

திடீரென அந்தப்புரத்தின் வாயிற்படிகளிலே வன்மையான பாதவடிகளின் ஒலி கேட்டு, இருவரும் மருண்டெழுந்தனர். அரசன் — அஹமத் பாஷா-அன்றிரவு தனது இன்பக்களியாட்டங்களை முடித்த பின்னர், ஓய்வு எடுத்துக்கொள்ளும் பொருட்டு அந்தப் பூஞ்சோலைக்குள் வந்து கொண்டிருந்தான். மங்கலான ஒளியில் மன்னவனின் உருவம் சற்று சேய்மையில் வந்து கொண்டிருப்பது இருவருக்கும் புலப்பட்டது. புலிபோல் நின்ற காளைக்கும், பூங்கொடிபோல் நின்ற மாதுக்கும் கிலி உடலை உலுக்க, கொற்றவனின் பார்வையில் படாது மறைந்தோடும் முடிவிற்கு வந்

> மரணம் என்பது ஒரு கடன். அந்தக் கடனை எல்லோருமே கொடுத்துத் தான் தீரவேண்டும். பிறகோர் நாள் தருகிறேன் என்றோ, முடியாது என்றோ கூறவியலாது. —ஷெரிடன்.

தனர்...... ஆனால், அந்தோ! அரசனுடைய கண்களுக்கு இருவரும் முட் செடிகளையும் மலர்க் கொடிகளையும் விலக்கிக் கொண்டு விரைந்துசெல்வது தென்பட்டு விட்டது.

"நள்ளிரவிலே, அந்தப்புரத்தில் அந்நியர்கள் நுழைவா!"

அவனுக்கு வியப்பும், கோபமும் கலந்து ஏற்பட்டன. விடுவிடென ஓடிச்சென்று சிறிது நேரத்தில் கையில் துப்பாக்கிக் குழல்கள் மின்ன திரும்பி வருவதற்கும்; அவர்களிருவரும் மதில் மீதிருந்து அப்பால் குதிப்பதற்கும் சரியாயிருந்தது. உடனே அந்த இடத்தைக் குறிவைத்து இருமுறை சுட்டான். இரவென்னும் மங்கை நல்லாள், அமைதி என்ற போர்வையால் தன் மேனி முழுதும் மூடியிருந்த அந்தவேளையில், துப்பாக்கியின் அதிரொலிகள் அப்போர்வையை சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தன.

∴ ∴ ∴

புள்ளினங்கள் மகிழ்வுடனே பண்ணெழுப்பிப் பறந்தோட, பகலவன் தன் பொற் குழம்பை பார் முழுதும் குழைத்துத் தீட்ட பொழுது புலர்ந்தது. காவலனின் ஏவலாளர்கள் துப்பாக்கியின் குண்டுகளுக்கு இலக்காகிய இடம் நோக்கி விரைந்தனர். ஆனால், மாறாக, குருதியைக் குளமாகத் தேக்கி ஆங்கேயொரு வெண் குதிரை மிதந்து கொண்டிருந்ததையே கண்டனர்! உள்ளம் ஒன்றிய அவ்விரு சோலைக் குயில்களும் விறு கொள்ள முடியாத தங்கள் வெற்றிக் கோட்டத்திற்குப் பறந்தோடி விட்டன.

பொற்கொடியாள்

★

அக்டோபர் இதழில் "மறக்க வில்லை மனைவிளக்கே" என்று கணவன் எழுதிய கடிதத்துக்கு மனைவி எழுதும் பதில்;

★

அத்தானே உங்கள்
அன்பு மடல் கண்டேன்,
வித்தை பல கற்றும்
விழற்பாதை சென்றீரோ ?

நானின்றேல் சாந்தியில்லை
நலமில்லை வளமில்லை
தேனிலவில்லா இரவாய்த்
துவள்கின்றீர் என நவின்றீர் !

நன்மனையாம் உம்மகத்தில்
நந்தா ஒளி விளக்காம்
என்னுருவம் எனவுரைத்தீர்
ஏனத்தான் அதை மறந்தீர் ?

இலைமீது பனிபோல்த்தான்
இல்லறத்தின் நற்றொடர்போ
புலிதான் பசித்தாலும்
புல்லதனை உண்டிடுமோ ?

என்பிரிவால் உமதுள்ளம்
ஏங்கிடுமேல் நானன்றிப்
புன்மதியாள் ஒருத்தியதைப்
பூர்த்திசெயக் கூடுவதோ ?

பொருள் தேடப் பரதேசம்
போவோர், இவ்வாறாய்
இருள் சூழும் வழிச் சென்றால்
எம்கதிதான் ஏதத்தான் ?

கற்பொழுக்கம் தனைக்காத்துக்
கன்னியரும் உரிமையுடன்
பொற்புறுவாழ் வேந்திட நீர்
புரியும்துணை இதுதானோ ?

ஆயிரங்கல் சென்றாலும்
அகம்நிறைந்தாள் தனைமறந்து
சேயிழையார் மயக்கதனாற்
சிந்தைதடு மாறுவதோ

ஆண்களெனில் அன்றலர்ந்த
அணிமலரின் தேன்விரும்பி
வேண்டிடும் போதருந்து மந்த
வண்டென்று நினைக்கின்றீர் ?

உமைப் பிரிந்த கவலையுளம்
எழுந்தெனையே
எரித்திடும்போ(து)
உமைப்போல நானுமொரு
துணைதேடல் உவப்பீரோ ?

மனம்போன போக்கதனில்
மாதவளின் எழில் மயக்கில்
வனவிலங்காய் மாறிவிட்டீர்
வரித்தவளை கைவிடுத்தீர் !

நிலையென்ன ?

எம். ஸி. எம். ஸுபைர்

என்னகத்தில் அமுதிறைக்கும்
எழிலுருவே ! என்னத்தான்,
பெண்ணவளை விரட்டியதால்,
பெருமைபட்டு எழுதிவிட்டீர் !

என்றாலும் அதைத்தான் நான்
ஏற்றிடவே மறுக்கின்றேன்.
நன்றுமது சிந்தனையை
நடத்தியன்று ஆய்ந்திடுவீர் !

என்னுள்ளத்தையே எரித்தீர்
ஏந்தியுமைத் தான்வளர்த்த
அன்னையகத் தனல்கொடுத்தீர்
அவற்றை நினைந்தழுகின்றீர் !

கற்பையே இழந்தும்மால்
கதியின்றி நிற்குமந்தப்
பொற்கொடியாள் நிலையென்ன ?
பூமானே எண்ணிடுவீர் !

நிலையிழந்தாள் என்றவளை
நெஞ்சமிலார் தூற்ற, நிதம்
விலைமகளாய்த் தன்னுடலை
விற்பதற்கா விரட்டிவிட்டீர் ?

நெறியொன்று நான் சொல்வேன்
நீரிழைத்த குற்றத்தை
பொருத்தருள இறைவனைத்தான்
பொழுதெல்லாம் இரந்துருகும்.

உம்மை நம்பி உளம் தந்து
உடல்தந்த வனிதையையும்
உம்முடனே அழைத்து வந்து
உம்மவளாய்ச் செய்திடுவீர் !

பிழையுணர்ந்து திருந்தியதால்
பெருமனமாய் உமைப்பொறுத்து
வழி தவறி உமைவரித்தாள்
வாழ்வுபெற ஏற்றிடுவேன் !

என்னருமைச் சோதரியாய்
ஏற்றவளோடு உங்களையும்
அன்புடன் நான்வரவேற்க
ஆரத்தி யேந்திடுவேன் !

வருவீர் எழிலரசே !
பிழையுணர்ந்து திருந்துதலே
தரும்வாழ்வு என உணர்ந்தோம்,
தயக்கமின்றி வாழ்ந்திடுவோம் !

நான் அறிந்த இஸ்லாம்

எஸ். சுந்தரமூர்த்தி

26. திருநபியும் திருமறையும்

திருமறையிலே பல இடங்களில் நூஹ், மூசா, முஹம்மது (ஸல்) ஆகிய நபிமார்கள் இறைவனிடம் தங்களைத் தடுத்தாட் கொண்டு நல்வழி காட்டித் தங்கள் குற்றங் குறைகளை மன்னித்தருளும்படி வேண்டிக் கொண்டதாகக் காண்கின்றோம். அவைகளைக் கொண்டு, நபிமார்கள் தூய்மையானவர்கள் அல்ல என்றோ, பாவம் செய்துவிட்டுப் பாவ மன்னிப்பைக் கோரியவர்கள்தான் என்றோ நாம் நினைப்பது தவறு. "நான் அறியாதவைகளை அறியும் பொருட்டு உன்னிடமே தஞ்சம் அடைகின்றேன். நீ இரக்கம் கொண்டு என்னை மன்னித்துப் பாதுகாக்காவிட்டால் நான் இழந்தவர்களுள் ஒருவனே ஆவேன்" (11 : 47) என நூஹ் (அலை) கூறியதாகக் காணப்படுகின்றது. இதிலிருந்து நூஹ் (அலை) தாம் முன்னர் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்வதாக நாம் நினைத்தல் கூடாது. நபி இப்ராஹீமும் தமது குற்றங்களைத் தீர்ப்பு நாளன்று இறைவன் மன்னித்து விடுவான் என்று நம்பிக்கொண்டு இருந்ததாகக் கூறப்படுகின்றது. (26 : 82) இறைவனுடைய ஆணையை மீறி நடப்பது வேறு; சிறு தவறுகள் செய்தல் வேறு இரண்டும் ஒன்றாகாது.

"பாவங்களிலிருந்து என்னைக் காப்பாற்று" என்று வேண்டிக் கொள்ளுதல் பாவம் செய்ததாகாது. பல இடங்களில் இவ்வாறே முஹம்மது நபி (ஸல்) அவர்களும் இறைவனை வேண்டிக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது (40 : 55). அவர்களின் வேண்டுகோளுக்கு இறைவன் அளித்த மறுமொழியாகக் காணப்படும் பின்வரும் வாக்கியம் ஊன்றி கவனிக்கத்தக்கதாம்.

"நாம் உமக்குத் தெளிவான முழு வெற்றியை அளித்துள்ளோம். உம்மைப்

பற்றி இது வரையில் கூறப்பட்ட அவதூறுகளிலிருந்தும், பின்னர் கூறப்படுபவைகளிலிருந்தும் அல்லாஹ் உம்மைக் காப்பாற்றுவான்.'' (48 : 1, 2). முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தமது பகைவர்களுடன் "ஹுதைபியா" என்ற இடத்தில் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையையே இது குறிப்பதாகத் தெரிகின்றது. அதற்கு முன்பு பகைவர்கள் திருநபியவர்களைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளாமல் பலவாறாகத் தூற்றி வந்தனர். உடன்படிக்கைக்குப் பின் அன்னாருடன் நன்கு பழகக் கிடைத்த வாய்ப்பினால் அவர்கள் உண்மையை உணர்ந்து திரு நபி அவர்களின் பெருமையை அறிந்து கொண்டனர். பழிப்பதையும் நிறுத்திக் கொண்டனர். பின்னர் கூறப்படும் பழிகள் என்பன பிற்காலத்தில் நபிகள் நாயகத்தைப் பற்றிப் பிறர் கூறும் வசை மொழிகளே யாகும். அவைகளும் பயனற்றவைகளாகி விடும் என்று இறைவன் கூறியுள்ளான்.

ஆதம் (அலை) இறைவனுடைய கட்டளையை மீறினாலும் அவர் அப்படிச் செய்தது மறதியாலேயே என்றும், வேண்டுமென்றே அவ்வாறு செய்யவில்லை என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (20 : 115). அதனால் அவரும் பாவம் செய்ததாகக் கூற முடியாது. இவைகளிலிருந்து, இறையடியார்கள் பலரும் தூய்மையானவர்கள், பாவம் செய்யாதவர்கள் என்றே திருமறையில் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கின்றோம்.

ஈசா (அலை) போன்ற நபிமார்கள் செய்ததாகக் கூறப்படும் அற்புதச் செயல்களைப் போன்று எதுவும் முஹம்மது அவர்களால் செய்யப்பட்டதாகக் கூறப்படவில்லை. இவ் அற்புதங்களைக் குறிக்க உபயோகப்படும் 'ஆயத்' என்ற சொல்லே தெய்வீகச் செய்தியையும் குறிக்குமாறு திருமறையில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் இறைவனால் அருளப்பெற்ற திருகுர்ஆனே ஒரு அற்புதம் என அறிந்து கொள்ளலாம். நபிமார்கள் பலரும் செய்ததாகக் கூறப்படும் அற்புதங்கள் பலவற்றுள்ளும் திரு குர்ஆனே சிறந்த அற்புதம். ஏனெனில், அது இன்றுவரை வேறு சாட்சியங்கள் எதுவும் தேவையின்றித் தன் மாட்டுள்ள உண்மைகளைத் தானே அறிவுறுத்திக்கொண்டிருக்கின்றது. அதனுடைய உண்மைக்கு அதுவே நிலைத்து நிற்கும் சான்றாக இருக்கின்றது. சாதாரண அற்புதங்கள் மனிதனுடைய பகுத்தறிவைத் தூண்டாமல் அவனை மயங்கச் செய்து மனமாற்றம் அடையச் செய்கின்றன. ஆனால் திருகுர்ஆனோ தான் கூறும் ஒவ்வொரு உண்மைக்கும் ஆதாரங்களையும் தன்னகத்தே கொண்டு பகுத்தறிவுக்கு ஏற்றதாக அமைந்திருக்கின்றது. பகுத்தறிவுள்ள ஒவ்வொருவனும் ஒத்துக்கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளது. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்களினத்தை முன்

னேற்ற வேண்டியே அவதரித்தார்கள். எனவே அவர்கள் மக்களின் இதயத்தைத் தொடும்படியே பேசினார்கள். மக்களுடைய பகுத்தறிவைத் தூண்டி, இறைவனுடைய ஞான வெளிப்பாடுகள் மக்களின் நன்மைக்கே என்பதைப் பல ஆதாரங்களுடன் விளக்கியதுடன், பழங்காலத்தில் இறைவனுடைய தெய்வீகச் செய்திகளை ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்தவர்கள் பெருமையுற்றதையும், அவற்றை மதியாதவர்கள் தாழ்மையுற்றதையும் விளக்கி, மக்களைத் தம் மீது நம்பிக்கைக் கொள்ளும்படிச் செய்தார்கள். நபிமார்கள் தோன்றியது மக்களினம் ஆத்மீகத் துறையில் முன்னேறும் பொருட்டே என்றும், அதற்கு அவர்கள் பல துறையிலும் உழைத்தனர் என்றும், நோக்கம் தான் முக்கியமே தவிர மார்க்கங்கள் அல்ல என்றும் நபி நாயகம் அவர்கள் மொழிந்துள்ளார்கள். அம்மார்க்கங்களில் ஒன்றே அற்புதங்களைச் செய்ததும். அதுவே சிறந்த மார்க்கம் என்று கூற முடியாது. அற்புதங்கள் யாவும் இறைவனிடமே உள்ளன என்றும், இறைவன் விரும்பும் போது அவைகள் வெளிப்படுத்தப்படும் என்றும் திருமறையில் கூறப்பட்டுள்ளது. (6 : 110) இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியது யாதெனில் திரு நபியின் விருப்பப்படியோ அல்லது அவர்களுடைய பகைவர்களின் விருப்பப்படியோ அல்லாமல் இறைவன் நினைத்தபோது அற்புதங்கள் வெளிப்படுத்தப்படும் என்பதும், அவை திருநபியின் உண்மைகளை நிலை நிறுத்தும் என்பதுமே யாகும்.

"ஜின்களும், மனிதர்களும் சேர்ந்து முயன்றாலும் திரு குர்ஆனைப் போன்ற ஒன்றை அவர்களால் இயற்ற முடியாது" (17 : 88) என்றும், "யாம் எம் அடியார்க்கு வெளிப்படுத்தியவைகளில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், அதிலுள்ள ஒரு பகுதியைப்போல் நீங்கள் இயற்றுங்கள் பார்க்கலாம்" (2 : 23) என்றும் திருமறையில் கூறப்பட்டுள்ளன. பாஸ்வொர்த் ஸ்மித், ஹிர்ஷ் பீல்டு முதலிய பிற்கால ஆசிரியர்களும் திரு குர்ஆனின் பெருமையை உணர்ந்து அதை "மிகச் சிறந்த அற்புதம்" எனப் புகழ்ந்துள்ளனர். உலகம் கண்டிராத மாற்றங்களை, மக்களின் மன மாற்றங்களை, குடும்ப, சமூக, தேசிய மாற்றங்களைத் திருகுர்ஆன் செய்துள்ளமையால் அது இஸ்லாத்தின் சிறந்த அற்புதம் எனப் புகழப்படுகின்றது. அன்றியும் உலகத்து நபிமார்கள் பலரும் செய்ததாகக் கூறப்படும் அற்புதச் செயல்கள் பலவற்றுள்ளும் தலை சிறந்தது மகான் முஹம்மது நபி (இறைவனின் அருளும் சாந்தியும் அவர் மீது பொழிவதாக!) அவர்களின் மூலம் இறைவன் அருளிய திரு குர்ஆனே யாகும்.

திருமறையில் பின்னால் நிகழ இருக்கும் பல செய்திகள் முன்னதாகவே கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று இஸ்லாத்தின் வெற்றி யாகும். திரு நபியும் அவர்களின் தோழர்களும் தம் பகைவருக்கு அஞ்சி

மறைந்து வாழ்ந்த நாட்களில் தோன்றிய வாக்கியங்களிலேயே இஸ்லாத்தின் வெற்றியைப் பற்றிப் கூறப்பட்டுள்ளது. அவை யாவும் பின்னர் உண்மையாகவே நிகழ்ந்தன. தம் பாதுகாப்புக்கே ஊரை விட்டு ஓட வேண்டிய நேரத்தில் 'இஸ்லாம் மாபெரும் வெற்றியடையும்; வலியவர்களாகத் தோன்றும் பகைவர்கள் மெலியவர்களாவார்கள்; திரு நபியின் தோழர்கள் வெற்றியுடன் நாடு முழுவதும் இஸ்லாத்தைப் பரவச் செய்வார்கள்' என்பன போன்ற வாக்கியங்கள் சிறிது காலத்திலேயே பலித்து விட்டன. நபிகள் பெருமானின் வாழ்நாளுக்குள்ளேயே இஸ்லாம் பெரும் வெற்றியை அடைந்தது. அதன் பின்னரும் மேலும் மேலும் வெற்றியை அடைந்து உலக மக்களின் இதயங்களைக் கவர்ந்தது. அற்புதங்கள் நிகழ்ந்த காலத்தில் இருந்த மற்றவர்கள் அதைப் பற்றிக் கூறியிருந்தால் தான் பிற்காலத்திய மக்கள் அதை நம்பமுடியும். ஆனால் இத்தகைய முன்னறிவுப்புக்கள் பிறகு உண்மையாகவே பலித்து விட்டமைக்குச் சரித்திரச் சான்றுகள் உள்ளன. அற்புதங்களை விட இத்தகைய முன்னறிவுப்புக்கள் பிற்கால மக்களுக்குச் சிறந்தவழிகாட்டிகளாக உள்ளன.

தீர்ப்பு நாளன்று மக்களுக்காகப் பரிந்து பேசி அவர்கள் இறைவனுடைய அன்பையும் அருளையும் பெற வானவர்கள் உழைக்கின்றனர் என்பதை முன்னரே அறிந்திருக்கின்றோம். அதுபோலவே நபிமார்களும் மக்களினத்திற்காக இறைவனிடம் பரிந்து பேசுகின்றனர். இறைவன் அவர்களுக்கு அருள் செய்ததைப் போலவே பிறருக்கும் அருள் புரிய வேண்டுமென்று வேண்டுகின்றனர். மக்களினத்தின் முன்னேற்றமே இறைவனுடைய நோக்கம்.

இறைவன் பழிக்குப் பழி வாங்கும் ஒரு சாதாரண நீதிபதி போன்றவன் அல்ல. மக்களினத்தின் நலமே, முன்னேற்றமே கருதும் பேருளாளன்; பேரன்புடையோன்.

உலகத்தை உய்விக்க வேண்டி இறைவன் தன் பேரருளால் ஒவ்வொரு நாட்டிலும் மெய்யடியார்களைத் தோற்றுவித்தான். அவ்

முஸ்லிம் முரசு

சந்தா விபரம்

(ஈத், மீலாத் மலர்களுடன்)

உள் நாடு

இந்தியா, சிலோன்

தனி இதழ்	0	6
ஒரு வருடம்	4	8
அரை வருடம்	2	8
2 வருடம்	8	8

வெளி நாடுகள்

தனி இதழ்	0	8
ஒரு வருடம்	6	0
2 வருடம்	11	0

ஒரு வருடத்திற்குக் குறையாத சந்தா செலுத்துகிறவர்களுக்கு மட்டுமே ஈத். மீலாத் மலர்கள் குறைந்த விலைக்கு அனுப்பப்படும். இலங்கை நேயர்கள் வி.பி. மூலம் சந்தா செலுத்தலாம்.

மானேஜர்.

முஸ்லிம் முரசு

18, ராமசாமித் தெரு, மண்ணடி

சென்னை-1.

வப்போது தோன்றிய அடியார்களின் உபதேசங்கள் பின்னர் மக்களால் திரித்துக் கூறப்பட்ட போது, பின்னும் உலகமுழுமைக்கும் பொதுவான ஒரு நபியைத் தோற்றுவித்து மக்களினத்தை ஒன்று படுத்தும் பணியில் உழைக்கச் செய்தான். மக்களினத்திற்கு வேண்டிய உண்மைகள் பலவற்றையும் முன்னர் தோன்றிய நபிமார்கள் கூறிய உண்மைகளையும் தொகுத்து அளிக்கச் செய்தான். இனி வேறு நபிமார்கள் தோன்ற வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவ்வப்போது சீர்திருத்த வாதிகள் தோன்றுவர் என நபி நாயகம் அவர்களே மொழிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (அபூதாவூது 36 : 1). அடிக்கடி மாறிவரும் உலக சூழ்நிலைகளில் முஸ்லிம்கள் செய்ய வேண்டியவைகளைப்பற்றி அந்தச் சீர்திருத்தவாதிகள் கூறுவதுடன், அவ்வப்போது முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களில் புகும் குற்றங்குறைகளை நீக்கவும் அவர்கள் முயற்சி செய்வார்கள்.

(தொடரும்)

மலாயா நண்பர்களுக்கு

பினங்கு, மலாயன் ஹோமியோ ஸ்டோர்ஸில் பணியாற்றி, மலாயா முழுதுமுள்ள பல ஆயிரக் கணக்கான, அன்பர்களின் நோய்களுக்குச் சிகிச்சை யளித்து குணப்படுத்திய, ஹோமியோபதி டாக்டர், ஏ. குலாம் ரசூல், M .H. P. A. (London) அவர்கள். சில முக்கிய காரியங்களின்நிமித்தம் இந்தியாவுக்கு வந்து, எங்கள் காரியாலயத்தில் தங்கி இருக்கிறார்கள். ஏற்கனவே அவர்களிடம் சிகிச்சை செய்து கொண்டவர்கள், அவசியமானால், கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

புதிதாக சிகிச்சை செய்து கொள்ள விரும்புகிறவர்களும், எங்களுக்கு விவரம் எழுதி, பார்சல் மூலமாக மருந்துகளைப் பெற்று சிவர்த்தி பெறலாம்.

இருமல், இளைப்பு, ஆஸ்த்மா, இருதய பலஹீனம், தாது நஷ்டம், நரம்புத் தளர்ச்சி, இந்திரியம் நீர்த்துப்போதல், துரித ஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம், ஆண்குறி துவண்டு சுருங்கிப் போதல், பெண்களுக்கான தடைபட்ட குறைந்த, தாமதித்த, வலியுள்ள மாதவிடாய், பெரும்பாடு, வெள்ளைப் போக்கு, இடுப்புவலி ஆகிய நோய்களும், மூலம், பவுத்திரம், சூலை, வயிற்றுவலி, போன்ற நாள்பட்ட, பிறரால் தீராதெனக் கைவிடப்பட்ட நோய்களும் சுலபமான, அபாய மற்ற முறையில், குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்யப்படும். பதில் வேண்டுவோர், இரண்டு ஷில்லிங் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும்.

MADRAS HOMOEOPATHIC FOUNDATION
BIG STREET, RAJAGHIRI
SOUTH INDIA

இந்தியாவிலே முதன் முதலாக இஸ்லாத்தைத் தழுவிய தென்னாட்டு மன்னன்

சேரமான் பெருமாள்

"மஹதி"

தென் இந்தியாவின் மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு அப்பால் உள்ளது சேர நாடு. 'சேரலர்' என்றால் மலைத் தொடர்ச்சியைச் சேர்ந்த நாட்டுடையவர் என்பது பொருள். சேரலர் என்ற சொல்லே சேரர் என்று சுருங்கிற்று; பிற்காலத்தில் கேரளர் என்றும் திரிந்தது.

சேர நாடு பன்னிரண்டு உட் பிரிவுகளைக் கொண்டிருந்தது.

1. பூழி—(வட மலபார்)
2. குசம்—(தென் மலபார்)
3. மங்கலாபுரம்—(மங்களூர்)
4. குளத்து நாடு—(சிரக்கல்)
5. வள்ளுவ நாடு—(மேற்கு நீலகிரி)
6. ஏர நாடு—(கள்ளிக் கோட்டை)
7. கற்கா—(பாலக்காடு)
8. குட்ட நாடு—(கொச்சி)
9. வெங்கா நாடு—(கொல்லங் கோடு)
10. ஒட்ட நாடு—(காயங்குளம்)
11. வேணாடு—(திருவனந்தபுரம்)
12. நாஞ்சில் நாடு—(நாகர் கோயில்.)

சேர நாட்டு மன்னர், இமயம் வரையும்—அதற்கு அப்பால் உள்ள திபேத்தையும் வென்று தமது கொடியை நாட்டியவர். இக்காரணம் பற்றி, சேரருக்கு இமய வரம்பர், வான வரம்பர் என்ற பட்டங்கள் வழங்கலாயின.

கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு யிரம் ஆண்டுகளுக்கு முன், பரசுராமர் என்ற வட நாட்டு ஆரியர், தம்முடைய மரபைச் சேர்ந்த 64 குடும்பங்களை அழைத்துக்கொண்டு சேர நாடு வந்தார். சேர நாட்டு மன்னன், அவருக்கு ஆதரவு அளித்து வள மான 64 கிராமங்களையும் தான மாக வழங்கினான். அப் பரசு ராமரின் வழித் தோன்றல்களே தற்போது மலையாளத்தில் வாழும் நம்பூத்திரிப் பிரா மணர்கள்.

நம்பூத்திரிகள் ஒன்று கூடித் தங்களுக்குள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து ஆண்டனர். ஆட்சி சீராக நடைபெறவில்லை. கலகங்களும், குழப்பங்களும் விளைந்தன. ஆகையால் கொங்கு நாட்டை (கோயமுத்தூரை) ஆண்டு வந்தவர்களின் பரம்பரையில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து "பெருமாள்" என்று பட்டம் வழங்கி நாட்டை ஆளும்படி ஏற்பாடு செய்தனர். அப்பெருமாள்களில் மூன்றும் சேரமான் பெருமாள் என்பவரைப் பற்றியே இங்குக் கூற விரும்புகிறேன்.

மூன்றும் சேரமான் பெரு மாள் என்பது பட்டப் பெயர். இயற் பெயர் பாஸ்கர ரவிவர் மன். அவருடைய வாழ்க் கைத் துணைவியாரின் பெயர் செரோட்டி அம்மாள். சேரர் வீட்டு அம்மாள் என்பதே இவ் வாறு மருவிற்று.

சேரமான் பெருமாள் கி. பி. 794-ஆம் ஆண்டில் பட்டத்துக்கு வந்தார். அப்போது முஸ்லிம் கள் சேர நாட்டில் மிகுதியாகக் குடியேறி யிருந்தனர். முஸ்லிம் களிடம் பெருமாள் அன்பு காட் டினார். முஸ்லிம்களும் பெரு மாளை நேசித்தனர்.

சிறுகச் சிறுக இஸ்லாமியப் பண்பாடு சேரமான் பெரு மாளின் உள்ளத்தைக் கவர்ந்தது. நபிகள் நாயகம் (சல்) அவர்களைப் பற்றியும் திருகுர்ஆனைப்பற் றியும் முஸ்லிம்களிடம் கேட்டுத் தெரிந்து வந்தார்.

இச் சமயம் பக்தாதில் கலீபா மாமூன் அல் - ரஷீத் அவர்கள் சிறப்பாக ஆட்சி செய்து கொண் டிருந்தார். அவர் புகழ் கடல் கடந்த நாடுகளில் எல்லாம் பரவி யிருந்தது. முஸ்லிம்கள் உல கெங்கும் வழிகாட்டிகளாகவும், தலைவர்களாகவும் கருதப்பட்ட னர். சேரமான் பெருமாள் அரப் நாடு செல்லவும் கலீ பாவைக் காணவும் பெரு விருப்பங் கொண்டார்.

தற்செயலாக அப்போது சிலோனிலுள்ள ஆதம் பாவா மலைக்குப் போவதற்காக சேர நாட்டில் வந்திறங்கிய ஹஜ்ரத் மலிக் பின் தீனார் (ரஹ்) அவர் களும் அவருடைய உறவினரும் சேர நாட்டின் தலைநகரான கொடுங்கோளூருக்கு வருகை தந்தனர். அவர்களை அமோக மாக அரண்மனையில் வரவேற்று மரியாதை செய்தார் சேரமான் பெருமாள். ஹஜ்ரத் மலிக் பின் தீனார் (ரஹ்) அவர்களிடம் இஸ் லாத்தைப் பற்றி நன்கு கேட்டுத் தெரிந்து கொண்டார்.

சேரமான் பெருமாள் ரகசிய மாக முஸ்லிமாகி விட்டார் என்ற வதந்தி நாடெங்கும் பர விற்று. நம்பூத்திரிகள் ஒன்று கூடி, இனி அவர் ஆளத் தகுதி யற்றவர் என்று தீர்மானித்த தோடு, அப்போது பாண்டிய நாட்டை ஆண்டுவந்த மூன்றும் வரகுண பாண்டியனைத் தூண்டி, பெருமாள் மீது போர் தொடுக் கச் செய்தனர்.

விழிஞம் என்ற இடத்தில் பாண்டியன் பெருமாளைத் தோற் கடித்தான். விழிஞம், திரு வனந்தபுரத்திலிருந்து பத்துக் கல் தொலைவிலிருந்த ஒரு துறை முகப் பட்டினம். அது பின்னால் கடற் கோளால் அழிந்தது. மக்களில் ஒரு சாரார் தமக்கு விரோதமாக இருப்பதை உணர்ந்த சேரமான் பெருமாள், பட்டத்தைத் துறந்து அரப் நாடு சென்றுவிடத் தீர்மானித்தார். தமக்குப் பிள்ளைகள் இல்லாத தால் நாட்டைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்து வேணாடு ஒட்ட நாடுகளை இரண்டாம் சேரமான் பெருமாளின் மகனுக் கும், ஏர நாட்டைத் தம்முடைய தம்பி மக்களுக்கும், குட்ட நாட் டைத் தம் சகோதரிகள் ஐவருக் கும், ஏனைய ஒன்பது பகுதி களைச் சுற்றத்தார், நண்பர்கள்,

...லக்காரர்கள் முதலியோருக்
...ம் பங்கிட்டுக்கொடுத்துவிட்டு,
...ர் இரவு பௌர்ணமியன்று அர
...பருடன் கப்பலேறி யாருக்கும்
...தரியாமல் அரப் நாடு சென்று,
...ஷஹர்" என்னும் துறைமுகப்
...ட்டினத்தில் இறங்கினார்.
...ங்கே அவர் முஸ்லிமாகி "அப்
...ர் ரஹ்மான் சாமிரி" என்று
...பயர் வைத்துக்கொண்டார்.

சின்னாட் கழித்து, மலிக்பின்
...னார் (ரஹ்) அவர்களை சேர
...ட்டுக்கு அனுப்பி இஸ்லாமியப்
...ரசாரம் செய்யவும், பள்ளி
...சல்கள் கட்டவும் ஏற்பாடு
...சய்தார் சேரமான் பெருமாள்.
...வருடைய சிபாரிசுக் கடிதத்
...தக் கொண்டுவந்த அரபியரை
...ள்ளிக் கோட்டை ஜாமொரின்
...கவும் மரியாதையுடன் வர
...வற்று வேண்டிய வசதிகளைச்
...சய்து கொடுத்தார்.

இஸ்லாமியப் பிரசாரம் தீவிர
...க மலையாளத்தில் நடைபெற்
...து. பள்ளிவாசல்கள் கட்டப்
...பற்றன. பாங்கொலி எங்கும்
...ழங்கத் தொடங்கிற்று. எல்
...ம் ஜாமொரின் ஆதரவின் கீழ்
...ந்தமாக நடைபெற்றன. இவ்
...றாக இஸ்லாம் இந்தியாவில்
...ரவலாயிற்று. இஸ்லாம்
...ளால் பரத்தப்பட்டது என்று
...றுதலாக நினைப்போர் இச்
...பவங்களை நெஞ்சில் நிறுத்த
...ண்டும்.

முஸ்லிம்கள் தங்கள் சீரிய
...ழக்கத்தினாலும், பண்பாட்டி
...லும் மக்கள் உள்ளங்களில்
...ம் பெற்றனர். எங்கும்
...யாதையுடன் வரவேற்கப்பட்
...னர். அவர்களுடைய சாந்த

தாருல் இஸ்லாம் ஆசிரியர்
அல்ஹாஜ் பா. தாவூத்ஷா
சாஹிப் எழுதிய

இஸ்லாம் (படங்களுடன் 11-ம் பதிப்பு)	3	0
அம்மபத் (மொழி பெயர்ப்பு மட்டும்)	1	8
திருமணமும் பிரிவினையும் (நிக்காஹ், தலாக் சம்பந்தமான இஸ்லாமிய சட்டதிட்டங்கள்	2	8
நபிகள் நாயக மான்மியம் (விரிவான வரலாறு) முதற்பாகம் ரூ.	12	0
மஹான் முஹம்மது நபி	1	12
நாயகத்தின் நற்குணங்கள்	2	4
அபூபக்ர் (ரலி) சரிதை	2	0
உமர் (ரலி) ,,	2	4
உதுமான் (ரலி) ,,	1	8
அலீ (ரலி) ,,	2	4

★

ஆர். பி. எம். கனி எழுதிய
ஹஜ்ரத் கௌதுல் அஃலம்

முதல் பாகம்	5	0
,, இரண்டாம் பாகம்	3	0
,, மூன்றாம் பாகம்	2	0
,, நான்காம் பாகம்	2	12
ஹஜ்ரத் குத்புல் ஹிந்த்	2	8
பாரசீகப் பெருங் கவிஞர்கள்	3	12
கஷ்புல் கஸ்லானி	2	4
மிஷ்காத்துல் அன்வார்	1	4
பிழையிலிருந்து விடுதலை	1	4
திப்ப நபவிய்யி	1	12
குலாஸதுத் தஸானிப்	1	0
மகாகவி இக்பால்	3	0
எம்பெருமான் பேசுகிறார்கள்	2	0

★

அன்பு நூல் நிலையம்,
18, ராமசாமி தெரு.
மண்ணடி, சென்னை-1.

மான பிரசாரத்தை மக்கள் ஆவ லுடன் கேட்கலாயினர்.

ஹஜரத் மலிக் பின் தீனார் (ரஹ்) அவர்கள் விரிவாக இஸ் லாத்தைப் பரப்பிய பின் அரப் நாடு சென்று விட்டார். அவ ருடைய மருகரான ஹஜரத் "இப்னு ஹபீப்" குடும்பத் துடன் கொய்லாண்டி எனும் ஊரிலேயே இஸ்லாமியப் பிரசா ரத்திற்காகத் தங்கி விட்டார். இன்றும் அவருடைய வழித் தோன்றல்கள் கொய்லாண்டியி லும் பொன்னானியிலும் வாழ் கின்றனர். "தங்கள்" என்று அவர்கள் சிறப்பாக அழைக்கப் பெறுகின்றனர்.

கள்ளிக்கோட்டை ஜாமொரின் களும், குளத்திரி, சிரக்கல் குறுநில மன்னர்களும் முஸ்லிம் களுக்கு அளித்த அமோக ஆதர வால்தான் மலையாள மெங்கும் இஸ்லாம் பரவிற்று. நம்பூத் திரிப் பிராமணர்களுக்கு இணை யான கௌரவத்தை முஸ்லிம் கள் பெற்றார்கள். ஜாமொரின் களின் பல்லக்கிலேயே சரிசம மாக முஸ்லிம்கள் உட்கார்ந்து சென்றனர். ஜாமொரின்களுக் குப் பட்டம் கட்டவும் முஸ்லிம் களே நியமிக்கப்பெற்றனர்.

'ஷஹர்' எனும் அரப் நாட் டின் துறைமுகப் பட்டினத்தில் இறங்கிய சேரமான் பெருமாள், கொஞ்சகாலத்திலேயே நோய் வாய்ப் பட்டார். அங்கிருந்து அவர் "ஜபர்" எனும் ஊருக்குப் போனார். அங்கே அவர் கி. பி. 838-ஆம் ஆண்டில் காலமானார். ஜபரில் அவருடைய சமாதி இன்றும் இருக்கிறது.

சமாதியில் கீழ்க்காண்டவாறு அரபியில் எழுதப்பட்டிருக் கிறது.

"சேர அரசன் அப்துர்ரஹ் மான் சாமிரி அடக்கம்."

"ஹிஜ்ரி 212-ல் வந்தார். ஹிஜ்ரி 216–ல் காலமானார்."

ஹிஜ்ரி 216 என்பது கி. பி. 838 ஆகும்.

சேரமான் பெருமாள் 36 ஆண்டுகள் சேர நாட்டில் ஆட்சி செய்தார். அவர் அரப் நாடு சென்ற ஆண்டு கி. பி. 834.

அவர் ஆட்சி செய்து கொண் டிருந்தபோது கி. பி. 822-ல் கொல்லம் நகர் கடற் கோளால் அழிந்தது. "மர்வான்" என்ற பாரசீக வணிகர், சேரமான் பெருமாளின் ஆதரவைப்பெற்று, தற்போதுள்ள புதிய கொல்லம் நகரை நிர்மாணித்தார். கி. பி. 825-ல் கொல்லம் பூர்த்தியா யிற்று. அது முதலே மலையாளி களின் "கொல்லம் ஆண்டு" தொடங்குகிறது.

மூன்றும் சேரமான் பெரு மாளே முதன் முதலாக முஸ்லி மான இந்திய அரசராவார். அவர் பெயரும் புகழும் வாழ்க!

[இக்கட்டுரைக்கு ஆதாரமான நூல்கள் :

(1) History of Kerala by K. P. Padmanaba Menon, B. A. B. L., M. R. A. S.

(2) Land of Perumals, by Dr. Day.

3. சேரர் வரலாறு
—திரு. அ. சிதம்பரனார்.

சுல்தானியா படை மருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன்; மலேயா முதலிய தேசங்களில் நற்கியாதியுடன் உபயோகிக்கப்பட்டு, கோடிக் கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து, தங்க மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது. எல்லாவித படை, சொரி சிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுக் கடி, சேற்றுப்புண், எச்சிற்றழும்பு, எக்ஸிமா முதலிய தோல் வியாதிகளை உடனே குணப் படுத்தும்.

சிறிய சைஸ் பாட்டல் 1-க்கு விலை அணா 0—6—0.
பெரிய „ „ „ „ „ 0-12—0.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

ஜெயரசம் டிப்போ,

அய்யம்பேட்டை. தெ. ரயில்வே.

மலேயா (பினாங்கு ஏஜெண்ட்)

ஆர். ஏ. அஹமதுஷா முஹம்மது சுல்தான் அன் கம்பெனி.,

101, பினாங்கு ஸ்ட்ரீட், பினாங்கு.

மலேயா (சிங்கப்பூர் ஏஜெண்ட்)

ஏ. சையத் முஹம்மது கம்பெனி,

178, கிராஸ் ஸ்ட்ரீட்; சிங்கப்பூர். டெலிபோன் நெ. 26918

இலங்கை (கொழும்பு ஏஜெண்ட்)

எம். சி. ஏ. ஹூதா அன் கம்பெனி,

20, டாம் ஸ்ட்ரீட், கொழும்பு.

இலங்கை (நீர் கொழும்பில் கிடைக்குமிடம்)

ஏ. எம். எல். அலியா மரைக்காயர் அன் ஸன்ஸ்,

பிரபல மருந்துக் கடை,

160, மெயின் வீதி, நீர் கொழும்பு.

என்னுயிர் அன்னையே!

★

ஈன்றெடுக்கப்பட்ட நாள் தொட்டு இறுதி ஆண்பாற் பிள்ளைப் பருவம் வரை அன்னையின் அரவணைப்பிலேயே உறைந்து. துள்ளு நடை போட்டுத் துவக்கப் பள்ளிக்குப் போய் வந்து இருந்தவேளை, தளிர்மேனிப் பாலகனின் தந்தை திரை கடலோடித் திரவியம் தேடிக்கொண்டு தாயகம் திரும்பினர்.

சில காலம் இங்கே செம்மையுற வாழ்ந்து விட்டு. மீண்டும் தமது பயணத்தைத் துவக்கிய காலை, தனயனையும் அங்கு கொண்டு போய் கல்வியளித்துத் தம் கண்காணிப்பில் வைத்துக்கொள்ள எண்ணி உடன் அழைத்துச் சென்றார்.

ஆங்கே தனது அன்னையை நினைந்து அல்லலுற்று அகம் குழம்பி நின்றிடும் செல்வனின் நிலை இங்கே சித்தரிக்கப் பெற்றுள்ளது.

1. தன்னலம் கடிந்த கற்றும்
   தகைமைக் கோர்தனி யிடமாய்,
   பன்னெடும் நாட்களுக்குப்
   பாசமும் நேசங் காட்டி
   இன்னலும் இடறும் நேரின்
   இழந்திடாப் பொறுமை பூண்டு
   கன்னலின் சாறும் சோறும்
   கலந்தூட்டி மகிழும் அம்மா!

2. சின்னவோர் துன்பந் தானும்
   சேயினை வந்தடைந்தால்
   தன்னதாய் நோயை யெண்ணித்
   தணலிடை மெழுகாய் மாறி
   இன்னலாய் எதுவந் துறினும்
   இன்பமாய் ஏற்று, அன்பின்
   சின்னமாய் நின்று, தியாகச்
   சிகரமாய்த் திகழுந் தாயே!

3. செழுமரந் தனது கோட்டின்
   சேர்ந்த தோர்குலை யின்காயை,
   கொழுங்கொடி யில்மு கைத்தக்
   கொத்திடை யரும்பு வொன்றை
   இழுத்தக் தோபிரித் தனரே!
   இதயத்தைத் தேற்றிக் கொண்டு
   எழுதுமிம் மடலிலுந்தன்
   இணையடி போற்றுகின்றேன்.

4. பள்ளியில் சென்ற மர்ந்தால்
பாடமும் பதிய வில்லை.
அள்ளியமு தண்ணப் போனல்
அகத்திடைத் தோன்றுகின்றுப்.
துள்ளிவிளை யாடி யெந்தன்
தொடர் துயர் மறக்க வெண்ணிப்
புள்ளினம் வதியும் தோட்டம்
புகுந்து யானங்க மர்ந்தேன்.

5. மாவினைத் தழுவிக் கொண்ட
மலர்க்கொடி கண்ட போதும்
ஆவினைப் பார்த்த கன்று
ஆவலாய் விரைந்த போதும்
கூவிடும், குயில் தன்னேடு
குஞ்சுவொன் றுறையக் கண்டு
மேவிடும் எந்தன் ஏக்கம்
மறைய வில்லையே அம்மா!

6. விண்ணிலே கதிரோன் தோன்ற
விரிந்திடும் கமலம் கண்டேன்
வெண்ணிலா வான கத்தின்
வரம்பிலே உருவம் காட்டத்
தண்ணிய நீர்வாழ் அல்லி
தன்னிதழ் பரப்பக் கண்டேன்.
எண்ணிலா அன்புத் தாயின்
எழில்முகம் என்று காண்பேன்?

7. பாங்குடன் அருகழைத்துப்
பரிவுகொண்(டு) உச்சிமோந்து
தீங்கேதும் அணுகா தென்னைத்
துணையுடன் பள்ளி சேர்ப்பாய்.
ஈங்கெனைப் பண்பாய் காக்க
யாருனைப் போல் கிடைப்பார்?
ஏங்கிடும் எந்த னுள்ளம்
என்றுதான் இன்பம் கொள்ளும்?

8. நெஞ்சிலுன் நினைவு வந்தால்
நலிவடைந் துருக லுற்றேன்.
துஞ்சிடும் போதும் உந்தன்
துல்லிய உருவம் என்முன்
கொஞ்சிடும் பான்மை கொண்டு
கனிவுடன் வரவும் கண்டேன்
விஞ்சிடும் சோகந் தானும்
வீழ்ந்திட இறையே அருள்வாய்!

—கலிக்-குஜ்-ஜமான்.

புது வாழ்வு

பொழுது புலர்ந்தது. கார்த்திகை மாதத்து மழை மேகங்களினால் வானம் மூடப் பட்டிருந்ததால், நேரம் போவது தெரியாமல், பங்களாவின் முன் பகுதியிலுள்ள என் அறையில் உட்கார்ந்து வெளியே பார்த்துக்கொண்டிருந்தேன். மழை நின்றிருந்தது. வீதியில் தேங்கி யிருந்த மழைத்தண்ணீரை நடைபாதையில் செல்பவர்கள் மீது அள்ளி யிறைத்த பஸ் ஒன்று வேகமாகச் சென்றுகொண்டிருந்தது

உலகப் போக்குத்தான் எவ்வளவு விநோதமாக இருக்கிறது? அணிந்துகொள்ள அதிகமான ஆடைகளை யுடையவன் எந்தச் சமயத் திலும் அழுக்குப்படாமல் ஆனந்தமாகக் காரில் செல்கிறான். ஆனால் தன்னிடமுள்ள ஒரே கந்தையைக் கசக்கிக் கட்டுபவன் மீது வீதியில் தேங்கி நிற்கும் மழைத் தண்ணீரை மனிதன் இயக்கும் அதே மோட் டார் வாகனம் வாரிக்கொட்டி அக்கந்தையையும் நாசமாக்குகிறது!

சினிமாப்படக் கதாசிரியர் என்பதைவிட எனக்குப் பத்திரிகை யாசிரியன் என்ற விதத்தில் ஒரு தனி கௌரவம் உண்டு. அதிலும் சென்னை நகரில் நடக்கும் முக்கியமான வைபவங்களில் மிகப் பெரிய போலீஸ் அதிகாரிகள் பலர் என்னிடம் தனி மதிப்பு காட்டுவார்கள். ஆனால் அம்மதிப்பு வாஸந்தியின் மறைவால் கெட்டு விடுமோ என்ற எண்ணம் என்னை மிகவும் துன்புறுத்தியது.

“மணி ஒன்பதாகப் போகிறதே! இன்னும் குளிக்காமல் உட் கார்ந்து கொண்டிருக்கிறீர்களே?” என்ற குரல் கேட்டுத் தலையை நிமிர்த்தினேன். “நஸீமா, நான் இன்றைக்கு ஆபீஸுக்குப் போகப் போவதில்லை என்னவோ போலிருக்கிறது!”

“ஏன்? உடம்புக்கென்ன?” என்று கேட்டவாறு வந்து என் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள் நஸீமா.

“அல்லாஹூ! என்ன இவ்வளவு கொதிக்கிறதே!”

“ஒன்று மில்லை நஸீமா! தலைதான் இலேசாகக் கனக்கிறது!

“நீங்கள் இப்படி வேலை செய்தால் உடம்புதான் என்னவாகும்? கொஞ்சமாவது ஓய்வு வேண்டாமா?”

பாவம்! அவளுக்கு ஒன்றும் தெரியாது. நான் ஏதோ வேலை அதிக மாகச் செய்து உடம்பைக் கெடுத்துக்கொள்வதாக அவள் நினைத்துக் கொள்கிறாள். ஆனால் இரவு முழுவதும் சரியான தூக்கமில்லாததை அவள் கண்டாளா என்ன?

“பேசாமல் படுத்திருங்கள். முதலில் காப்பி போட்டுக்கொண்டு வருகிறேன். தலைவலி மருந்து சாப் பிடுங்கள்” என்று சொல்லியவாறு வீட்டிற்குள் போய்விட்டாள்.

எஸ்கேஜி

தலைவலிக்கு மருந்து சாப்பிட்டு வலியைக் குறைத்துக்கொள்ள வழி தேடலாம். ஆனால் மனவலிக்கு மருந்து?

வாஸந்தி எங்கு போயிருப்பாள்? காரில் பின் தொடர்ந்து வந்து எங்களை மெரினா ரஸ்தாவில் சந்தித்தவர்கள் என் மீது பழி சுமத்தி அவமானப் படுத்துவதற்காக அவளை எங்கேயாவது மறைத்து வைத்திருக்கிறார்களா? அல்லது அவள் ஏதாவது தற்கொலை—அப்படி, இப்படி என்று...நினைக்கவே பயமாக இருக்கிறதே!

"ஆண்டவனே! அவள் சுகமாகத் திரும்பி வந்துவிட வேண்டும்!" என்று நினைத்துக்கொண்டே 'கேட்'டை நோக்கியபோது அலி அக்பர் வந்துகொண்டிருந்தான்.

"என்னப்பா ஷரீப், என்ன விஷயம்? ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறாயே?" என்று வந்தவுடன் கேட்டவன் என் பதிலைக்கூட எதிர்பாராமல், "ஒரு விஷயம் இன்றைய காலைப் பத்திரிகையில் பார்த்தேன்" என்றான்.

காலையில் வந்திருந்த பத்திரிகையைக்கூட நான் படிக்கவில்லை!

"என்ன விசேஷம்?"

"என்னப்பா ஒன்றும் தெரியாமல் கேட்கிறாய்! அந்தப் பெண் வாஸந்தியைக் காணோமாமே!"

"வேறு என்ன போட்டிருக்கிறது அக்பர்?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"வேறு ஒன்றுமில்லை. அவளைக் காணோமென்று மட்டும்தான் போட்டிருக்கிறது" என்றான்.

நல்லவேளை! என் பெயரையும் சந்திக்கிழுத்து சிரிக்க விட்டு விடவில்லையே!

"ஷரீப், உன்னிடம் முன்னமே எச்சரிக்கை செய்திருக்கிறேன் பார்த்தாயா? எப்போதுமே இந்த மாதிரிப் பெண்களிடம் பழகுவதில் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும்!"

"அதுபோகட்டும் அக்பர்! இன்றைக்கு உடல் சுகமில்லாததால் ஆபீஸுக்குப் போகப் போவதில்லை. ஆகவே ஒரு லெட்டர் தருகிறேன். அப்படியே எங்கள் ஆபீஸில் கொண்டு போய் கொடுத்து விட்டு நீ போகிறாயா?"

"ஏன் உன் உடம்புக்கு என்ன?"

"ஒன்றுமில்லை. ஏதோ சோர்வாக இருக்கிறது" என்று சொல்லி விட்டு எழுந்து ஒரு கடிதம் எழுதி அவனிடம் ஆபீஸுக்குக் கொடுத்தனுப்பினேன். பின்னர் இயந்திரத்தைப்போல காலைக் கடன்களை முடித்துவிட்டு என் அறைக்கு வருவதற்கும் படாதிபதி பூதலிங்கம் பிள்ளை பங்களாவிற்குள் பிரவேசிப்பதற்கும் சரியாக இருந்தது.

இவர் தான் எவ்வளவு உயர்ந்த நோக்க முள்ளவர்! இவர் என் மீது கொண்டிருக்கும் மதிப்புக் கெடுவதற்கு வழி வைத்து விட்டேனே என்ற நினைப்பு அவரைக் கண்டதும் தோன்றி விட்டதால் அவரைப் பார்ப்பதற்கும் வெட்கமாக இருந்தது! இருந்தாலும் வீட்டிற்குள் வந்தவரை வரவேற்காமல் இருந்துவிட முடியுமா?

படாதிபதி நேரடியாகவே விஷயத்துக்கு வந்து விட்டார்.

"குழந்தை வாஸந்தியைக் காணோம் என்று தெரிந்ததிலிருந்து எனக்கு ஒன்றும் ஓடவில்லை மிஸ்டர் ஷரீப்! ஒவ்வொரு நிமிஷமும் அவள் திரும்பி வந்துவிடமாட்டாளா என்றுதான் எதிர்பார்த்துக்

கொண்டிருக்கிறேன்!" என்று அவர் உருக்கமாகச் சொல்லியபோது என் கண்களில்கூட நீர் துளிர்த்து விட்டது.

"குழந்தை கெட்ட குணமோ கெட்ட நடவடிக்கையோ உள்ளவள் அல்ல. ஏதோ ஒரு உயர்ந்த குடும்பத்தில் தோன்றிய பெண். சந்தர்ப்ப சூழ் நிலை காரணமாக அநாதையாகி விட்டபோது அவளை ஒருவர் காப்பாற்றி என்னிடம் கொண்டுவந்து சேர்த்தார்" என்று அவர் கூறி வந்தபோது எனக்குத் தெரிந்தவற்றை அவரிடம் சொல்லாமல் இருக்க இயலவில்லை.

ஒவ்வொரு சமயத்திலும் அவள் என்னிடம் நடந்து கொண்ட விதத்தையும், முன் தினம் அதிகாலையில் நடை பெற்ற சம்பவங்களையும் கொஞ்சம் கூட மறைக்காமல் அவரிடம் விவரித்தேன்.

"ஷரீப். உங்கள் பெயரை இதில் சம்பந்தப்படுத்தி. உங்களுக்குக் கஷ்டம் கொடுக்க எத்தனையோ பேர் நினைக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உங்கள் மீது எனக்குக் கொஞ்சமும் அவநம்பிக்கை கிடையாது" என்று கூறி வந்தவர் திடீரென்று "அவளை வளர்த்தவர் சமீபத்தில் ஒரு கிராமத்தில் இருக்கிறார். அங்கு போய் பார்க்கலா மென்று நினைக்கிறேன். தனக்கு ஏற்பட்ட ஏமாற்றம் தாளாமல் அங்கு போயிருக்கலாமல்லவா?" என்று கேட்டார்.

அது சரியென்று தோன்றவே, "நானும் வருகிறேன்" என்று புறப்பட்டேன்.

11

அடுத்த அரை மணி நேரத்துக்கெல்லாம் படாதிபதியின் கார் சைதாப்பேட்டை சின்ன மலையைத் தாண்டி வேளச்சேரி ரஸ்தாவில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அவரும்நானும் மட்டுமே காரில் இருந்தோம். படாதிபதி அதை ஓட்டிக்கொண்டு வந்தார். கவர்னர் மாளிகைத் தோட்டம், ரேஸ் கோர்ஸ் முதலியவை இலேசாகத் தூறிக் கொண்டிருந்த மழையில் ரம்மியமாகக் காட்சியளித்துக் கொண்டிருந் தன. இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்ப்பதற்காகவே மழைக் காலங் களில் நான் சென்னையின் சுற்றுப் பிரதேசங்களுக்குச் சென்று வருவது வழக்கம். ஆனால் இன்று இக்காட்சிகள் ஒன்றும் என்னை ஈர்க்க வில்லை.

வேளச்சேரி கிராமத்தைக் கடந்த பின்னர் மோடவாக்கம் ரஸ்தா வில் ஜாக்கிரதையாகவே போகவேண்டி யிருந்தது. குறுகிய அந்த ரஸ்தாவில் அங்காங்கு மழையினால் பழுது ஏற்பட்டிருந்தது. இரு மருங்கிலும் ஒரே வெள்ளக்காடு. மிகவும் எச்சரிக்கையுடனேயே படாதிபதி காரைச் செலுத்திவந்தார். சென்னையை விட்டுப் புறப்பட்ட திலிருந்து நாங்கள் இருவரும் ஒரு வார்த்தைகூட பேசிக்கொள்ள வில்லை.

கடைசியாக இரண்டே சிறுதெருக்களையுடைய குக்கிராமமொன்றில் ஒரு பழைய வீட்டின்முன் போய் நின்றது. அந்த மழை நேரத்தில் கூட காரைச் சுற்றி ஒரு சிறு கும்பல் கூடிவிட்டது.

"ஈஸ்வர மூர்த்திப் பிள்ளை இருக்கிறாரா என்று போய் பார்த்து விட்டு வா, தம்பி!" என்று ஒரு சிறுவனை அனுப்பினார் படாதிபதி.

நாலைந்து சிறுவர்கள் வீட்டினுள் ஓடினர். ஒரு கிழவர்—அறுபது வயதிருக்கும்—வெளியே வந்தார்.

அவரது வணக்கத்துக்குக்கூட பதிலளிக்காமல், "ஏன் பெரியவரே, வாஸந்தி இங்கே வந்தாளா?" என்று கேட்டார்.

"இல்லையே ஐயா! ஏன்?" என்று கேட்டார் பெரியவர். அவரது குரலும் உடலும் சேர்ந்து நடுங்கின. கண்ணீர்விட ஆரம்பித்து விட்டார்.

"ஒன்றுமில்லை. எங்கேயோ நேற்றுப் புறப்பட்டுப் போனாளாம். இன்னும் காணோமே; ஒரு வேளை இங்கே வந்திருக்கலாமோ என்று தேடி வந்தோம்" என்றார் படாதிபதி.

"ஏன். குழந்தை மீது ஐயாவுக்குக் கோபமா? ஏதாவது அது தப்புச் செஞ்சிருந்தாலும் மன்னிச்சிடுங்க ஐயா!" என்றார் பெரியவர். கூப்பிய கரங்களை அவர் தாழ்த்தவே இல்லை.

"அதெல்லாம் கிடையாது பெரியவரே! இன்றைக்கு ஸ்டுடியோவில் அவளுக்கு வேலையிருக்கிறது. அதனால்தான் அவசரமாகத் தேடி வந்தோம். நீர் ஒன்றும் பயப்பட வேண்டாம்!" என்று சொல்லி விட்டுக் காரைத் திருப்பினார் பூதலிங்கம் பிள்ளை.

தான் அருமையாக வளர்த்து ஆதரித்த பெண்ணைக் காணவில்லையே என்ற வருத்தம் படாதிபதிக்கு. அவளது மறைவுக்கு நான் காரணமாக இருக்கிறேனே என்ற பயம் எனக்கு. அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று என்னிடம் ஆறுதல் சொல்லிக்கொண்டு வந்தார் அவர்.

வீட்டிற்கு வந்ததும் ஒரே களைப்பு. படுக்கையில் போய்ச் சாய்ந்தேன்.

மனித சமுதாயம் இரு பெரும் பிரிவாக அமைந்து இயங்கி வருகிறது. அதில் ஒரு பிரிவினரின் இலட்சியம் பணம். மற்ற பிரிவினரின் இலட்சியம் புகழ். இவ்விரண்டின் அடிப்படையிலேயேதான் எல்லாவிதமான திட்டங்களும் கொள்கைகளும் உருவாகின்றன. ஆனால் பணம் இருக்குமிடத்தில் புகழும், புகழ் இருக்குமிடத்தில் பணமும் சேருவது அபூர்வம்.

எனக்கு ஓரளவு புகழ் இருந்து கொண்டிருந்தது. அதை நான் இலட்சியமாகக் கொண்டிராத-மனித இன அபிலாஷைகளுக்கு அப்பாற்பட்டவனாக இருந்தாலும் கூட அது என்னைத் தேடிவந்து என்னிடம் ஒட்டிக்கொண்டு விட்டது. அதற்குப் பின்னால் வந்தது பணம். நாளுக்கு நாள் எனக்குப் பணம் சேரச் சேர, புகழ் மங்கி விடுமோ என்று நான் நினைத்தேன். ஆனால் பணத்தின் வாடை பட்ட காலத்திலேயே புகழ் மங்குவதற்கான சூழ்நிலைகள் ஏற்பட்டு விடும் என்று நான் நினைக்கவில்லை. எனவே தற்போதைய நிலை எனக்கு மிகுந்த வருத்தத்தையளித்தது.

'குசு குசு' வென்று மெதுவாகப் பேசும் குரல் கேட்டு நான் சிந்தனை கலைந்தேன்.

"ஆமாம் ஸகினா! இங்கு வருவாளே வாஸந்தி என்ற ஒரு பெண். அவள் காணவில்லை என்றுதான் பேப்பரில் போட்டிருக்கிறது."—இது நஸீமாவின் குரல்.

"அவள் எங்கே போயிருப்பாள்?"

"எங்கேயோ? யாருக்குத் தெரியும்? இந்த மாதிரிப் பெண்களிடம் எப்போதுமே ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும். உன்

கள் அண்ணன் மட்டுமில்லாமல் வேறு யாருமாக இருந்தால் இதற்குள்ளாக அந்தப் பெண் அவர்களை மயக்கிக் கொண்டு போயிருப்பாள்!"

என் மீது எவ்வளவு நம்பிக்கை என் நஸீமாவுக்கு! இதை நினைக்கும்போது எனக்கு அவ்வளவு வருத்தத்துக்கிடையிலும் சிறிது மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்படத்தான் செய்தன.

"ஸார், தபால்!" என்ற குரல் கேட்டு மறைந்தது. அதைத் தொடர்ந்து கடிதமும் கையுமாக ஸகீனு என் அறைக்குள் வந்தவள் நான் தூங்குவதாக நினைத்துக் கடிதத்தை என் பக்கத்தில் வைத்து விட்டுப் போய்விட்டாள்.

முதலில் அக்கடிதத்தைப் படிக்க வேண்டுமே என்று தோன்றவில்லை. சிறிது நேரம் கழித்து எடுத்து அதைப் பிரித்துப் படித்தேன். ஊரிலிருந்து மாமா எழுதியிருந்தார்.

தங்கை ஸகீனுவைப் பெண் கேட்டு சில இடங்களிலிருந்து வந்திருப்பதாகவும் அவற்றில் நல்ல பிள்ளையாகப் பார்த்து ஏற்பாடு செய்தால் ரஜப் பிறையில் விவாகத்தை நடத்திவிடலாமென்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

எனக்குள்ள முக்கியமான கடமையொன்றை இக்கடிதம் நினைவூட்டி விட்டது. இதை ஒரு காரணமாகக்கொண்டு ஊருக்குப்போய், அங்கிருந்துகொண்டு வேலையைவிட்டு விலகிவிட்டால் என்ன? சென்னை வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டால் என்ன? கிராமத்தில் தந்தை விட்டுப்போன சொத்துக்களைப் பரிபாலித்துக் கொண்டிருந்தால் போதுமே!—இந்த சிந்தனை சற்றுத் தலை தூக்கியது. என்ன பேதைமை! முன்னோரின் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைச் சாப்பிட்டுக் காலத்தைக் கடத்திச் சென்று விடலாம். ஆனால் மனிதனாகப் பிறந்ததின் பயன்தான் என்ன? உண்டு, உடுத்தி, ஆனந்தமாகக் காலத்தைக் கடத்துவதுதானா?—சேச்சே எந்த விதமான எண்ணம் எனக்குத் தோன்றியது என்பதை நினைத்துச் சற்று வெட்கமடைந்தேன்.

வாஸந்தியைக் கண்டு பிடித்து, அவள் விவகாரம் ஓய்ந்துவிட்டால் ஊருக்குச் சென்று கல்யாண ஏற்பாடுகளைக் கவனிக்கலாம். அப்படியொன்றும் ஏற்படாமலிருக்கையில் சென்னையை விட்டு நான் புறப்பட முடியாது. ஆகவே தற்சமயம் வேலை நெருக்கடி அதிகமாக இருக்கிறதென்றும் சிறிது காலம் பொறுத்து இவ்விஷயத்தைக் கவனித்துக் கொள்ளலாமென்றும் மாமாவுக்கு உடனே கடிதம் எழுதி தபாலில் சேர்த்து விட்டேன்.

மாலை மணி ஆறு. மழைக் காலமாதலால் அதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்று ரேடியோவில் அறிவிப்பாளர் கூறியிருந்ததால் மழை வராது என்ற தைரியத்தில் வெளியே புறப்பட்டேன்.

மவுண்ட் ரோட் வந்தபோது அந்த சூழ்நிலையிலும் அதன் சுறுசுறுப்புக் குறைந்ததாகத் தெரியவில்லை. பாடிப் பிச்சை எடுக்கும் அந்தகன் ஒருவன், மாஜி பிரபல பாடகரின் பாட்டு ஒன்றைக் கொலை செய்து கொண்டிருந்தான். உயர்ந்த கட்டிடமொன்றில் அமைக்கப் பட்டிருந்த நியான் விளம்பர போர்டில் படம் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது.

ஹோட்டல் தி மவுண்ட்டில் குளிருக்கு அடக்கமாக இருந்த ஒரு மேஜையடியில் நான் உட்கார்ந்துகொண்டிருந்தேன். காப்பி கொண்டு

வந்த பையன் என்னிடம், "ஏன் சார் நீங்கள் ஒரு வாரமாக வர வில்லை? சீனு உங்களைப் பார்க்கவேண்டும் என்று சொல்லிக்கொண் டிருந்தானே! இருங்கள் போய் அழைத்து வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் போனான்.

"என்ன அண்ணா, உங்களைக் காணவே முடிவதில்லை?" என்று கேட்டபடியே வந்தான் சீனு.

"எனக்கு வேலை அதிகம். அதனால் மவுண்ட்ரோட் பக்கமே வர முடியவில்லை!"

பின் ரகசியமாக, "ஏன் அண்ணா, வாஸந்தியைக் காணோம் என்று இன்று பத்திரிகையில் வெளிவந்திருக்கிறதே, பார்த்தீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம் தெரியும்!"

"எங்கு போயிருப்பாள் என்று நினைக்கிறீர்கள்?"

சீனு ஒரு நம்பிக்கையான பையன். நிலைமை அவனுக்குத் தெரி வதால் பாதகமில்லை யென்று நான் கருதினேன். எனவே நடந்த விஷயத்தையெல்லாம் சொன்னேன்.

"அண்ணா, முன்பு நான் சொன்னேனே அந்த ஆட்கள் ஒரு வேளை வாஸந்தியை மறைத்து வைத்திருப்பார்களோ?"

"இருக்கலாம். ஆனால் இது சம்பந்தமாகக் கொஞ்சமாவது துப்புத் தெரிந்தால் தானே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்!

"உங்கள் பேரில் குற்றத்தைச் சுமத்துவார்களே அண்ணா!"

"ஆமாம், அதுதான் எனக்கும் என்ன செய்வதென்று தெரிய வில்லை!"

ஏதாவது தகவல் கிடைத்தால் எனக்குத் தெரிவிக்கும்படி சொல்லி விட்டு வீட்டிற்குப் புறப்பட்டேன்.

மறு நாள் காலை. மப்பும் மந்தாரமுமாக இருந்த வான மண்ட லத்தில் அவ்வப்போது சூரியன் தோன்றி மறைந்து கொண்டிருந் தான். மனது சற்றுத் தெளிவடைந்திருந்தது. பங்களாவின் முன் பகுதியில் உட்கார்ந்து காலைப் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந் தேன்.

"அண்ணா, ஒரு முக்கியமான சமாசாரம்!" என்று கூறியபடியே சீனு வந்தான், அவன் நடையில் ஒரு வேகம் இருந்தது.

"என்ன சீனு, என்ன விசேஷம்?"

"இன்று காலையில் மூன்றுபேர் காபி சாப்பிட நம் ஹோட்ட லுக்கு வந்தார்கள். நன்றாக டிரஸ் செய்துகொண்டிருந்தார் ஒருவர். மற்றுமிருவர் சாதாரணமாகவே இருந்தார்கள். அவர்கள் பேச்சில் வாஸந்தி என்ற பெயர் அடிபடவே, அவர்களுக்கு 'சப்ளை' செய்து கொண்டிருந்தவன் என்னிடம் வந்து சொன்னான். அடுத்த மேஜை யில் 'சப்ளை' செய்வதுபோல் நடித்து அவர்கள் பேசுவதைக் கவனித் தேன். தெளிவாக ஒன்றும் தெரியாவிட்டாலும், வாஸந்தியைக் கடத் திச் சென்றவர்கள் அவர்கள்தான் என்பதைப் புரிந்துகொண்டேன்.'

"அவர்கள் என்னவானார்கள்?"

"பகல் சரியாக 12 மணிக்கு மந்தவெளி பங்களாவிற்கு வருவ தாக முக்கியஸ்தராய்க் காணப்பட்டவரிடம் மற்றிருவரும் சொல்லிவிட் டுச் சென்றார்கள்."

"பிறகு?"—என் ஆவல் அதிகமாகிவிட்டது.

"உடனே மானேஜரிடம் ரஜா கேட்டுக்கொண்டு வெளியே வந்து முக்கியஸ்தரைப் பின் தொடர்ந்தேன். அவர் மந்தவெளியிலுள்ள புதிய பங்களா ஒன்றுக்குப் போனார். நான் அதைப் பார்த்துவிட்டு இங்கு வந்தேன்."

மணியைப் பார்த்தேன். பதினொன்று. உடனே டிரஸ் செய்து கொண்டு சீனுவுடன் புறப்பட்டேன்.

பஸ்ஸில் ஏறி மந்தவெளியை அடைந்தபோது மணி 12 ஆகிவிட்டது. ரிக்ஷாவோ டாக்ஸியோ கிடைக்காததால் பஸ் ஸ்டாண்டிலிருந்து சுமார் ஒரு மைல் தூரம் நடந்து சென்று, குறிப்பிட்ட பங்களாவை அடைந்தோம். என்ன ஏமாற்றம்! அது பூட்டிக் கிடந்தது!

அங்கிருந்து திரும்பி வீடு வரும்போது எனக்கொரு யோசனை தோன்றியது.

உடனே சீனுவுடன் பஸ் ஏறி ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்றேன். போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னை வரவேற்றார். அத்துடன் ஆச்சரியமும் ஏமாற்றமும் கலந்து என்னை புன்சிரிப்புடன் வரவேற்றனர்!

"பிராண மித்ரா"

நீத்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, துரித ஸ்கலிதம். ஸ்திரீகளை மனத்தில் நினைத்தவுடனே தொட்டவுடனே இந்திரியம் வெளியாதல், நபுஞ்சகம், இந்திரிய ஒழுக்கு, சொப்பன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, தேகம் மெலிதல், நடுக்கம், வீரிய மின்மை முதலிய ராஜ உறுப்புக்கள் சம்பந்தமான சகலமும் நீங்கி, பீமன் பலம் பெற நிகரற்ற காயகல்பமாகும். 'பிராண மித்ரா சாப்பிடும் காலத்தில் மதன் லேபம்' ஆண்குறி வளர்ச்சிக்குக் குறியின் மேல் தினமும் பூசிக்கொண்டு வரவும். பத்தியமில்லை. பூரண குணத்திற்கு 2 டின் "பிராண மித்ரா" அவசியம் சாப்பிடவும். 1 டின் விலை ரு 6—0—0. (20 நாள் மருந்து)

வி. பி. ஆர்டர்களுக்கு ரு 5 முன்பணம் அனுப்ப வேண்டும்.

இலங்கை அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா 1 ஜீவமித்ரா, 1 மதனலேபம் மூன்று மருந்துகளின் விலை ரு 18-75 சதம். இலங்கை தபாற் செலவு ரு 2-50 சதம். இலங்கை சுங்கத் தீர்வை ரு 4-57 சதம். மலாய் அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா, ஒரு ஜீவ மித்ரா, ஒரு மதன லேபம் ஆகிய மூன்று மருந்துகளின் விலை ரு 18-12-0. மலாய் நாட்டிற்கு தபால் செலவு ரு 6-0-0.

முக்கிய கவனிப்பு:-மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்தின் கிரயத்தையும் தபால் செலவையும் சேர்த்து ஏர்மெயில் மணியாடர் மூலம் அல்லது 37 ஷில்லிங் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பவும். முன்பணம் இல்லாமல் மருந்துகளை அனுப்ப முடியாது.

மலாய் நாட்டிலுள்ளவர்கள் எமது பதிலைக் கோருபவர்கள் 1 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும். 'பெண் இன்பம்' என்னும் விபரமான கேட்லாக்கிற்கு எழுதவும்

டாக்டர் கே. கே. ராமன், (ரிஜிஸ்டர்டு).
கேரள வைத்தியசாலை (மு. 11).
தபால் பெட்டி நெ. 473, வேப்பேரி, சென்னை-7.

கீமியாயெ ஸஆதத்

அல்-கஸ்ஸாலி

10. பொறுமையின் பெருமை

பாவங்களையும், அவைகளுக்கான பரிகாரங்களையும் பற்றிச் சென்ற இதழில் படித்தோம். இறைவனிடம் வேண்டும் உதவிகளில் பாவ மன்னிப்புப் பிரதான மானதாகும். பொறுமையையும், தொழுகையையும் கொண்டே எல்லாவிதமான உதவிகளையும் தன்னிடம் தேடும்படி இறைவன் கட்டளையிடுகின்றான். பாவ மன்னிப்புப் பெறுவதற்கு மட்டுமல்லாமல் பாவங்களைச் செய்யாதிருப்பதற்கும் பொறுமை அவசியமாகும்.

தீய செயல்களைவிட்டு நம்மைத் தடுத்துக்கொள்வதற்காகப் பொறுமை தேவைப்படுவது போன்று, நற்செயல்களை ஒழுங்காய்க் கடைப் பிடிப்பதற்கும் பொறுமை இன்றியமையாததாகும். நல்லறிவும் நற்செயலும் சேர்ந்ததே ஈமான். பொறுமையில்லையேல் நற்செயலுமில்லை. எனவேதான், "பொறுமை ஈமானில் பாதி" என்று நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள்.

துன்பத்தின்போது பொறுமையுடன் சகித்திருப்பதும், சுக வாழ்வின்போது இறைவனுக்கு நன்றி செலுத்துவதும், இறைவனின் நாட்டத்தை இன்பமுடன் ஏற்றுக்கொள்வதும் ஈமானுள்ளவர்களின் அடையாளம் என்று நாயகம் கூறியுள்ளார்கள். பொறுமையில்லாதவன் ஈமானே இல்லாதவன் என்றும் உமர் (ரலி) கூறியுள்ளார்கள்.

"பொறுமையாளர்களுடன் இறைவன் இருக்கிறான்" என்று குர்ஆன் கூறுகிறது. ஏனெனில் பொறுமை இறைவனின் குணமாகும். 'நாம் விரும்பாத ஒன்று நிகழ்ந்துவிடின் பொறுமையுடன் சகித்திருக்காதவரையில் நாம் நாடுவது நடக்காது' என்று ஈஸா (அலை) கூறினார்கள்.

நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் இடையே மனத்தில் நிகழும் போரில், அநீதியை எதிர்த்து நியாயம் பின்வாங்காமல் நிற்பதற்குப் பொறுமை என்று பெயர். பொறுமையில்லையேல் இப்போராட்டத்தில் நியாயம் வெற்றி பெறாது. எனவே, பொறுமையின்றி ஒருவன் நல்லவனாயிருக்க முடியாது.

வானவர்களிடம் இச்சையே இல்லாததால், அவைகளை எதிர்த்துப் போராட வேண்டிய வேலையும் இல்லை. எனவே அவர்களுக்

பொறுமையும் சகிப்புத் தன்மையும் பற்றித் திருமறையும் திரு நபியவர்களும் கூறியுள்ள அறிவுரைகளை ஆதாரமாகக் கொண்டு அறிஞர் கஸ்ஸாலியவர்கள் தமது கருத்துக்களைத் தக்க சான்றுகளுடன் விளக்கிக் கூறுகின்றார்.

கஸ்ஸாலியவர்களின் "கீமியா யெ ஸஆதத்" ஒரு மாபெரும் அறிவுக்கடல். அதன் ஆழத்தில் மூழ்கி, விலை மதிப்பற்ற பல நன் முத்துக்களை எடுத்து நமக்கு வாரி வழங்குகின்றார் நண்பர் அப்துர் ரஹீம். அந்த நன் முத்துக்கள் நம் வாழ்வுக்கு அழகு சேர்க்கும் அணிகலனாய் விளங்குமாக!

குப் பொறுமையும் தேவையில்லை. மிருகங்கள் இச்சைகளை மட்டும் பின்பற்றுகின்றன. இச்சைகளை எதிர்த்துப் போராடும் பகுத்தறிவும் அவைகளிடமில்லை. எனவே அவைகளிடம் பொறுமைக்கு வேலையில்லை. பொறுமையைக் கடைப் பிடிக்கத் தகுதியுடையவனும், கடைப்பிடிக்கவேண்டியவனும் மனிதனேயாவான்.

நன்மையின்பால் நம்மை இழுத்துச் செல்லும் தெய்வீக எண்ணமும், தீமையின் பக்கம் செலுத்தும் ஷைத்தான் குணமும் ஒவ்வொருவரிடமும் இருக்கின்றன. ஷைத்தானை அடக்கியாண்டு, முழு மனிதனாவதே வாழ்க்கையின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடைய பொறுமை இன்றியமையாதது.

நாயகமவர்கள் பொறுமையே உருவாய் விளங்கி, அநீதியை அடியோடு வென்றார்கள். 'என் ஷைத்தான் மீது எனக்கு இறைவன் வெற்றியைக் கொடுத்தான்; எனவே ஷைத்தான் எனக்கு அடங்கி விட்டான்' என்றும் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள்.

துன்பத்தின்போது சகிப்புத் தன்மை கொள்வது மட்டும்தான் பொறுமை என்று நாம் எண்ணக் கூடாது. சுகவாழ்வின் போதும் நாம் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும். ஏனெனில் இறைவனளித்த நன்கொடைகளை நேர்மையான முறையில் செலவழிப்பதற்கும் பொறுமை வேண்டும். துன்பத்தின்போது மட்டுமின்றி இன்ப வாழ்விலும் ஷைத்தான் குறுக்கிடுவான்.

துன்பத்தைப் பொறுமையுடன் தாங்கிக்கொண்டு நல்லவர்களாய் இருந்தவர்கள், துன்பம் நீங்கி நல்வாழ்வு பெற்றபின் தீயவர்களாய் மாறுவதுண்டு. இறைவனளித்த பொருட்களையும், வலிமையையும் தீயவழியில் செலவழிக்கத் தூண்டும் ஷைத்தானுக்கு இவர்கள் அடி பணிந்துவிடுகின்றனர்.

உண்மையில், துன்பத்தின் போது பொறுமையாயிருப்பவர்களைவிட இன்பத்தின்போதும் பொறுமையைக் கடைப்பிடிப்பவர்களே உயர்ந்தவர்கள். "பொருட் செல்வமும், மக்கட் செல்வமும் மனிதர்களுக்குச் சோதனைகளாயிருக்கின்றன என்று இறைவன் கூறுகின்றான். எனவே, இன்பத்திலும், துன்பத்திலும் எல்லா நிலைகளிலும் பொறுமை அவசியமாகின்றது.

க் ட மை க ளை நிறைவேற்று வதில் நாம் கைக்கொள்ளும் பொறுமை, மற்ற நிலைகளில் காட்டும் பொறுமையை விடச் சுலபமாகும். ஏனெனில் தொழுகை, நோன்பு போன்ற கடமைகளை நாமே விரும்பி நிறைவேற்றுவதால் அவைகளால் ஏற்படும் கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்கிறோம். ஆனால் நம் விருப்பத்துக்கெதிராய் நிகழும் துன்பங்களில் பொறுமையைக் கொள்வது மிகவும் கடினமாகும். உதாரணமாக, பிறரால் நமக்குத் துன்பம் நேர்ந்தால், பொறுமையைக் கொண்டு துன்புறுத்தியவரை மன்னித்து விடுவது மிகவும் கஷ்டமாகும். நம்மைத் துன்புறுத்தியவரை அத்துன்பத்துக்குச் சமமாகவே துன்புறுத்தலாமென்றும், அவர்களை மன்னித்து விடுதல் அதைவிட மேலானதென்றும் இறைவன் கூறுகின்றான். பழிக்குப் பழி வாங்குவதில் எல்லை கடக்காமலிருக்க, பொறுமை வேண்டும். பழிவாங்காமல் மன்னித்து விடுவதற்கு அதைவிட அதிகமான பொறுமை வேண்டும். நாயகமவர்கள் பொறுமையின் சிகரமாய் விளங்கினார்களாதலால், அவர்கள் இன்னுசெய்தாருக்கும் இனியவே செய்தார்கள். ஈஸா (அலை) அவர்கள், "ஒரு கன்னத்தில் அறைந்தவர்களிடம் மறு கன்னத்தைக்காட்டு"ம்படி கூறினார்கள்.

நம் விருப்பத்துக்கெதிராய் நிகழ்வதும், ஆனால் அவைகளுக்குப் பரிகாரம் செய்ய முடியாமலும் இருக்கும் துன்பங்களின் போது பொறுமை காட்டுவது மிக மிகப் பெரிய காரியமாகும். வியாதி, தோல்வி, மரணம், பொருட்சேதம் போன்ற துன்பங்கள் இவ்வகையைச் சேரும். இறை நம்பிக்கை எந்த அளவுக்கு வலுவாயிருக்கிறதோ, அவ்வளவுக்கே இத்தகைய துன்பத்தின் போது பொறுமை பிறக்கும். இறைவன் விருப்பத்துக்கு முழுதும் தலை சாய்த்தால்தான் தடுக்கமுடியாத துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளலாம். மனிதனை சோதிப்பதற்காகவும் இத்தகைய துன்பங்களைத் தருவதாக இறைவன் கூறுகின்றான்.

நாயமகவர்களும், அவர்களின் தோழர்களும் பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் கொண்டே நிலையான வெற்றியைப் பெற்றார்கள். தோழர்களுள் ஒருவரான அபூதல்ஹா வெளியே சென்றிருந்தபோது வீட்டில் அவரின் குழந்தை யொன்று இறந்து விட்டது. குழந்தையின் தாயாரான ரமீஜா, அக்குழந்தையை மறைத்து வைத்துவிட்டு, துக்கத்தை வெளிக் காட்டாது சகித்துக் கொண்டு கணவனின் வருகைக்காகக் காத்திருந்தார். வீட்டிற்கு வந்ததும் குழந்தையின் சுகத்தைப் பற்றிக் கேட்டார் அபூதல் ஹா. குழந்தை தூங்குவதாகக் கூறிவிட்டு தன் கணவனிடத்தில் வழக்கம்போலவே நடந்துகொண்டார் அன்னையார். கணவனுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் "நான் ஒருவருக்கு ஒரு பொருளை இரவலாகக் கொடுத்திருந்தேன். அதைத்

திரும்பக்கேட்டால் சண்டைக்கு வருகிறார்" என்றார் ரமீஜா அம்மையார். "ஒன்று மறியாதவராயிருப்பார் அந்த மனிதர்" என்று பதிலிறுத்தார் அபூதல்ஹா. உடனே அவ் அம்மையார் குழந்தையின் மரணச் செய்தியை மறை முகமாகத் தெரிவிக்கக் கருதி "அல்லாஹ் நமக்களித்திருந்த குழந்தையை திரும்பப் பெற்றுக்கொண்டான்" என்று அறிவித்தார். மனைவியின் பொறுமையைக் கண்ட கணவரும் துக்கத்தைச் சகித்துக்கொண்டு 'இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்' என்றார்!

இத்தகைய பொறுமையைத்தான் நாம் பின்பற்றவேண்டும். பொறுமைக்கு அடையாளம் துன்பத்தை வெளிக்காட்டாதிருப்பதாகும். நெருங்கிய உறவினர்கள் இறந்து விட்டால் அடித்துக்கொண்டு அழுவதும் ஓலமிடுவதும் கூடாத செய்கைகளாகும். இத்தகைய நேரங்களில் சாதாரணமாய் துக்கப்படுவதும் கண்ணீர் விடுவதும் குற்றமல்ல.

நாயகமவர்கள் தங்கள் திருக்குமாரர் இப்ராஹீம் இறந்து விட்டபோது கண்ணீர் சிந்தினார்கள். அப்போது தோழர்கள் "கண்ணீர் விடுவது விலக்கப்பட்டதல்லவா?" என்று கேட்டார்கள். 'இது மன முருகி இரக்கப்படுவதற்கு அடையாளம்;' இரக்க முடையவன்மீது இறைவன் அருள் புரிவான்" என்று நாயகமவர்கள் விடை பகர்ந்தார்கள்.

சுருங்கக்கூறின், வணக்கத்திற்கு வேண்டிய பொறுமையைவிட பாவங்களை விடுவதற்கு அதிகமான பொறுமை வேண்டும். அதைவிட அதிகமான பொறுமை துன்பத்தைச் சகித்துக் கொள்வதற்கு வேண்டும். துன்பத்தின்போது காட்டும் பொறுமையைவிட இன்பத்தின் போது கொள்ளும் பொறுமை பெரியதாகும்.

பொறுமையைக் கொண்டு தான் அநியாயத்தை வெல்ல முடியும். நம்மிடமுள்ள வைத்தான் குணத்தை அடக்கி, மனித உள்ளத்தை வளரச்செய்தால் தான் பொறுமையைக் கைக்கொள்ள முடியும். எல்லாம் இறைவன் நாட்டப்படி நடக்கும் என்ற உயரிய எண்ணமே துன்பத்தைத் தாங்கிக்கொள்ளும் வலிமையையும் பொறுமையையும் அளிக்கக் கூடியதாகும்.

அ. அப்துர் ரஹீம்.

மணவாழ்க்கையின் மர்மங்கள்

(ஐந்தாம் பதிப்பு)

விவாகமான ஆண் பெண் அனைவரும் அவசியம் படித்தறிய வேண்டிய அநேக செய்திகள் இதில் உள்ளன. பக்கம் 330 விலை ரு. 4—8—0 தபால் செலவு தனி.

அன்பு நூல் நிலையம்,
18, ராமசாமித் தெரு, சென்னை—1.

மறுமணம்

கலீபா மீரான்

“ஐயா, இது ஷரீப் இராவுத்தர் வீடுதானே?”

அப்பொழுதுதான் அயர்ந்த நித்திரையிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டிருந்த நான் சட்டென எழுந்து படுக்கை மீதமர்ந்த வண்ணம் கண்களை அகலத் திறந்தேன். காவியுடை. கழுத்தில் உத்திராட்சமாலை. பாலைவனம் போன்ற தலை. அதன் அடிவாரத்திலே சுற்றிலும் ஒரு சில வெள்ளை உரோமங்கள். வலது கையிலே ஊன்றுகோல். இடது கரத்திலே ஏட்டுக் கட்டு. எல்லாம் ஒரு கணம்தான். மறுகணம் மறுபடியும படுத்துக்கொண்டு கண்களை இறுக மூடிக்கொண்டேன்.

தினந்தோறும் காலையில் எழுந்ததும் கமருன்னிஸாவின் களங்கமற்ற முகத்திலே கண்விழித்து உரையாடும் பழக்கமுடைய எனக்கு அந்த நிகழ்ச்சி பெரும் அதிர்ச்சியைத் தந்தது. “கிழட்டுச் சனியன் முகத்தில் விழிக்க நேர்ந்ததே, என்ன நேருமோ இன்று!” என்ற கவலை ஒருபுறம். அதிகாலையிலே அயலான் வீட்டில் நுழைந்து, அறிந்தவன்போல் நடித்து என்பலநாட் பழக்கத்தைப் பாழ்படுத்தி விட்டானே பாதகன்' என்ற ஆத்திரம் மறுபுறம். “ஏண்டா குட்டி ஷைத்தான்! இன்னும் நன்ருக விடியவில்லை. தூங்கி விழிக்கவில்லை. அதற்குள் இங்கென்னடா வேலை உனக்கு? பழகினவன்போல் பசாங்கு செய்து, பல பல பேசி, பணம் பறிக்க வந்தாயா? உன் புரட்டுத் தனம் என்னிடம் பலிக்காது. போய் விடு! போலிச்சாமியே! போய் விடு! 'அம்மா அன்னம்' என்று கேட்க, காவி யுடை கண்ட அம்மணி பக்தியுடன் அன்னம் கொண்டுவர அடுப்பண்டை சென்ற சமயம் அகப்பட்டதை அடித்துக்கொண்டு செல்லும் திருட்டுச் சாமியே, ஓடு! திரும்பிப் பாராது ஓடு!” என்று அடித்து விரட்ட நினைத்தேன்” ஆனல நான்தான் காலைப் பழக்க மென்ற கயிற்றல் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தேனே!

“ஒரு ஆளு வந்திருக்காரு சின்னம்மா!”

கோடைக்கால வரட்சிக்குப் பின்னர் கால்வாயில் நீர் வழிந்தோடுவதை யொத்த நிலைக்கு என் மனது மாறியது, ஷரீபின் அந்த இனிய மழலை மொழிகளால்.

“அம்மா, இது ஷரீப் இராவுத்தர் வீடுதானே?” என்று கேட்டார் மறுபடியும் கிழவர்.

“ஆமாம், என்ன வேண்டும்?” என வினவியவாறு. “இன்னும் எழுந்திருக்க மனம் வரவில்லையா?” என்ற கமருக்கு. “நீ மனது வைத்திருந்தால் எப்போதோ எழுந்திருந்திருப்பேனே” என்று பதிலிறுத்த வண்ணம் அவள் குரல் வந்த திக்கை நோக்கிக் கண்களைத் திறந்..டி

எழுந்த நான் அவள் கையிலிருந்த செம்புத் தண்ணீரை வாங்கிக் கொண்டு அப்புறம் நகர முயன் றேன்.

"இப்ராஹீம்! என்னைத் தெரிய வில்லையா உனக்கு?"

"ஆ! பழக்கமான குரல்!" கூர்ந்து நோக்கினேன்.

"நாயுடு மாமா!"—கிழவரை அப்படியே தழுவிக்கொண்டேன்.

"மன்னித்து விடுங்கள், மாமா"

"பரவாயில்லை. நீ செய்ததை நான் தவருக கருதவில்லையே."

ஏன் மாமா, இவ்வளவு கால மாக இந்தப் பக்கமே தாங்கள் வரவில்லை?"

"இல்லற வாழ்க்கைக்கு முற் றுப் புள்ளி வைத்துவிட்டு எனது ஏட்டின் துணைகொண்டு. இந்தப் பன்னிரண்டு வருஷங்களாக, காசி, கன்னுயாகுமரி, அஜ்மீர், நாகூர் போன்ற புண்ணிய தலங்களை தரிசனம் செய்து வரு கிறேன், தம்பி. இதற்கிடையே என் வாழ்நாள் முடிவிற்குள் ஒரு தடவையாவது அப்பாவை சந் தித்துவிடவேண்டுமென்ற ஆசை. அவர் என் ஆத்ம நண்பரல்லவா? ஆசையால்தான் ஓடோடியும் வந்தேன்."

"அப்பாவா! அது முடியாத காரியமாயிற்றே. ஒரு வேளை அந்த உலகத்தில்..."

"பத்து வருஷங்களுக்கு மேலா யிற்றே!"

அவர் கண்களினின்றும் இரு துளிகள் தரையில் புரண்டதை நான் பார்த்தேன்.

"அப்பா ஜாதகப்படி ஐம்பத்து நான்கில் ஒரு கண்டம்"

"ஆம். அதில்தான்."

"இதில் என்ன வச்சிருக்கே, தாத்தா?" என்று ஏட்டுக் கட்டை புரட்டினன் ஷரீப்.

"ஓ அதிலா, பொக்கிஷ மிருக் கிறது, செல்வமே," அவனை அணைத்துக் கொண்டார்.

"அப்படின்னு என்ன, சொல்லு தாத்தா," என்ருன் பிடிவாதமாக.

"இதோ பார், இது தான்" ஒரு காலணுவை அவன் கையில் கொடுத்தார் பெரியவர்.

சந்தோஷமிகுதியால் ஷரீப் "சின் னம்மா! சின்னம்மா! தாத்தாதுட்டு தந்தாரு" என்று குதித்துக் கொண்டே வீட்டிற்குள் ஓடினன்.

"'சின்னம்மா, சின்னம்மா' என்ன அர்த்தம், இப்ராஹீம்? அவள் உன்..."

"ஆம். மனைவிதான்."

"பின்னர் ஏன்..."

"அது ஒரு பெரிய கதை, மாமா! அதை தங்களிடம் சொல்ல வேண்டியது என் கடமை—தாங் கள் எங்கள் குடும்ப சுக துக்கங் களிலே பங்கு பெறும் பண்புடைய வர் என்ற முறையிலே. சில காலம் நோய்வாய்ப் பட்டிருந்த என் பிதா காலமாவதற்குச் சில நாட்களுக்கு முன் எனக்குத்திருமணம் நடந்தது. 'பிள்ளைகளின் மணக்கோலத் தைக் கண்டு பெற்றவர் மகிழ்வர்' என்ற கூற்று உண்மையானல் என் வாழ்நாளிலே நான் என் தந்தையின் மனம் பெரிதும் மகி ழும்படி நடந்து கொண்ட சந்தர்ப் பம் அது ஒன்ருகத்தான் இருக்க முடியும். ஆகவேதான் பதினெட்டு வயது நிரம்பாத பால்யத்திலே, எத்தொழிலிலும் ஈடுபடாத நிலை யிலே அவரது விருப்பத்திற் கிணங்கினேன்.

'வதனத்திலே புன் முறுவல். இதயத்திலே பொன்னன குணங் கள். பொறுமைக்கோர் புத்தக நிலையம். உண்மையில் ஒரு தூண்டாமணி விளக்கை தந்து விட்டுச் சென்ருர் என் தந்தை— வாழ்க்கை என்ற கப்பலை, அதை ஓட்ட பயிற்சி பெருத நான் மாலுமி. திகைக்காமல் வேறு என்ன செய்வது? திடமாகமுன்

வந்தாள் கதிஜா. காற்றின்போக்கிலே கப்பல் நகர்ந்தது. எங்கள்வாழ்க்கையும் காலப் போக்கிலே மிதந்து சென்றது.

காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வருவேன். கதிஜாவின் மீது கட்டி வைத்திருந்த மூட்டையை அவிழ்த்து விவரிப்பாள் என் தாயார். காதில் விழாததுபோல் கை கால் கழுவி விட்டு உணவருந்த உட்காருவேன் நான். விடமாட்டாள் என் மாதா. பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு புகாரை விசாரிக்க வற்புறுத்துவாள். கதிஜாவின் முகத்தைப் பார்ப்பேன். கண் கலங்கிய நிலையிலும் புன்முறுவலைத்தான் காண முடியும். ''பொறுங்கள் அம்மா, கேட்டுக் கொள்கிறேன்'' என்றால் ''பெண்டாட்டியுடன் சேர்ந்து கொண்டாய்; போய் விடுகிறேன் உன் வீட்டை விட்டு''

என்று புறப்பட்டு விடு வாள். தடுத்து நிறுத்தினுல் தடதடவென்று கதிஜாவிடம் செல் வாள். அவள் கையைப் பிடித்துக் கர கர வென்றிழுத்து வெளியே தள்ளுவாள். 'பெரு நாள் சீர் வரிசையில் புளி பாக்கி. புதுத் தண்ணீர்களிக்கு இனிப்புப் போதாது. இருபத்தியேழாங் கிழமை பணியாரம் பருமனுக யில்லை. அட்டியல் முகப்பு அழ காக அமைக்கப்படவில்லை. கதிஜா எங்கள் வீட்டில் கால் வைத்ததால் தான் என் தகப்பனுர் காலமாகி விட்டார்.' இவைதான் கதிஜாவின் மீது என் தாயாரின் குற்றச் சாட்டுகள்.

என்ன நடந்தாலும் எதிர் பேச மாட்டாள் கதிஜா. எதிராக இயக்க அக்கம் பக்கத்து அக்கா தங்கை கள் கையாளும் முறைகள் அவளி டம் பலிக்காது. ஆனுல் எப்போ தாவது "பாக்கியவதி வந்தாள். நான் பர்த்தாவை இழந்தேன்" என்று என் தாயார் சொல்லி விட் டால் போதும், கதிஜாவின் வத னம் வெதும்பி விகாரமாய் விடும். உடனே தனிமையை நாடிச் சென்று விடுவாள். அங்கு என்ன நடந்திருக்குமோ, யான் அறியேன்.

சுமார் நான்கு வருஷங்களுக்கு முன் கதிஜாவின் வீட்டில் ஷரீப் பிறந்தான். அது வேண்டும், இது வேண்டுமென்ற என் தாயாரின் ஆகாத நிபந்தனைகளால் ஈராறு மாதங்கள் அவளைப் பிரிந்திருக்க நேர்ந்தது. இதற்கிடையே அவள் சுகவீனமாய் இருந்ததை யறிந்த நான் திடீரென்று ஒரு நாள் தாயை யும் சேயையும் என் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டேன். முணு முணுக்கத்தான் செய்தாள் என் னைப் பெற்றவள். அதை மனத்திற் கொள்ளவில்லை நாங்கள். சில நாட்கள் சந்தோஷமாக இருந்தாள் கதிஜா. ஆனுல் திடீரென ஒரு நாள் மறுபடியும் படுத்துக்கொண்டாள். அன்றிலிருந்து என் வாழ்க்கையில் இருள் கவிந்து கொண்டது. ஆனுல் என் தாயாரின் மன இருள் நீங்க ஆரம்பித்தது என்றே சொல்ல வேண்டும்.

படுக்கையிலிருந்த தன் மரு மகளின் பக்கத்திலே பல மணி நேரம் உட்கார்ந்திருப்பாள். பாலைக் காய்ச்சிப் பருக வைப்பாள். பற்பல மருந்துகள் பக்குவமாய்க் கொடுப்பாள். காலைப் பிடித்து வலி போக்குவாள். முகத்தைத் துடைத்து அழுக்கை நீக்குவாள். தலையை சீராக்குவாள். தூக்கு வாள். கிடத்துவாள். பெட்டியி லுள்ள பத்திரங்களை எடுத்து என் முன் வீசுவாள். 'போ. வெட் டுக் கிணற்று வயலை விற்றுக் கொண்டு வா. பெரிய டாக்டரைக் கொண்டு பார்க்க வேண்டும்" என்று விரட்டுவாள். "அம்மா, கதிஜா" என்று அன்புடன் அழைத்து அவளது கரத்தைப் பற்றுவாள். கை மீது படும் கண் ணீர்த் துளிகளால் உணர்ச்சி பெறும் கதிஜா' "அழாதீர்கள் மாமி; எனக்கு ஒன்று மில்லை," எனத் தேற்றுவாள். இரவு நேரங் களில் எனக்கு விழிப்பு வரும் பொழுதெல்லாம் 'அம்மா' என்று அழைப்பேன். ஆயிரம் கரகரப்பு களுடன் "என்ன" என்ற தொனி வெளி வரும்.

அன்றொரு நாள் அதிகாலை யிலே. கதிஜாவின் முகம் மலர்ந் திருந்தது பக்கத்திலே ஷரீப் விளை யாடிக்கொண்டிருந்தான். அவள் கண்கள் அவனை உற்று நோக்கிக் கொண்டே யிருந்தன. திடீரென ஒரு மாறுதல்.

"மாமி"

"என்னம்மா"

"ஷரீப், உங்கள் பொறுப்பு." அவள் சிரம் சாய்ந்தது. புன் முறு வல் ஓய்ந்தது.

நல்லடக்கம் நடந்தேறியது. என் வீட்டில் கூடியிருந்த உறவினர்கள் ஏதோ 'குசு குசு' வென்று பேசிக் கொண்டிருந்தனர். வீட்டின் பின் புறத் தோட்டத்திலே எதையோ நோக்கியவண்ணம் நின்றுகொண் டிருந்தேன் நான்.

"இப்ராஹீம்"

திரும்பிப் பார்த்தேன். என் பெரிய தகப்பனார் நின்று கொண்டிருந்தார். உலக அனுபவம் நிறையப் பெற்றிருந்த அவர் பல உதாரணங்களுடன் எனக்கு ஆறுதல் கூறி வந்தார். அத்துடன் நிறுத்திவிடக் கூடாதா? என் மறுமணப் பேச்சையும் மெதுவாக நுழைத்தார். அவ்வளவுதான். 'கோ' வென்று கதறியழுது விட்டேன். இந்த உலகமே கிறு கிறுவென்று சுற்றிற்று. என்னையறியாமலே என் தலை பக்கத்திலிருந்த மரத்தில் மோதிக் கொண்டது. அத்துடன் என் மறு மணப் பேச்சும் நிறுத்தப் பட்டது. ஆறு மாதங்கள் ஓடி மறைந்தன.

நீல மேகத்தினை ஊடுருவிக் கொண்டு மண்ணுலகின் மீது தன்னொளி வீசத் தவித்து நிற்கும் வெண்ணிலா அங்கே அந்தரத்திலே! புன்னகை மாறா நன்முகம் காட்டி அன்புக்கணைதமை அள்ளி வீச ஏங்கி நிற்கும் இதயம் இங்கே புதைக் குழிக்கப்பாலே! அதோ மேகத்திரை நகருகிறது. தன்னொளி வீசுகிறது. இங்கு, எங்கே அந்தப் புன்னகையும் அன்புக்கணைகளும்? ஊஹும் முடியாது! காணவே முடியாது.

"முடியாதா? ஏன்? அதோ பார் உன் அன்புருவம், கதீஜா!"

"அதுவா! மனத்திரையிலே திட்டப்பட்ட வெறும் புகைப்படம். விரிந்து வறண்ட பாலைவனத்திலே தாகத்தால் மருண்டவன் கண்கள் காணும் கானல். அமைதியாக வீசிய சாரல் காற்றினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆற்று மணலிலே அப்பொழுதுதான் பதிக்கப்பட்ட அடிச்சுவடு. அவ்வளவுதான்"

"நன்றி, நன்றி"—ஷரீப் விழித்துக்கொண்டான். அவனை மறுபடியும் தொட்டிலிலிட்டு ஆட்டிக் கொண்டே "இப்ராஹீம்! இன்னும் நீ படுத்துக்கொள்ளவில்லையா? வானவெளியிலிருந்தால் உடம்பு கெட்டுவிடுமப்பா" என்று கூறியவாறு குறட்டை விட ஆரம்பித்தாள் என் தாயார்.

இந்த மதியின் மந்திர சக்திதான் என்னே! இதயத்தின் உச்சியிலே பனிக்கட்டிபோல் இறுகிக் கிடக்கும் துயரங்களையெல்லாம் இளக வைத்து ஆவியாக்கிவிடுகிறதே! அதனால்தான் காதலர்கள் மதியை நாடுகின்றனரோ! தாபம்! ஆ, என் மதி மயங்குகிறதே! நான் எங்கோ இழுத்துச் செல்லப்படுகிறேனே! ஆம், நானும் ஏன் இந்த மதியைப் பின்பற்றக் கூடாது? மேகத்தில் மறைகிறது. பின்னர் மிளிர்கிறது. நான்மாத்திரம் ஏன் சோகத்தில் சோம்பிக் கிடக்க வேண்டும்? நானும் மனிதன்தானே! எனக்கும் இளமை இருக்கத்தானே செய்கிறது!"

"நன்றி, நன்றி"—மறுபடியும் விழித்துக்கொண்டான் ஷரீப். "இப்ராஹீம்! இன்னும் நீ படுத்துக்கொள்ளவில்லையா! உன் பிள்ளையை நீதான் பார்த்துக்கொள். என்னால் முடியவில்லையப்பா" என்று கடிந்து கொண்டாள் என் தாயார். திடுக்கிட்டெழுந்து தொட்டிலண்டை சென்றேன். குழந்தை தூங்கும்வரை தொட்டிலை ஆட்டிக் கொண்டேயிருந்தேன்.

'பிரிவு என்பது ஒருவன் மனதைத் தாக்கும் நோய்களில் மிகவும் கொடியது. அதற்குத்தக்க மருந்து காலமும் சந்தர்ப்பமும்தான்'. ஆறு மாத இடைவெளி, ஷரீபின் பாதுகாப்பு, தாயாரின் தள்ளாத வயது, வெண்மதி எல்லாம் சேர்ந்து மறுமணத்தைப் பற்றி என்னை சிந்திக்கச் செய்தன.

மறு நாட் காலையிலே தெருவழியே சென்றுகொண்டிருந்தேன். எதிரே கையில் பையுடன் அயலூர் பிரயாணமாக என் நண்பர் ஹுஸைன் வந்து கொண்டிருந்தார். என்னைக்கண்டதும் சட்டென நின்றுவிட்டார். அருகில் சென்று பேச வாயெடுத்தேன். முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டார்.

''ஆண் அறுதலிகள் ஒதுங்கி நட மாடாதா'' என்று முணு முணுத்துக்கொண்டே அவர் வீட்டு வாசலில் நின்ற கிழவி உள்ளே நுழைந்தாள். ஒரு கணம் என் இதயமே நின்றுவிட்டது.

கமர் என் மாமாவின் மகள். இருபத்தைந்து வயது நிரம்பாத இளம் விதவை. கதிஜாவின் ஒன்று விட்ட சகோதரி. அவளைத்தான் என் மனம் அங்கீகரித்தது. எளிதில் இணங்கினளா அவள்? அதற்கும் ஆறுமாத கால அவகாசம் வேண்டியிருந்தது.

தர்காவுக்குச் சென்று தரிசனம் செய்வதில் பெண்களுக்குப் பெரும் மோகம். அதற்கு விலக்கானவளல்ல கமர். ஓரிரு மூடப் பழக்க வழக்கங்கள் என்னிடம் குடி கொண்டு விட்டது உண்மையே. ஆனல் அறியாமையால் அவுலியாக்களிடம் சென்று வரம் வேண்டுவது வெறுக்கத்தக்கது, வேறுடன் ஒழிக்கப்படவேண்டும் என்ற உறுதியுடன் வினை செய்பவன் யான். எனவே சில நாட்கள் அவளது வேண்டுகோளைப் புறக்கணித்து வந்தேன். ஆனல் என் கமரை மகிழ்விப்பதற்காகவே ஒரு நாள் நானும் அவளும் சேர்ந்து தர்காவுக்குப் போகநேர்ந்தது. அங்கு கமரைக் கண்டதும் சில பெண்கள் ஒன்று கூடி தங்களுக்குள் கண், கைகளால் ஜாடை காட்டி ஏதோபேசிக்கொண்டனர். சமயங்களில் 'கொல்'லென்று சிரித்தனர். தான் மறு மணம் செய்ததைப்பற்றி அவர்கள் ஏளனம் செய்கிருர்கள் என்பதை எப்படியோ அறிந்து கொண்டாள் கமர். அதிலிருந்து முன்போல் என்னுடன் அன்புடன் பழகுவதில்லை, சதா சிந்தனையிலேயே இருந்து வந்தாள்.

∴ ∴ ∴

அன்று வெள்ளிக் கிழமை இரவு. வெகு நேரம் கழித்து வீட்டுக்கு வந்தேன். எதிர் பாராத விதமாக படுக்கையறையிலே விழித்துக் கொண்டிருந்தாள் கமர். விளக்கு எரிந்துகொண்டிருந்ததால் அவள் முகம் மகிழ்ச்சியால் விம்மி யிருந்ததைக் கண்டேன்.

''பக்கத்துத் தெருவில் கல்யாணமாமே''—அவள் ஆரம்பித்தாள்.

''தெரியாதே, யாருக்கு?''

''ஐயூபு இராவுத்தர் மகளாம் ஸாஹிமாவாம். பதினெட்டு வயதாம். பர்த்தாவை யிழந்து பத்து மாதங்களாயிற்ரும். பக்கத்து வீட்டு பக்கீர் இராவுத்தர் மகன் பரீதுக்குக் கேட்டார்களாம். எங்கள் குடும்பத்துப் பெண்கள் மறு விவாகம் செய்து கொள்வதில்லை என்று அவள் அத்தா கூறிவிட்டாளாம்.''

''இல்லை, கமர், தர்காவுக்குப் போனல் பெண்கள் கூடிச் சிரிப்பார்களே என்றுதான் அவர்...''

''போங்கள்''

''அப்புறம்?''

''கையும் மெய்யுமாய் நேற்றுப் பிடித்து விட்டார்களாம். பரீதுக்கு ஹத்தடி கொடுத்தார்களாம். இன்று கல்யாணம் நடக்கப்போகிறதாம்.''

''நடக்கப் போகிறதென்ன? அவர்கள் தம்பதிகளான பிறகு தானே அங்கிருந்து புறப்பட்டேன்!''

ஆச்சரியமும் வெட்கமும் அவள் வதனத்திலே அடுத்தடுத்து தென்பட்டன.

''செம்படவன் கூட்டிலே அகப்பட்ட மீன் இறக்கும் வரை துள்ளிக்கொண்டே யிருக்கிறது. எதற்காக? தண்ணீரை நாடி! நீரில்லா விட்டால் மீன் வாழ முடியாதல்லவா? இது எங்ஙனம் இயற்கையோ அது போலவே ஒரு பெண் அதுவது ஆணிடம் இயற்கையாக ஏற்படும் உணர்ச்சியாகிய இச்சையைத்தீர்த்துக்கொள்ள மற்

ளொரு ஆண் அல்லது பெண்ணை முறையே அவர்கள் நாடுவதும் இயற்கைதான். இத்தகைய ஆண் பெண் உறவை மணம் என்ற பெயரால் வரம்பு கட்டி கணவன் மனைவி என்ற பெயரால் ஒழுங்கு படுத்தியிருக்கிறார்கள் சமூகத்தினர். இவர்களில் ஒருவரையொருவர் இளமையில் பிரிய நேருங்கால் மணம் போட்ட வரம்பு அழிந்து விடும். இவர்கள் வாழ்க்கையை மறு மணம் என்ற பெயரால் சீராக்குவது சமூகத்தினர் கடமை. இன்றேல் ஒன்று அவர்கள் நடத்தையில் தவறி விடுவர், அல்லது செம்படவன் கூட்டு மீனைப்போல் உள்ள உணர்ச்சியால் உருகி மடிவர். எனவேதான் இஸ்லாம் மறு மணத்தை வற்புறுத்தியுள்ளது. ஆகவே அது இயற்கை மார்க்கமாக மிளிர்வதில் ஆச்சரியமில்லையல்லவா, சமர்!"...

"சாப்பிட்டுவிட்டுப் பேசுங்களேன்," குறுக்கிட்டாள் கமர்.

'ஹூ......ம்' நீண்ட பெருமூச்சுடன் எழுந்தார் நாயுடு மாமா.

"தம்பி! உண்மையைச் சொல்கிறேன், இந்த நிலையில் உன் வாழ்க்கை வரலாறு அப்பாவுக்கு எட்டுமானால் அன்று உன் திருமணத்தின்போது அவர் அடைந்ததைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சியுறுவார் என்பதில் சந்தேகம் வேண்டாம். ஏனெனில், பொறுமையுடனும் ஒழுங்கான முறையிலும் குடும்ப வாழ்க்கை நடத்துபவனே உத்தமன் என்பது அவர் அபிப்ராயம்."

நான் சிரித்துக் கொண்டேன்.

காலை உணவருந்திவிட்டு கட்டிலில் அமர்ந்திருந்தார் ஜோஸ்யர் மாமா. நான் அவருக்காக தாம்பூலம் தயாரித்துக்கொண்டிருந்தேன்.

"இப்ராஹீம்! போர்க்களத்திலே தோல்வி கண்டு புறமுதுகிட்டோடும் பயங்கொள்ளியின் செயலுக் கொப்பாகும் துறவறம்" என்று அப்பா என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார். அவரது கூற்று உண்மை யென்பதை என் அனுபவத்திலேயே நான் அறிந்து கொண்டேன். மேலும் உன் கதையைக் கேட்டதும் 'விதவைகளின் கண்ணீரைத் துடைக்க வழி செய்யாது ஊர் சுற்றுகிறாயே, உணர்ச்சியற்றவனே!' என்று என் மனது என்னை இடித்துக் கூறுகின்றது. இதோ நான் இல்லறத்தின்பால் இழுத்துச் செல்லப்படுகின்றேன். மறு மணத்தின் இன்றியமையாத தன்மை பற்றி எங்கள் சமூகத்தினரிடையே பிரசாரம் செய்வதே இனி என் வேலையாக இருக்கும். அதுவே எனது இறுதி இலட்சியமுமாகும்."

பிரஸிடெண்ட்

வெஜிடபிள் ஹேர் ஆயில், ஸ்னோ, டால்கம் பவுடர் ஆகியவைகள் மிகச் சிறந்தவை என்பதை நான் உபயோகித்துக் கண்டு கொண்டேன்—சாவித்திரி.

தயாரிப்பாளர்கள் :

ராதோட் டிரேடிங் கம்பெனி,

சௌகார் பேட்டை, சென்னை-1.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலாயா, இந்தோனேஷியா ஆகிய இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

★

காயிதெ ஆஸம் முஹம்மது அலீ

ஜின்னாஹ்வின்

கடைசி நாட்கள்-2

(கடந்த செப்டம்பர் இதழின் தொடர்ச்சி)

ஜூலை 29-ம் நாள், டாக்டர்கள் எடுத்துப்பார்த்த எக்ஸ்ரே படங்கள், காயிதெ ஆஸமின் நுரையீரல்கள் அவர்கள் அனுமானித்ததை விட அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நிரூபித்துக் காட்டின. அன்றே குவேட்டா சிவில் ஆஸ்பத்திரியின் நர்ஸிங் சூப்பரின்டெண்ட், ஃபில்லிஸ் டுன்ஹாம் என்ற ஆங்கில மாது ஜின்னாஹ்வைக் கண்காணிக்க ஜியாரத்துக்கு வந்து சேர்ந்தார்.

ஜின்னாஹ்வின் தலையணைகளை சரிசெய்து வைக்க அம்மாது முயற்சித்தபோது, "என்னை அ படியே விட்டுவிடுங்கள்; தொட வேண்டாம்" என்று ஜின்னாஹ் கூறினார்.

"சரி, உங்களுக்கு என் உதவி தேவையில்லாவிட்டால் நான் செய்ய வேண்டியதில்லை. டாக்டரின் கட்டளைப்படி நீங்கள்......" என்று டுன்ஹாம் தொடங்கியவுடனே ஜின்னாஹ் குறுக்கிட்டு, "நான் கட்டளை யேற்பவனல்ல; கட்டளை யிடுபவன்" என்று அந்த உடல் தளர்ந்த நிலையிலும், உளம் தளராது கூறினார். பிறகு அந்த அம்மை தான் பயன் படுத்திய அந்த வார்த்தை தவறு என்று தயங்காது ஒப்புக் கொண்டார். இவ்வாறாக நான்கு நாட்கள் நழுவிச் சென்றன. ஃபில்லிஸ் டுன்ஹாம் தலைமை டாக்டர் இலாஹி பக்ஷ் அவர்களைச் சந்தித்து ஜின்னாஹ்வைத் தன் கண்காணிப்பின் கீழ் வைத்துக்கொள்வது மிகவும் சிரமமாக யிருக்கிறதென்றும் தனது இடத்தில் ஒரு ஆண் நர்ஸை நியமிப்பது நல்லதென்றும் ஆலோசனை கூறினார். இச்செய்தியை இலாஹிபக்ஷ் ஜின்னாஹ்விடம் கூறியபோது, "நான் ஆண் நர்ஸை விரும்பவில்லை. ஃபில்லிஸ் டுன்ஹாம்தான் என்னை கவனிக்க வேண்டும். அவரது சேவையையே நான் விரும்புகிறேன்" என்று காயிதெ ஆஸம் கூறிவிட்டார்.

∴ ∴ ∴

ஆகஸ்டு 9-ம் நாள், குன்றுகளுயர்ந்த ஜியாரத்திலிருந்து ஜின்னாஹ் குவெட்டாவிற்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமென்று தீர்மானித்தனர். முஹம்மது அலீ ஜின்னாஹ்வின் மெய்காப்பாளர் லெஃப்ட் மஜ்ஹர் அஹ்மத், 12-ம் தேதி ஜின்னாஹ்வின் குவெட்டா பயணத்திற்கென இரவெல்லாம் கண்விழித்து ஏற்பாடுகள் செய்து முடித்தார். எல்லாம் ஆயத்தமாக இருப்பதாகவும் புறப்பட வேண்டுமென்றும் ஜின்னாஹ்விடம் தெரிவிக்கப்பட்டபோது, "இந்த பைஜாமாவுடன் பிரயாணம் செய்ய மாட்டேன். நான் நன்றாக ஆடைகள் அணியப்படாதவரை அடியெடுத்து வைக்க மாட்டேன்" என்று கூறிவிட்டார். பிறகு புத்தம் புது ஆடைகள் பூண்டு பொலிவுடனும் புன்னகையுடனும் 'ஸ்ட்ரெட்சரி'ல் காட்சி தந்தவாறே குன்றுகளின் படிகளில் மஜ்ஹர் அஹ்மதும், மற்ற ராணுவ வீரர்களும் சூழ எடுத்துச் செல்லப்பட்டார். இந்நிகழ்ச்சியை நினைந்துருகிய லெஃப்ட். மஜ்ஹர் அஹ்மத் பின் வருமாறு கூறினார்:

"நான் காயிதெ ஆஸமை காரில் தூக்கி வைத்தபோது அவருடைய கன்னம் என்னுடைய கன்னத்துடன் ஒன்றியிருக்குமாறு அவ்வளவு நெருங்கிப் பிடித்திருந்தேன். அவரது மெல்லிய மூச்சொலியை என் காதுகள் கேட்கமுடிந்தது. காரிலுள்ள மெத்தையில் மெதுவாக அமர்த்திப் பிடித்திருந்தேன். பிறகு எங்கள் பிரயாணம் தொடங்கியது.

"நாங்கள் குவெட்டாவிலுள்ள இருப்பிடத்தை அடைந்தபோது நான் காயிதெ ஆஸமைப் படுக்கைக்கு எடுத்துச் சென்றேன். அப்போது அவர் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாரே பொழிய பேசவில்லை."

ஆகஸ்டு 16-ம் நாள் டாக்டர் இலாஹிபக்ஷ் ஜின்னாஹ்விடம் அவரது நுரையீரல்களில் நாற்பது சதவிதம் முன்னேற்றம் கண்டிருப்பதாகக் கூறினார். "அது நூறு சதவிதமாக எத்தனை நாட்களாகும்?" என்று ஜின்னாஹ் கேட்டார். இரண்டு நாட்களுக்குப் பின் அவர் தமது அரசாங்க அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கி விட்டார். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் வேலை செய்தார். சில நாட்களுக்குப் பின்னர் தமது அறையிலேயே எழுந்து சிறிது நடக்கத் துவங்கினார். தாம் கராச்சிக்குப் போக விரும்புவதாகக் கூறி, "என்னை சுமந்து செல்ல வேண்டாம். என்னால் இயன்றபோது நான் நடப்பேன். 'ஸ்ட்ரெச்சரி'ல் கொண்டு செல்லப்படுவதை நான் விரும்பவில்லை" என்றார்.

ஆண்மையும், துணிவும் கொண்ட அவரது அஞ்சா நெஞ்சத்திற்கான எடுத்துக்காட்டுகளில் இதுவே இறுதியாக நிகழ்ந்தது.

ஆகஸ்டு 29-ம் நாள் ஜின்னுஹ், டாக்டர் பக்ஷிடம், "நான் ஜியாரத்தை வந்தடைந்தபோது வாழ விரும்பினேன். அது நீங்கள் அறிந்ததே. ஆனால், இனி, நான் இருந்தாலும் இறந்தாலும் அதைப் பற்றிக்கவலையில்லை". என்று சொன்னார். இதைப் பின்னர் டாக்டர் பக்ஷ் தமது டயரியில், "நான் அவர் கண்களில் நீர் துளும்பியதைக் கண்டேன். அவருடைய இந்த உளச்சோர்வின் காரணத்தை என்னால் நிர்ணயிக்க இயலவில்லை. ஆனால் அவர் மொழிந்த அவ்வாக்கியங்கள் தமது வேலைகளை வெற்றிகரமாக முடித்து விட்டதையே சுட்டிக்காட்டின. இந்த ஐந்து வாரங்களுக்கிடையில் அவர் ஏதோ செயலாற்றியிருக்கிறார். அதுதான் அவருக்கு மன நிறைவைக் கொடுத்துள்ளது." என்று குறித்துக் கொண்டார்.

செப்டம்பர் 5-ம் நாள் மாலையின்போது ஜின்னுஹ்வுக்கு நுரையீரற் கொதிப்பு ஏற்பட்டு மேலோங்கிச் சென்றது. உடலின் வெப்ப நிலையும் இயல்பான அளவைத் தாண்டிச் சென்றது. சுய நினைவற்ற நிலையில் அவர் காஷ்மீரைக் குறித்து ஏதோ சில தாழ்ந்த குரலில் உச்சரித்தார்.

10-ம் தேதி யன்று டாக்டர் பக்ஷ், மிஸ் ஜின்னுஹ்விடம் அவரது சகோதரர் இன்னும் சில நாட்களுக்கே உயிர்வாழ முடியும் என்று நம்புவதாகக் கூறினார். மறு நாள் காலையில் ஜின்னுஹ்வின் அழகிய வைக்கிங் விமானமும், அதைப்பின் தொடர இரு விமானங்களும் வந்திறங்கின. பிரிட்டிஷ் விமானியும் மற்ற இராணுவத்தினரும் அணிவகுத்து நின்று தங்களின் கரந்தூக்கி மரியாதை செய்ய, அவ்வழியே விமானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட ஜின்னுஹ்வும் மெதுவாகத் தமது கைகளை உயர்த்தி பதில் மரியாதை செய்தார். ஜின்னுஹ்வின் இந்த விமானப் பிரயாணம் மிகவும் ரகசியமாக நடத்தப்பட்டது. பாகிஸ்தான் பிரதம மந்திரியை விமான நிலையத்திற்கு வரவேண்டாம் என்று டெலிபோன் மூலம் குவெட்டாவிலிருந்து கூறப்பட்டு விட்டது.

செப்டம்பர் 11-ம் நாள் மாலை 4-15 மணியளவில் விமானங்கள் கராச்சி வந்தடைந்தன. நிலையத்தில் செய்தியறிந்த ஒரு சிறு மக்கட் தொகுதியே காத்து நின்றது. ஜின்னுஹ்வின் விமானத்தினருகில் அவரது ராணுவ காரியதரிசியான கர்னல் ஜியோஃப்ரே நோவல்ஸ் நின்று, தமது மேற்பார்வையுடன் அருகில் நின்ற ஆம்புலன்ஸ் வண்டிக்கு ஜின்னுஹ்வைக் கொண்டு சென்றார். அவருடைய சகோதரி மிஸ் ஜின்னுவும், நர்ஸ் டுன்ஹாமும் அந்த வண்டியிலேயே ஏறிக்கொண்டனர். நகருக்கு அப்பாலுள்ள அகதிகளின் உறைவிடத்தைச் சுற்றி வண்டி ஓட்டிச் செல்லப் பட்டது. அப்போது நடந்தவற்றை அவருடைய நர்ஸ் டுன்ஹாம் விவரிக்கிறார்: "அவருடைய முகத்தில் ஈ தென்பட்டது. எனவே நான் ஒரு அட்டையினால் முகத்தில் வீசினேன். அவர் என்னை நோக்கிக் கையை உயர்த்தி ஒரு சைகை செய்தார். அதை நான் மறக்கவே முடியாது. அவர் வாய் திறந்து பேசாவிடினும், ஒளி நிறைந்த கண்களால் என்னை நோக்கினார். அந்தப் பார்வையில் நன்றி யுணர்ச்சி நிரம்பி வழிந்தது. நான் ஆற்றியுள்ள எந்த செயலுக்கும் கிடைக்காத பரிசாகவே அப்பார்வையை நான் கருதினேன்."

மக்கள் பார்வையில் படாமல், கொடியும் தாங்காமல் ஆம்புலன்ஸ் இப்போது நகரினுள் நுழைந்து சென்று அரசாங்க இல்லத்தை அடைந்தது. ஜின்னுஹ் மிகவும் வலிவிழந்து காணப்பட்டார். டாக்டர்கள் இதயத்திற்கு உயிரூட்டும்

ஒரு டானிக் கொடுத்தனர். அது உட் செல்லாது கடை வாய்ப்புற மாக வெளிவந்து விட்டது.

கிறிஸ்துவ ஆலயங்களில் எழும்பிய மணியின் ஒலிகள் ஏழு முறைகள் எதிரொலித்தன. தென்றலிலே மிதந்து வந்த அவ்வொலிகள் ஒவ்வொன்றும் ஒரு துயரமான குரல் எழுப்பி மறைவதைப் போலிருந்தது. எல்லையிலாக் கருணையுடன் இத்தொல்லுலகைப் படைத்தளிக்கும் வல்லவனும் அல்லாஹ்வின் வழி சென்று வணங்குதற்கு. விண் முட்டும் மினுராக்களில நின்று பண் தேயும் விதத்தில் பாங்கொலிகளை முஅதின்கள் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

"அல்லாஹுவே பெரியவனும்...
அவனையன்றி வணக்கத்திற்கு
உரியவர்-யாரும் கிடையாது..
அவனது திருத்தூதர்—
அண்ணல்
முஹம்மதுவாம்......
வல்லோனின் தாள் பணிய
எல்லோரும் வாருங்கள்......"

என்ற கவினுரும் சொற்றொடர்கள் காற்றிலே தவழ்ந்து வந்து இதயங்களில ஒவ்வொன்றும் இரு முறைகள் எதிரொலித்தன.

டாக்டர்கள் காயிதெ ஆஸமின் தலையை சற்று உயர்த்தி கை நரம்பில் ஒரு மருந்தை ஊசி மூலம் ஏற்றுவதற்கு முயன்றனர். ஆனல் நரம்புகளெல்லாம் உயிரிழந்து ஒடுங்கிவிட்டன. டாக்டர். பக்ஷ் ஜின்னுஹ்வின் காதுகளுக்கருகில், "உங்களுக்கு வலிவூட்டும் மருந்து ஒன்று ஊசி மூலம் செலுத்தியுள்ளோம். விரைவில் அது பயனளிக்கும்" என்று கூறினர். காயிதே ஆஸம் தலையை அசைத்து, "இல்லை, நான் பிழைக்க மாட்டேன்" என்று தணிவான குரலில் கூறினர். இதுவே அவரது வாழ்வின் இறுதிச் சொற்களாக முடிந்தன. பிறகு முப்பது நிமிடங்கள் கழிந்து, மலை குலுங்கினும் தனது மனம் குலையா மாவீரர் முஹம்மது அலீ ஜின்னுஹ் தமது இன்னுயிர் நீத்து இம்மண்ணுலகு விட்டகன்றார்!

வைகறையில் ஓதுக!

★

சூரியன் சாய்வதிலிருந்து இரவின் இருள் பரவும்வரையில் தொழுது கொள்ளுங்கள். வைகறையில் (தொழுது) குர்ஆனை ஓதுங்கள், நிச்சயமாக அதிகாலையில் குர்ஆன் ஓதுவதால் அறிவுத் தெளிவும் சாந்தியும் உண்டாகின்றன.

(குர்ஆன், 17: 78)

★

தூங்கு மூஞ்சிகளுக்கு படிப்பே வராது. தினமும் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். அதிகாலையில் எழுந்தால்தான் புதுப் புது கருத்துக்கள் தோன்றும். நமது முன்னோர்களும் அதிகாலையில் எழுந்திருப்பதால் அறிவு விருத்தியாகும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே படிப்புக்கு உத்தமமானவேளை அதிகாலைதான் தமிழ் நாட்டு அறிவாளிகள் 10 நாழிகைக்குள் எழுந்திருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். 'வைகறை' என்று தமிழில் சொன்ஞல் சூரியோதயத்திற்கு 10 நாழிகைக்குள் எழுந்திருக்க வேண்டும். என் சொந்த அனுபவத்தைக் கூறினல் எனக்குப் புதிய புதிய கருத்துக்கள் அதிகாலையில்தான் ஏற்படுகின்றன. எல்லா புத்தகங்களும் நான் எழுதியது அதிகாலையில்தான்.

கவிகள், யோகிகள், மாணவர்கள், வீட்டுப் பெண்கள், தொழிலாளர்கள், யாத்ரீகள் யாவரும் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். அறிவு வளர்ச்சிக்கு மிகப் பெரிய சாதனம் அதிகாலையில் எழுந்திருப்பதுதான்.

—வினேபா பாவே,

கேள்வி? பதில்!

[ஒவ்வொரு நாளும் ஏராளமான அன்பர்கள் கேள்விக் கடிதங்கள் வரைகின்றனர். எல்லாருடைய கேள்விகளுக்கும் ஒரே இதழில் பதில் அளிப்பது எளிதல்ல. ஒரே கேள்வியை அநேக அன்பர்கள் கேட்கின்றனர். ஆகையால், பதில் அளிக்கப்படாத கேள்விகளை நாம் மதிக்கவில்லை என அன்பர்கள் தவறாக நினைக்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். புனை பெயருடன் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிகக வியலாது—ஆசிரியர்.]

கா. முஹம்மது இஸ்மாயீல், ஐயம்பேட்டை.

உலகத்திலுள்ள முஸ்லிம் நாடுகளெல்லாம் ஒரே குடும்பம்போல் ஒற்றுமையாக இருந்திருந்தால் எகிப்தின்மீது பிரிட்டிஷ் பிரெஞ்சுத் தாக்குதல் நடந்திருக்குமா?

முஸ்லிம் நாடுகள் ஒற்றுமையாக இருந்தால் மட்டும் போதாது. மேற்கு வல்லரசுகளின் பணவுதவியோ அல்லது இராணுவ உதவியோ முஸ்லிம் நாடுகளுக்குத் தேவையில்லை என்ற நிலைமை ஏற்பட வேண்டும். ஜோர்டான், ஈராக் போன்ற முஸ்லிம் நாடுகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பணவுதவியும் இராணுவ உதவியும் பெற்று வந்ததால்தான் எகிப்தின் மீது போர் தொடுக்க பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் துணிந்தார். பாக்கிஸ்தான், ஈராக், ஈரான், துருக்கி ஆகிய இஸ்லாமியநாடுகள் பிரிட்டனுடன் சேர்ந்து "பகுதாத் உடன்படிக்கை" என்னும் இராணுவக் கூட்டு ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டிருப்பதும் ஈடனின் முட்டாள்தனமான இராணுவ நடவடிக்கைக்கு மற்றொரு காரணம்.

ஆர். ஏ. ரஸாக், சிங்கப்பூர்.

உலகிலுள்ள முஸ்லிம் நாடுகளெல்லாம் ஒன்றாக இணைந்து ஒரு தற்காப்பு உடன்படிக்கை செய்து கொண்டால், அது ஒரு மூன்றாவது வல்லரசாக விளங்குமென்றும், எந்த முஸ்லிம் நாட்டையும் தாக்குவதற்கு மற்ற வல்லரசுகள் துணியமாட்டாவென்றும் பாக்கிஸ்தான் பிரதமர் சுஹ்ரவர்தி கருதுவதாக ஒரு செய்தி வெளியாகியிருக்கின்றது. இவர் யோசனைப்படி எல்லா முஸ்லிம் நாடுகளும் ஒன்றாகச் சேர்ந்தால் உலக சமாதானம் உறுதியாக நிலைபெறுமா?

இன்றைய உலக நிலையில் உபத்திரவம்தான் விளையும். அமெரிக்கா அல்லது ரஷ்யாவைப்போல் பணம், உணவு, இயந்திரம் ஆகியவற்றில் பிறர் உதவி தேவையில்லை எனற நிலைமை இஸ்லாமிய நாடுகளுக்கு ஏற்படவேண்டும். இனறு எண்ணெய் ஒன்றில்தான் இஸ்லாமிய உலகம் பிறர் உதவியை எதிர்பார்க்காத நிலையில் இருக்கிறது. இன்றைய உலக நிலையில் முஸ்லிம் நாடுகள் மட்டும் தனிததிருப்பதென்ற யோசனை தறகொலைக்கு ஒப்பாகவே இருக்கும். இந்த யோச

னயை சுஹ்ரவர்தி வெளியிடு வதைவிட சும்மாயிருப்பதே சுகம்.

வி. எம். ஏ. முஹம்மது அலீ, இலுப்பூர்.

பிரிட்டிஷ் பிரெஞ்சு இஸ்ராயீல் படைகளை எகிப்திலிருந்து வெளியேற்றுவதற்காக அங்கு செல்லும் ஐ. நா. படையில் பாக்கிஸ்தான் துருப்புக்கள் இருக்கக்கூடாதென்று எகிப்தின் தலைவர் நாஸிர் கூறியதற்கு என்ன காரணம்?

எகிப்தின்மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்த பிரிட்டனுடன் பாக்கிஸ்தான் பகுதாத் ஒப்பந்தத்தில் சேர்ந்திருப்பதும், பகுதாத் ஒப்பந்தத்தை முன்னமேயே நாஸிர் கண்டித்து வருவதும் கவனிக்கத் தக்கது. விரோதியுடன் சேர்ந்தவன் நண்பனாக இருந்தாலும் அவனை நம்புவது அரசியல் தந்திரமாகாது. பாக்கிகிஸ்தான் துருப்புகளை எகிப்துக்குள் அனுமதிப்பதால் அபாயம் ஒன்றும் விளைந்துவிடாதாயினும் கொள்கையளவில் அதனை மறுப்பதே நியாயம். இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காகவே பாக்கிஸ்தான் துருப்புகளை நாஸிர் ஏற்கவில்லை என்று நினைப்பது சரியில்லை. சர்வதேச அரசியல் ஒழுங்குப்படி நாஸிர் செய்த காரியம் நேர்மையானதே.

எம். ஏ. ரஹ்மான், சென்னை-1.

ஈடன் ஒரு முதல்தர ராஜ தந்திரியா? அல்லது மூன்றுந்தர அரசியல் தந்திரியா?

முதல்தர ராஜதந்திரியுமல்ல. மூன்றுந்தர அரசியல் தந்திரியுமல்ல. வெறும் அரசியல்வாதி. வேண்டுமானால் கடைசித்தர ராஜ தந்திரி என்று கூறிக்கொள்ளுங்கள்.

எஸ். ரபீ அஹ்மத், கர்னூல்.

இஸ்ராயீல் (யூதர்)களைப் பற்றிக் குர்ஆனில் என்ன கூறப்பட்டுள்ளது?

நம்பிக்கைத் துரோகிகள், நபிகளைக் கொல்ல முயன்றவர்கள், நயவஞ்சகர்கள், வாக்குகளை மீறியவர்கள், ஈஸா (ஏசு)வின் தாய் மரியத்தின் ஒழுக்கத்துக்கு மாசு கற்பித்தவர்கள், கல்மனம் படைத்தவர்கள், வேத வசனங்களை மாற்றியவர்கள், வட்டி வாங்கினவர்கள், பிறர் பொருளை அநியாயமாய்க் கவர்ந்தவர்கள், பொய்யர்கள், பேராசையுடையவர்கள்—இன்னும் என்ன வேண்டும்? சுருங்கச் சொன்னால் எல்லாவிதமான தீய குணங்களுக்கும் உறைவிடமானவர்கள் இஸ்ராயீலிகள்—யூதர்கள்—என்று 1400 ஆண்டுகளுக்கு முன்பே குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. யூதர்களைப் பற்றிக் குர்ஆன் கூறுவதெல்லாம் இன்று உண்மையாகி விட்டன.

எம். அபூபக்கர், விருதுநகர்.

யூதர்கள் இவ்வுலகில் இழிவும் அவமானமும் அடைவர் என்றும், அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டனர் என்றும் குர்ஆனில் (2 : 61) காணப்படுகிறது. அவர்களின் இன்றைய நிலைமைக்கும், குர்ஆனின் கூற்றுக்கும் என்ன ஒற்றுமை இருக்கிறதென்று விளக்க முடியுமா?

சென்ற இரண்டாவது உலகப் போரின்போது யூதர்கள் ஜெர்மானிய சர்வாதிகாரி ஹிட்லரால் வேட்டையாடப் பட்டனர். அப்போது அடியும் உதையும் பட்டதால் உலக மக்கள் சிலரின் அனுதாபத்துக்கு உரியவர்களாயினர். ஆனால், இன்று அந்நிலை மாறிவிட்டது. எகிப்தின் மீது இஸ்ராயீல் அரசாங்கம் அநியாய ஆக்கிரமிப்புப் போர் தொடுத்ததால் உலகில் ஒரு சில நாடுகளில் அவர்களுக்கு இருந்த அனுதாப உணர்ச்சியும் இப்போது மறைந்து விட்டது. பெரும்பான்மையான உலகமக்களின் கண்டனத்துக்கும் வெறுப்புக்கும் யூதர்கள் ஆளாகியிருக்கின்றனர். ஏசுநாதர் போன்ற சமாதானப் பிரியர்களையும் சாந்த குண

சிலர்களையும் தீர்க்கதரிசிகளையும் கொலைபுரியத் துணிந்த யூதர்கள் உலக மக்களின் நன்மதிப்பை எப்படிப் பெறமுடியும்? அவர்கள் எங்கு சென்றாலும் அவர்களின்மீது இழிவும் பழியும் வந்து சேருமென்பது தெய்வீகத் தீர்க்க தரிசனம். இதனை உறுதிப் படுத்துவதுதான் நிகழ்கால சரித்திரம்.

டாக்டர் டி. எஸ். அப்துல் ரஹ்மான், சொக்கம்பட்டி.

மதீனாவில் ஒருவரின் கனவில் நபிகள் நாயகம் தோன்றி, உலகத்தின் இறுதி நாள் (கியாமத்) நெருங்கிவிட்டதென்றும், முஸ்லிம்கள் இஸ்லாமிய கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் கூறியதாக நம் நாட்டில் பல முஸ்லிம்கள் துண்டுப் பிரசுரம் வெளியிடுகின்றனர். மேற்படி செய்தியைப் படித்தவர்கள் ஒவ்வொருவரும் அதனை நாற்பது பேர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று கடிதம் எழுதுகின்றனர். அறிவிக்காவிட்டால் அபாயம் வருமாம். அறிவித்தால் அதிருஷ்டப் பிரைஸ் அடிக்குமாம்! இதற்கு என்ன ஆதாரம்?

இறுதி நாள் நெருங்கினாலும் நெருங்காவிட்டாலும் முஸ்லிம்கள் இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றிக்கொண்டுதான் இருக்க வேண்டும். இதற்காக சிலர் கற்பனைக் கதைகளை வெளியிட வேண்டியதில்லை. இத்தகைய கற்பனைக் கதைகளைக் கட்டி விடுவதால் தபால் இலாகாவுக்குத்தான் வருமானம் அதிகமாகுமேயொழிய, முஸ்லிம் சமூகத்துக்கு எவ்வித பயனும் விளையாது. இத்தகைய கனவும் கற்பனையும், பயமுறுத்தலும் ஆசையும் பற்றிய செய்தி பல வருடங்களுக்கு முன்பு இரண்டு தடவைகள் வெளியாகியிருக்கின்றன. இதனால் எவ்வித பயனும் விளைந்ததில்லை. மக்களின் அறியாமைதான் வெளியாயிற்று. அரியலூர் ரயில் விபத்தையெல்லாம் கண்ட பிறகும் ஆண் வன் மீது அச்சமில்லாதவர்க இந்தக்கனவுச் செய்தியைக் கேட் மனம் மாறப் போகிறார்களா!

இப்படிக் கடிதம் எழுதுகிறவ கள் நகைப்புக்குரிய செய்தியொ றையும் தெரிவிக்கின்றனர். இ செய்தியை அறிந்தவர்கள் அதை நாற்பது பேர்களுக்கு எழுதித் தெ விக்க வேண்டும். இல்லாவிட்டா அவர்களின் குழந்தைகளுக்கு ம ணம் சம்பவிக்குமென்றும், 40 பே களுக்கு இச் செய்தியை எழுதினா லாட்டரியில் பணம் கிடைக் மென்றும் சொல்லப்படுகிறது. ம தர்களைத் திருத்துவதற்குக் கைய ளப்படும் கீழ்த்தரமான முறைகளி இதுவும் ஒன்று. திருநபியவர்கள் எவ்வளவோ உயர்ந்த முறையில் அறிவுக்குப் பொருத்தமாக இஸ்லா யப் பிரசாரம் செய்து உலகத்தைத் திருத்தினார்கள். அவர்களின் வழி வந்தவர்களாகிய முஸ்லிம்களோ பகுத்தறிவுக்குச் சிறிதும் பொருந் தாத முறையில், மூட நம்பிக் கையை வளர்க்கும் வகையில், இஸ்லாமிய அடிப்படைக் கொள் கைக்கு முரணான வழியில் மக்க ளைத் திருத்த முயல்கின்றனர். அவ களுக்கும் இவர்களுக்குந்தான் எவ் வளவு வேற்றுமை!

டி. ஏ. அப்துஸ்ஸலாம், ரேளங்கி, ஆந்திரா

பாகிஸ்தான் பிரதமர் சுஹ்ர வர்த்தி எகிப்துக்கு விஜயம் செய்ய விரும்புவதாகத் தெரிவித் தற்கு எகிப்தின் தலைவர் நாஸி சுஹ்ரவர்தியை வரவேண்டா மென்று கூறிவிட்டதன் மர்ம என்ன?

மரியாதைக் குறைவாக வ வேண்டாமென்று சொல்லிவி வில்லை. தமது நாட்டுக்கு விரு தாளியாக வரும் பிரதமரை தகுத் முறையில் வரவேற்க "ஏற்ற த ணம் இப்பொழுது இல்லை; பிற வரலாம்" என்று தான நாஸி தெரிவித்திருக்கிறார்.

— 'கமால்'

Edited & Published by S. A. Shukoor, 18, Ramasamy Street, Madr
Printed by M. M. Thanigaimalai at the Sengunthal Mithran
Madras-1

களின் நெடுநாள் விருப்பத்தை நிறைவேற்ற

ரீதா

வா பத்தை கைலிகள்

கண்கவர் வர்ண கலர்களில்

இப்பொழுது கிடைக்கிறது

ரீதா ஜாவாபத்தை பேப்ரிக்,

சாங்கரம்பந்தல் (தஞ்சை ஜில்லா)